






ஸ்ரீமத்
பிரமாண்ட புராணம்
Y. Tharjini
– கே.வி. குணசேகரம் –







உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23 - ஆவது குரு மகா சன்னிதானம்
**சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக**
**பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்**

திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்
தொலைபேசி எண்; 04364 - 232021

நாள்: 7.7.2010

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

**அருள் வாழ்த்துரை**

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

.... - அப்பர் தேவாரம்.

இலங்கைத் தமிழறிஞராகிய திருவாளர் கே. வி. குணசேகரம் அவர்கள் திருவருட்பயன் சாத்திரம் குறித்தும், மாயை குறித்தும் கதைகளுடன் கூடிய விளக்கங்கள் தந்து நூல்கள் வெளியிட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அரிய தத்துவக் கருத்துக்களை கதைகள் மூலமாக விளக்கி எளிதாக்குவதும், மனதில் நிலையாகத் தங்கிட வழிவகுப்பதும் பாராட்டுக்குரிய முயற்சி. பல இடங்களில் கதைகளும், கருத்துக்களும் பொருத்தமுற அமைந்துள்ளன. நுட்பமான தத்துவங்களைப் படிப்படியாக விளக்கித் தெளிவாக்குவதில் நூலாசிரியர் திறமை மிக்கவராக விளங்குகிறார். மேலும் ஆராய்ந்து தெளிய வேண்டிய செய்திகளும் உள்ளன.

இலங்கைத் தமிழறிஞர் திருவாளர் கே.வி. குணசேகரம் அவர்களின் சைவத் தமிழ்ப்பணிகள் மேன்மேலும் சிறந்து தழைக்க வேண்டுமென நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானமாபெருங்கூத்தன் திருவடி மலர்களை சிந்தித்து வாழ்த்துகிறோம்.

இணைப்பு: திருநீற்றுச்செல்வம்.

பெறுநர்: திரு. கே. வி. குணசேகரம் அவர்கள்,
பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி,
ஸ்ரீலங்கா.

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை






# என்னுரை

**பி**ரமாண்ட புராணம் பதினென் புராணங்களில் மிகவும் முக்கியமானது. பெரும்பாலும் இப்புராணம் இந்து சமயத் தத்துவங்களில் மிகவும் முக்கியமானவற்றில் மிகவும் முக்கியமானவற்றைக் கதைகளாகக் கூறுகிறது. இப் புராணத்தை அமரர்களான கதிரேசு முத்துச்சாமி, முத்துச்சாமி இராசம்மா ஆகிய இருவர்களினதும் ஆத்மசாந்திக்காக வெளியிடுகிறேன்.

**தி**ருமதி முத்துச்சாமி இராசம்மா எனது தந்தையின் சகோதரி. கதிரேசு முத்துச்சாமி எனது தாயாரின் சகோதரர். எனது தாயார் எனக்குப் பத்து வயதாக இருக்கும் போது இறந்துவிட்டார். அதன்பின் என்னையும் எனது இரு சகோதரிகளையும் மிகவும் அன்புடன் கவனித்தவர்கள். நான் படித்து முடித்துவிட்டு வேலை தேடித்திரிந்தபோது எனது மாமனார் நீலகாமம் தமிழ் வித்தியாலயம் ஹகாவத்தையில் அதிபராகக் கடமை புரிந்தார். மாமியார் அதே பாடசாலையில் உதவி ஆசிரியராக இருந்தார். அதனால் எனக்கு அப் பாடசாலையில் ஆசிரியராகக் கடமை செய்ய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார். அதனால் நியமனம் பெற்று பின் ஆசிரியகலாசாலைக்குச் சென்று பயிற்சி பெற முடிந்தது. அதன்பின் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியானேன். அதன்பின் அதிபர் பரீட்சையில் சித்தியடைந்து கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமை ஏற்றேன்.

**அ**மரர் முத்துச்சாமி அவர்கள் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் S.S.C சித்தியடைந்த பின்பு ஆசிரிய நியமனத்தைப் பெற்றார். அப்போது நாவலர் தமிழ் வித்தியாலயம் S.S.C வகுப்புவரை இருந்தது. அப்போது அவருடன் கற்றவர் பல உயர்தரப்

பதவிகளைப் பெற்றனர். நான் அதிபராகிப் பதினைந்து வருடங்கள் அதிபராகக் கடமையாற்றிய போது பாடசாலை வளாகத்தில் ஒரு விநாயகர் ஆலயத்தை அமைத்தேன். அவ் ஆலய மண்டபத்திற்கு அமரரான முத்துச்சாமியின் பெயரைச் சூட்டி முத்துச்சாமி மண்டம் எனக் குறிப்பிட்டேன். பழைய மாணவரான அவரது பெயரைச் சூட்டியமையால் அவரோடு அப் பாடசாலையில் கற்ற பலரும் அதை விரும்பினர்.

**அ**வருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். மூத்தவர் விக்னேஸ்வரன் தரம் ஒன்று அதிபர். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் பத்து வருடகாலம் அதிபராக இருந்து மிகமிகச் சிறப்பாகச் சேவையாற்றினார். இவரது காலத்தில் அப் பாடசாலை என்றுமில்லாத எழுற்சி கண்டது. கோட்ட, மாவட்ட, அகில இலங்கை ரீதியாகப் பல பரிசுகளை மாணவர்கள் பெற்றனர். கோப்பாய் கோட்டத்தில் அதிக மாணவர்தொகையைக் கொண்ட இப் பாடசாலை கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கியது. அத்துடன் இவர் ஒரு அகில இலங்கைச் சமாதான நீதிமானாவார். பல சமூகசேவைகளில் முன்நின்று உழைக்கும் இவரைப் பாராட்டுவதோடு வாழ்த்துகிறேன். இவரது இளைய மகனான கோணேஸ்வரன் வீட்டோடு இருக்கிறார். விக்கேஸ்வரன் மங்களகௌரி என்ற பெண்ணை மணந்து இரு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். அவர்களும் நல்ல நிலையில் வாழ்கின்றனர். வெள்ளெருவைப் பிள்ளையாரின் அருளோடு வாழும் ஓர் அருமையான குடும்பத்தலைவர் விக்னேஸ்வரன்.

**இ**ந்நூலை மிகுந்த கவனத்துடன் கணினிமயப்படுத்தித் தந்த யோகநாதன் தர்ஜினி (கோப்பாய் ஆரியன் கிரியேஷன்ஸ் பிறைவட் லிமிட்டட்) அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

கே.வி. குணசேகரம்

கோட்டக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)

## 1. தேற்றுவாய்



மகாபுராணங்கள் பதினெட்டாகும். அவை முக்குணங்களை உடையனவென்று அவையே கூறுகின்றன. இப்புராணங்கள் பதினெட்டும் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளைப் பற்றியும் அவர்களின் இயல்புகள், நடவடிக்கைகள், அவர்களைச் சார்ந்தவர்களின் வரலாறுகளையும் கூறுகின்றன. படைத்தற் கடவுளான பிரம்மாவின் பெருமைகளைக் கூறும் புராணங்கள் ராஜசபுராணங்கள் எனப்படுகின்றன. விஷ்ணுவின் வரலாற்றைப் பெருமைப்படுத்திக் கூறும் புராணங்களைச் சாத்விகப் புராணங்கள் எனப்படுகின்றன. சிவபெருமானின் பெருமைகளைக் கூறும் புராணங்களைத் தாமச புராணங்கள் என்று கூறப்படுகின்றன.



இம் மூவகையான புராணங்களும் தாம் கூறும் தெய்வங்கள் தான் சிறந்தவை, உயர்ந்தவை, மகிமையானவை என்று கூறுகின்றன. இம் மூன்று புராணங்களும் பழைய வரலாறு, சமய உண்மைகள், அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் நடைபெற்ற போர்கள் பற்றி விரிவாகக் கூறுகின்றன. இதன் மூலம் இந்து சமயத்தின் தொன்மை, வரலாறு, அற்புதங்கள் என்பவற்றை எதிர்காலச் சமூகம் அறிந்து கொள்ள முடியும். அத்துடன் தீயவற்றைச் செய்பவன் வாழும் போது மகிழ்வுடனும், செல்வங்களுடனும் வாழ்ந்தாலும் தான் செய்த தீமைகளில் இருந்து தப்பமுடியாதென்ற தன்மையை விரிவாகச் சுட்டிக் காட்டுகின்றன.

பிரமாண்ட புராணம் ஒரு ராஜசிக புராணமாகும். பதினெண் புராணங்களில் இப்புராணம் பதினெட்டாவது புராணம் என்று சொல்லப்படுகிறது. இப்புராணம் பூர்வபாகம், மத்தியபாகம், உத்தரபாகம் என்ற மூன்று பிரிவுகளை உடையது. பூர்வபாகம் பிரக்ரியபாகம், அனுசங்கபாகம் என்றும், மத்யமபாகம் உபோத்காதபாகம் என்றும், உத்தரபாகம் உபசங்ஹாரபதம் என்று அழைக்கப்படுகிறது. இவை எழுபத்தொரு அத்தியாயங்களைக் கொண்டன.

புராணகாலத்தில் தர்மம் போதிக்கப்பட்டது. மன்னர்கள் நீதியாக அரசாண்டு தர்மத்தைத் தமது உயிராகப் போற்றினர் அதனால் மக்கள் மன்னராட்சியில் மகிழ்வுடன் வாழ்ந்தனர். அதுபோலக் கடவுள்களை நம்பி அவர்களின் அற்புதங்களை நம்பி தவம் செய்யும் முனிவர்களும் நீதியைப் போற்றி வாழ்ந்தனர்.



ஒரு சமயம் குருசேத்திரத்தில் பாயும் திரிஷச்வதி என்ற கங்கைக் கரையில் முனிவர்கள் ஒன்றுகூடிப் பெரியதொரு யாகத்தைச் செய்தனர். வேதவியாசரின் முக்கிய சீடரான லோமஹர்சனர், சூதமுனிவர், சனகாதி முனிவர்கள் என்று தவவலிமை மிக்க பல முனிவர்களும், அவர்களது சீடர்களும், வேதங்களை முறைப்படி கற்ற ஒழுக்கம் மிக்க வேதியர்களும், பலமுள்ள தர்மவான்களான அரசர்களும் அங்கு கூடியிருந்து யாகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.



அதே நேரம் நைமிசாரணிய வனத்தில் இருந்த முனிவர்களுக்கு வாயுபகவான் பிரமாண்ட புராணத்தைப் பற்றி உபதேசித்துக் கொண்டிருந்தார். "முனிவர்களே, புரூரவ மன்னனின் ஆட்சிக்காலத்தில் தேவர்களின் கட்டிடக் கலைஞனான விஸ்வகர்மா, தேவர்களின் குருவான பிரகஷ்பதியின் விருப்பத்திற்கிணங்க யாகசாலையைத் தங்கத்தால் செய்யப்பட்ட மாலைகளையும், தோரணங்களையும் கொண்டு மிகவும் அழகாக அலங்கரித்தான். அந்த பெறுமதிமிக்க அழகான யாகசாலையில் முனிவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் மகிமைமிக்க யாகம் ஒன்றைச் செய்தனர்.

அந்த யாகத்தின் அழகையும், பெருமைகளையும் உலகினர் மிகவும் வியந்து பேசினர். அந்தச் சிறப்புமிக்க யாகத்திற்குப் புரூரவ மன்னனும் வந்திருந்தான். யாகசாலையின் அழகு



அவனைக் கொள்ளை கொண்டது. அப்படியான பெருமையும், பெறுமதியும், அழகும் மிக்க யாகசாலை ஒன்றை அமைத்துத் தானும் அவ்வாறான ஒரு யாகத்தைச் செய்ய வேண்டும் என்று நினைத்து அந்த யாகசாலையைக் கவர முயன்றான். அதை அறிந்த முனிவர்கள் பெருங்கோபங் கொண்டு அவனைத் தாக்கினர். ஒரு முனிவர் தான் வைத்திருந்த வஜ்ராயுதத்தால் புரூரவ மன்னனைக் கொன்றுவிட்டார்.

**மு**னிவரால் புரூரவரசு கொல்லப்பட்டதும் அவனது மகன் அரசனானான். யாகம் தொடர்ந்து நடைபெற்றது. யாகம் நல்லபடி முடிந்தால் தமக்கு அழிவு ஏற்படும் என்று அஞ்சிய அரக்கர்கள் யாகத்தைக் குழப்ப முயன்றனர். அரக்கர்களின் தாக்குதலை முனிவர்களும், யாகத்திற்கென வந்திருந்த அரசர்களும் போராடி அரக்கர்களைத் துரத்தியடித்துவிட்டு யாகத்தைச் சிறந்த முறையில் நடத்திமுடித்தனர்".

**வா**யுபகவான் பிரமாண்ட புராணத்தைத் தொடர்ந்து கூறினார்.

## உ. சிருஷ்டி



**கி**ருஷ்ணன் தனது விருப்பப்படியே பூலோகத்தைப் படைத்தார். பூலோகத்தைப் படைக்கும் போது அது முழுமையாக இருண்டிருந்தது. அங்கே நீரும், காற்றும் இருக்கவில்லை. கிருஷ்ணனது வலது புறத்தில் இருந்து நாராயணன் தோன்றினார். தோன்றும் போது அவர் சத்துவகுணம் நிறைந்தவராகவே இருந்தார். அவரது கைகளில் சங்கும், சக்கரமும், கதையும், தாமரை மலரும், கௌஸ்துப மணியும், வில்லும் இருந்தன. கருநீலநிறமுடையவராக இருந்தமையால் அவரை நாராயணன் என்று அழைத்தனர். கிருஷ்ணனது வலது புறத்தில் இருந்து தோன்றிய நாராயணன் கிருஷ்ணரைப் போற்றி வணங்கிவிட்டுத் தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் சென்று அமர்ந்து கொண்டார்.



**அ**டுத்துக் கிருஷ்ணனின் இடது புறத்தில் இருந்து தாமச குணத்தோடும், மூன்று கண்களுடனும், சடாமுடியுடனும், கையில் திரிசூலத்தை ஏந்தியவராகச் சிவன் தோன்றினார்.

**கி**ருஷ்ணனது நாபியில் இருந்து தாமரை வெளிப்பட்டது. அத் தாமரையில் இருந்து ராஜச குணத்தை உடைய பிரம்மன் தோன்றினான். அவன் ஒரு முதியவராக, நரைத்தலை முடியுடன், வெண்நிற ஆடை அணிந்து, கையில் கமண்டலத்துடன், நான்கு முகங்களுடனும் அவன் காட்சியளித்தான். அவன் கிருஷ்ணனை வணங்கித் தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் சென்று அமர்ந்தான்.



**அ**ப்போது கிருஷ்ணனது மார்பில் இருந்து யமன் தோன்றினான். யமனும் கிருஷ்ணனை வணங்கிவிட்டுத் தனக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் சென்று அமர்ந்தான்.

**அ**வர்களைப் பார்த்துச் சிரித்த கிருஷ்ணனது வாயில் இருந்து வெள்ளை நிறப் பட்டுச்சேலை அணிந்து, கையில் வீணையும், புத்தகமும் கொண்டு சரஸ்வதி வெளிப்பட்டாள். அதேவேளை கிருஷ்ணனது மனதில் இருந்து பொன்நிறமுடைய மகாலட்சுமி தோன்றினாள். ராஜச குணத்தை உடைய அவள் சொர்க்கத்தில்



வசிப்போர்க்கு சுவர்க்கலட்சுமி என்றும், அரசர்களுக்கு அவள் ராஜலட்சுமி என்ற இருவேறுபட்ட தோற்றங்களுடன் அவள் தோன்றினாள். கிருஷ்ணனின் சிந்தனையில் இருந்து போர்த் தெய்வமான துர்க்கை தோன்றினாள். கிருஷ்ணனின் நாவில் இருந்து மந்திரங்களுக்குரிய தெய்வமான சாவித்திரியும், மனதில் இருந்து காதல் தெய்வமான மன்மதனும், அவனது இடப்பாகத்தில் இருந்து அவனது மனைவியான ரதிதேவியும் தோன்றினர். அதன்பின் அக்கினி, வருணன், வாயு ஆகியோரும் அம் மூவரின் மனைவிமாரான ஸ்வாகா, வருணனி, வயாவி ஆகியோரும் தோன்றினர்.

**அ**டுத்துக் கிருஷ்ணரிடமிருந்து பேரண்டம் தோன்றிது. அப்பேரண்டம் நீரால் சூழப்பட்டு, நீரில் மிதந்து கொண்டிருந்தது. அந்த நீரில் மிதந்து கொண்டிருந்த பேரண்டத்தில் இருந்து ஒரு பெரிய உருவம் தோன்றிது. அவ்வுருவமே மகாவிஷ்ணுவாகும். மகாவிஷ்ணுவின் காதுகளில் இருந்து மது, கைடபர் என்ற இரு கொடிய அரக்கர்கள் தோன்றினர். அவர்கள் இருவரும் மிகவும் பயங்கரமான தோற்றத்துடன் தோன்றினர். அவர்களுக்கு எதிரே அமர்ந்திருந்த பிரம்மாவை அவர்கள் கொல்ல முயன்றனர். அதை உணர்ந்த நாராயணன் அவர்களைக் கொன்று, அவர்களின் உடலில் இருந்து வெளிப்பட்ட கொழுப்பில் இருந்து பூமியைத் தோற்றுவித்தார். இப் புராணம் உலகில் உள்ளவையாவும் கிருஷ்ணனில் இருந்து



தோன்றியவை என்று கூறுகிறது. அதனால் இப் புராணம் ஏனைய புராணங்கள் யாவற்றிலிருந்தும் முற்றாக மாறுபட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. முக்கியமாகச் சிருஷ்டி பற்றி இப் புராணம் மாறுபாடு கொண்டிருக்கிறது.

## காலம் உருவாதல்

**கி**ருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என ஏனைய புராணங்கள் யுகங்களை நான்காக வகுத்திருக்கின்றன. அதுபோல பிரமாண்ட புராணமும் யுகங்களை நான்காக வகுத்தபோதும், இவ் நான்கையும் ஒன்று சேர்த்து மகாயுகம் என்று சொல்கிறது. முந்நூற்று அறுபது மகாயுகங்கள் ஒரு திவ்வியயுகமாகும். எழுபத்தொரு திவ்வியயுகங்கள் சேர்ந்து ஒரு மன்வந்திரம். பதின்நான்கு மன்வந்திரங்களைக் கொண்டது பிரமாவுக்கு ஒருநாள். அத்தகைய முந்நூற்று அறுபது நாட்களை உடையது பிரம்மாவுக்கு ஓர் ஆண்டு. அத்தகைய நூற்றெட்டு ஆண்டுகள் கிருஷ்ணனுக்கு ஒரு நிமிடம். இந்த ஒரு நிமிடத்தைக் கல்பம் என்று அழைக்கப்படுகிறது.



**க**ல்பங்கள் பல உள்ளன. அவை பிரம்மகல்பம், வராககல்பம், பத்மகல்பம் போன்றவையாகும். பிரம்ம கல்பத்தில் தான் மது, கைடவர்களின் கொழுப்பில் இருந்து பூமி தோன்றிது. வராக கல்பத்தில் பூமியை இரணியாக்சன் என்ற அசுரன் கவர்ந்து சென்று கடலின் அடியில் மறைத்து வைக்கத் திருமால் வராக அவதாரம் எடுத்துத் தனது கோரப் பற்களால் அசுரனைக் குத்திக் கொன்றுவிட்டு பூமியை மீட்டு வந்து நிலைநிறுத்தினார். பத்ம கல்பத்தில் பிரம்மா, திருமாலின் உந்திக்கமலத்தில் தோன்றி பூலோகம், புவர்லோகம், சுவர்லோகங்களைச் சிருஷ்டித்தார்.

## படைப்பு

**கோ**லோகத்தில் உள்ள ராசமண்டபத்தில் கிருஷ்ணன் மிகவும் மகிழ்ச்சியுடன் தங்கியிருந்தபோது, அவரின் இடதுபுறத்தில் இருந்து ராதை தோன்றினாள். இது பற்றிய வரலாறு பிரமவைவர்த்த புராணத்திலும் பத்மபுராணத்திலும் மட்டும் உண்டு. ஏனைய புராணங்களில் ராதையின் வரலாறு கூறப்படவில்லை.

**கி**ருஷ்ணரின் இடப் பாகத்திலிருந்து தோன்றிய ராதையின் மயிர்க் கால்களில் இருந்து ஆயிரக்கணக்கான கோபிகைகள் தோன்றினார்கள். கிருஷ்ணனது உடலில் உள்ள துளைகளில் இருந்து ஆயிரக்கணக்கான கோபர்கள் தோன்றினர். அத்துடன் பசுக்கள், எருதுகள், கன்றுகள், குதிரைகள், சிங்கங்கள், அன்னங்கள் யாவும் கிருஷ்ணனின் உடலில்






இருந்தே தோன்றின. இவை தோன்றியவுடன் கிருஷ்ணன் எருதைச் சிவனுக்கும், அன்னத்தைப் பிரம்மாவுக்கும், ஆண் குதிரையைத் தர்மனுக்கும், சிங்கத்தைத் துர்க்கைக்கும் வாகனங்களாகக் கொடுத்தார். அதன்பின் கிருஷ்ணனின் உடலில் இருந்து ஐந்து தேர்கள் வெளிப்பட்டன. அவற்றைக் கிருஷ்ணன் ராதைக்கு ஒரு தேரையும், நாராயணனுக்கு ஒரு தேரையும் பரிசாகக் கொடுத்துவிட்டு ஏனைய மூன்று தேர்களையும் தனது தேவைக்காக எடுத்துக் கொண்டார்.



**அ**தன்பின் கிருஷ்ணனின் உடலில் இருந்து குபேரன் தோன்றினான். குபேரனின் இடப்பாகத்தில் இருந்து அவனது மனைவியான மனோரமா தோன்றினாள். அதன்பின் கிருஷ்ணனின் உடலில் இருந்து குபேரனின் பணியாட்களாகிய குய்யர்கள்களும், சிவபெருமானின் கணங்களாகிய பூதங்களும், நாராயணனின் சேவகர்களாகிய பர்சூவதர்களும் தோன்றினர்.

**அ**தன்பின் கிருஷ்ணன் மகாலட்சுமியையும், சரஸ்வதியையும் நாராயணனுக்குத் துணைவியராகவும், சாவித்திரியைப் பிரம்மாவுக்குத் துணைவியாகவும், ரதிதேவியை மன்மதனுக்குத் துணைவியாகவும், மனோரமாவைத் துணைவியாகக் குபேரனுக்கும் கொடுத்துத் திருமணத்தை நடத்திவைத்தார். கிருஷ்ணன் சிவபெருமானுக்குத் துர்த்கையைத் திருமணம் செய்து வைக்கத் தீர்மானித்தபோது, துர்க்கை சிவபெருமானைத் திருமணம் செய்ய மறுத்தாள். அதனால் அவளைத் துறவியாக இருக்கும்படி கிருஷ்ணன் பணித்தான். பின் பல கல்பங்களுக்குப் பின் துர்க்கையைச் சிவபெருமான் மணந்தார். அதுவரை துர்க்கை கிருஷ்ணனது பாதுகாப்பிலேயே இருந்தாள்.



**அ**தன்பின் கிருஷ்ணன், பிரம்மாவுக்கு ஓர் அழகான மாலையை அணிவித்து, தவம் செய்யுமாறு கூறினான். தவத்தை உரிய முறைப்படி செய்து முடித்துவிட்டுப் படைப்புத் தொழிலை ஆரம்பிக்குமாறும் கூறினான். பிரம்மன் தவம் செய்யச் சென்றபோது கிருஷ்ணர், கோபிகைகளையும், கோபாலர்களையும் அழைத்துக் கொண்டு பிருந்தாவனத்திற்குச் சென்றார்.

## பிரமனின் படைப்பு



**த**வத்தை முறைப்படி செய்து முடித்துவிட்டுக் கிருஷ்ணரிடம் வந்த பிரம்மன் அவரை வணங்கி ஆசிபெற்றுவிட்டுப் படைப்புத் தொழிலை ஆரம்பித்தார். முதலில் உலகைப் படைத்த பிரம்மன், அடுத்ததாகச் சுமேரு மலையையும், கைலாய மலையையும், மலயம் மலையையும், இமய மலையையும், உதயசல மலையையும், அட்சாசர மலையையும், கபேலம் மலையையும், கந்தமாதனம் மலையையும் படைத்தார். அதன்பின் பல ஆறுகளையும், நகரங்களையும், கிராமங்களையும் படைத்தார். அதன்பின் லவண சமுத்திரத்தையும், இச்து சமுத்திரத்தையும், சுரா சமுத்திரத்தையும், சர்பி சமுத்திரத்தையும், ததி சமுத்திரத்தையும், துத்த சமுத்திரத்தையும் படைத்தார். அதன்பின் ஜம்புத்வீபம், சுகத்வீபம், குசத்வீபம், பிலக்சத்வீபம், சுகத்வீபம், பிலக்சத்வீபம் என்ற ஏழு நிலப் பிரிவுகளையும் படைத்தார்.

**அ**தன்பின் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், ஜனலோகம்,



தபோலோகம், சத்தியலோகம் என்னும் ஏழு லோகங்களையும் படைத்தார். அதன்பின் அதல, விதல, சுதல, தலாதள, மகாதள, பாதாள, ரசதல் போன்ற நகரங்களையும் படைத்தார். இவையனைத்தையும் பிரமாண்டம் என்று சொல்லப்படும். இவையாவும் மாய உருவங்களாகும். அத்துடன் இவை அழியும் தன்மை வாய்ந்தன. விஷ்ணுலோகமும், சிவலோகமும், கோலோகங்களும் ஒருபோதும் அழியாது நிலைத்திருக்கும்.

**பி**ரம்மனின் மனைவியான சாவித்திரியிலிருந்து நான்கு வேதங்களும் தோன்றின. அது தவிர ஆறுராகங்கள், முப்பத்தாறு ராகினிகள், கால அளவு என்பவற்றைப் பிரமன் படைத்துத் தனது மனைவியான சாவித்திரியிடம் ஒப்படைத்தார்.

**தே**வலோகச் சிற்பியான விஸ்வகர்மா, பிரம்மனது நாபியில் இருந்து தோன்றினார். அவருடன் எட்டு வசுக்கள் தோன்றின. அதன்பின் சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் என்ற நால்வர் தோன்றினர். அவர்களைப் படைத்த பிரமன், “நீங்கள், கிருஷ்ணரை நோக்கித் தவம் செய்து படைப்புத் தொழிலை ஆரம்பியுங்கள்” என்றார். தவம் செய்யச் சென்ற நால்வரும் தவம் செய்தார்களே தவிரப் படைப்புத் தொழிலில் அக்கறை காட்டவில்லை.

அதனால் பிரம்மனுக்குக் கடுஞ்சினம் உண்டானது. அக் கோபத்தினால் பிரம்மனது நெற்றியிலிருந்து தீ கிளம்பியது. அத் தீயில் இருந்து ருத்திரன் தோன்றினான்.

**அ**தன்பின் பிரம்மனது வலது செவியில் இருந்து புலஸ்தியர் தோன்றினார். இடது செவியில் இருந்து புலகல் தோன்றினார். அவர்களுடன் பிரம்மனின் வலப்பக்கத்தில் இருந்து கிரதுவும், வலது நாசித்துவாரத்தில் இருந்து அரணியும், இடது நாசித்துவாரத்தில் இருந்து அங்கிரசரும், வலது பக்கத்தில் இருந்து பிருதுவும், இடது பக்கத்தில் இருந்து தசனும், அவரது நிழலில் இருந்து காத்தமரும், உந்தியில் இருந்து பஞ்சகிகாவும், மார்பில் இருந்து வதுவும், கழுத்தில் இருந்து நாரதரும், புஜங்களில் இருந்து மரீசியும், திரும்பவும் கழுத்தில் இருந்து அபத்தரதமனும், நாவில் இருந்து வசிட்டரும், கீழ் உதட்டில் இருந்து பிரதேசரும், இடது அக்குளில் இருந்து கம்சரும், வலது அக்குளில் இருந்து யதியும் தோன்றினர்.



**அ**வர்கள் எல்லோரையும் அழைத்து மக்களை உற்பத்தி செய்து பெருக்குமாறு பிரமன் கூறினான். நாரதரைத் தவிர ஏனையோர் பிரம்மன் கூறியதை ஏற்றுக் கொண்டனர். ஆனால் நாரதர் அதை ஏற்காது தான் தவம் செய்யப்போவதாகக் கூறினார்.

**அ**தனால் பெருங்கோபங்கொண்ட பிரம்மன், “நாரதா, எல்லோரும் ஏற்றுக் கொண்ட விடயத்தை நீ ஏற்காததால், நீ தீய துர்க்குணங்கள் நிரம்பிய கந்தர்வனாகப் பிறப்பாய். அப்போது நீ எந்தப் பிரம்மத்தை அடையத் தவம் செய்ய நினைத்தாயோ, அப் பிரம்மத்தைப் பற்றிய ஞானம் இல்லாதவனாக, ஒரு வேலைக்காரிக்கு மகனாகப் பிறந்து அலைவாய்” என்று சபித்தார். அதைக் கேட்டுக் கோபங்கொண்ட நாரதர் பிரம்மனைப் பார்த்து, “என்னைச் சபித்த உனக்குப் பூவுலகில் பூசைகள், ஆராதனைகள் நடைபெறாது. உனக்காக யாரும் கோவிலையும் கட்டமாட்டார்கள்” என்று சபித்தார்.



**பி**ரமனின் கட்டளையை ஏற்ற நாரதரைத் தவிர்த்த ஏனையோர் மகிழ்வுடன் படைப்பில் இறங்கினர். மரீசிக்குக் காசியபரும், அத்திரிக்குச் சந்திரனும், பிரதேசருக்குக் கௌதரும், புலஸ்தியருக்கு அகத்தியரும் பிறந்தனர்.

**ஏ**னைய புராணங்கள் கூறுபவற்றையே பிரமாண்ட புராணமும் கூறுகிறது. எனினும் ஏனைய புராணங்களைவிடச் சிருஷ்டிபற்றி இப்புராணம் சற்றுவித்தியாசமாகக் கூறுகிறது. இப்புராணத்தில் பிரம்மா பகலில் சிருஷ்டித்




தொழிலைச் செய்கிறார். இரவில் பிரளயம் ஏற்படுகிறது. பின் இரவு முடிந்து பகல் தோன்ற மீண்டும் சிருஷ்டி நடைபெறுகிறது.

**மு**ம்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, சிவபெருமான் ஆகியோரின் குணங்கள் பற்றி இப்புராணமும் கூறுகிறது. அதுபோல கல்பங்கள் பற்றியும் இப்புராணம் கூறுகிறது. பிரமாண்ட புராண காலத்தில் வராகஹல்பம் என்றும், விஷ்ணு வராக அவதாரம் எடுத்துப் பூமாதேவியை உரிய இடத்தில் நிலைநிறுத்தியதால் அதை வராககல்பம் என்று கூறுகிறது. அதன் காரணமாகத்தான் அக் கல்பத்திற்கு வராககல்பம் என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுகிறது. இதிலும் மும்மூர்த்திகளின் முக்குணங்கள் பற்றிப் பேசப்படுகிறது. அத்துடன் பிரம்மனும் நாராயணனே என்றும் கூறுகிறது. அது அதை இவ்வாறு கூறுகிறது. நர என்றால் நீர் என்றும், அயன என்றால் படுத்திருந்து ஓய்வு பெறும் இடம் என்றும் கூறுகிறது.

**பி**ரம்மா ஏழு கடல்களையும், ஏழு நிலப்பரப்புக்களையும் தோற்றுவித்த பின் தனது உடலில் இருந்து தேவர்களையும், அசுரர்களையும், யக்சர்களையும் வேறு பலதரப்பட்டவர்களையும் தோற்றுவித்ததாகவும் இப்புராணம் கூறுகிறது. அத்துடன் பிரம்மாவினது மனோசக்தியில் இருந்து பிருகு முதலிய ஒன்பது ரிஷிகள் தோன்றியதாகவும் அவ்வாறு அவர்களைத் தோற்றுவித்த பின்பு அவர் தனது மனக்குழப்பத்திற்கு ஆளாணார் என்றும் இப்புராணம் கூறுகிறது. அத்துடன் அவர் தன்னில் இருந்தே முதலாவது ஆணையும், முதலாவது பெண்ணையும் தோற்றுவித்து ஆணை மறு என்றும், பெண்ணை சதரூபை என்றும் பெயரிட்டார். அதன்பின் இவர்களின் பிள்ளைகளாகப் பிரியவரதனும், உத்தானபாதனும் என்று இரு ஆண்களும் பிரகதி, ஆக்குதி என்ற இரு பிள்ளைகளும் பிறந்தனரென்றும் இப்புராணம் கூறுகிறது. பிரகதி தட்சப்பிரஜாபதியை மணந்தாள். இவ்வாறு சிருஷ்டி வளர்ச்சியடைந்தது.



## ૩. நான்கு யுகங்கள்



**ச**க்தியுகம் (கிருதயுகம்) திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என யுகங்கள் நான்காகும். இந்நான்கு யுகங்களையும் சேர்த்து மகாயுகம் என்பர்.

**க**ட்டைவிரலில் இருந்து சிறுவிரல் வரை உள்ள நீளம் ஒரு

விதஸ்தியாகும். இதன் நீளம் பன்னிரண்டு அங்குலத்திற்குச் சமமானதாகும். இருபது அங்குலிகள் ஒருரத்னியாகும். இருபது ரத்தினிகள் ஒரு தனுவாகும். எண்ணாயிரம் தனுக்கள் ஒரு யோசனையாகும்.

**ச**மூகம் நான்கு வர்ணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வர்ணத்தினர்களின் இயல்புகளுக்கேற்பத் தொழில்களும் நான்காக இருந்தன. ஆரம்பத்தில் மக்கள் உணவுக்காகப் பிரம்மாவைத் துதிசெய்ய, அவர் தானியங்களையும், மிருகங்களையும் தோற்றுவித்தார். பிருதி மன்னன் பூமியில் இருந்து பாலைக் கறந்தெடுத்தான். அதனால் பூமிக்குப் பிரகிருதி என்ற பெயர் உண்டானது. வருணாச்சிரமதர்மத்தின்படி நான்கு வர்ணத்தினரைப் பிரம்மா உருவாக்கி அவர்கள் நால்வகையான கோட்பாடுகளைக் கைக்கொள்ள வேண்டும் என்று கூறி அதை பிரம்மச்சாரியம், கிரகஸ்தம், வானப்பிரத்தம், சன்னியாசம் எனப் பிரித்து, இவற்றைப் பின்பற்ற வேண்டும் என்றும் பிரம்மா கட்டளையிட்டார்.

## 4. யோகமும் யோக சாதனையும்



**யா**கங்கள், கிரியைகள், சடங்குகள் மூலம் பிரம்மனை அறியமுடியாது. அவரை அறியவேண்டுமானால் யோகசாதனையின் மூலமே அறிய வேண்டும். யோகத்தின் மூலம் பற்றுக்களை அறுத்தோர் பிறப்பையும், இறப்பையும் நீக்கி முத்தியடைவர். ஜீவாத்மா பரமாத்மாவுடன் சங்கமமாவதே யோகமாகும். யோகநிலையை அடைய ஐந்து வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**பிரணாயாமம்** - பிராணாயாமத்தின் மூலம் உடலின் மாசு நீங்கி அது புனிதமடைகிறது. பிராணாயாமத்தை முறைப்படி செய்தால் பல நன்மைகளைப் பெறலாம். அவையாவன. பாவங்கள் தொலையும், மனம் சமநிலைப்படும், மனக்குழப்பங்கள் நீங்கி மனம் ஒருநிலைப்பட்டு இறைவனின் தன்மைகளைப் புரிந்து கொள்ளும். திமிர், அகம்பாவம், போட்டி, பொறாமை போன்ற தீய குணங்கள் அகன்று மனம் நிலையாமையை உணர்ந்து கடவுளை நாடும் நிலை ஏற்படும். உலகைப் புரிந்து கொண்டு எதிர்காலத்தில் நடப்பவற்றை உணர்ந்து மெய்ப்பொருளில் நாட்டம் ஏற்படும். மனம் தெளிவடைந்து ஒளிமயமாகும். மனமும் புலன்களும் அடங்கிச் செயலற்று இறைவனின் பாதாரவிந்தங்களைச் சென்றடையும். பிரணாயாமம் செய்யும் முறைகளைக் குருவிடம் அறிந்து செய்வதுதான் பலனைத் தரவல்லது.



**பிரத்தியாகாரம்** - உலகின் மீதுள்ள சகல பற்றுக்களையும் மனம் நீக்கி, ஐந்தடக்கும் ஆமையின் நிலை உருவாகும்.

**தியானம்** - பற்றற்றுப் பொருத்தமான இடத்தில் பொருத்தமான ஆசனத்தில் அமர்ந்து இறைவனைத் தவிர வேறு எவற்றாலும் நிம்மதியோ, மகிழ்ச்சியோ வராது என்று உறுதியாக நம்பி இறைவனைத் தியானித்துக் கொண்டிருத்தல் அவ்வேளையில் அருகில் நடப்பதுகூடத் தெரியாத நிலை ஏற்படும்.

**தாரணம்** - நினைவுகளை முற்றாக அகற்றி சமாதி நிலையில் இருத்தல். மேற்குறிப்பிட்ட ஐந்தையும் முறைப்படி செய்யாவிட்டால் பெரும் தீமைதான் வந்துசேரும்.

## 5. கெட்ட சகுணங்கள்



**ப**ஞ்சாங்கங்கள் நல்ல சகுணங்கள் எவை, கெட்ட சகுணங்கள் எவை, காலையில் எழுந்தவுடன் காணக்கூடிய நல்ல காட்சிகள் எவை, கெட்டகாட்சிகள் எவையென்றும், பிரயாணத்தின் போது ஏற்படும் நல்ல, கெட்ட சகுணங்கள் பற்றியும் விரிவாகக் கூறுகின்றன. இவற்றைப் பஞ்சாங்கங்கள் புராணங்களில் இருந்தே பெற்றுக் கொண்டன. ஏனைய புராணங்களைவிடப் பிரமாண்ட புராணம் கெட்ட சகுணங்கள் பற்றி மிகவும் விரிவாகக் கூறுகிறது. கனவில் துருவ நட்சத்திரத்தைக் கண்டவன் ஓராண்டிலும், சூரியனின் கிரணங்களைக் கனவில் கண்டவன் பதினாறு மாதங்களிலும், பொன், வெள்ளி என்பன வாந்தியெடுப்பதைக் கண்டால் பத்து மாதங்களிலும், அழுக்குடைய கால்களைக் கண்டால் சில மாதங்களிலும், ஒரு காகம் கரைவதை, புறா ஒருவரின் தலையில் விழுவதைக் கனவில் கண்டால் ஆறு மாதங்களிலும் அவர்கள் மரணமடைவார்கள். ஒருவரைக் காகங்கள் சூழ்ந்து நிற்பதாகக் கனவு கண்டாலோ அல்லது சாம்பலைக் குவித்திருப்பதாகக் கனவு கண்டாலோ ஐந்து மாதங்களில் இறப்பர். தெற்கில் வானவில் தோன்றியதையும், அதுபோலத் தெற்கில் மின்னல் தோன்றுவதைப் போலக் கனவு கண்டால் மூன்று மாதங்களில் கனவு காண்பவர் இறப்பர். தனது நிழல் பிரதி விம்பமில்லாது அல்லது தலையில்லாது கனவில் வந்தால் கனவு காண்பவர் ஒரு மாதத்தில் மரணமடைவர். ஒருவரிடம் பிணவாடை வீசினால் பதினைந்து நாட்களில் அவர் உயிர்துறப்பார்.

**ஒ**ருவர் பயணிக்கும் தேரைச் குரங்கு அல்லது கரடி தெற்குத்திசை நோக்கி இழுத்துச் சென்றால் கனவு கண்டவர் சில நாட்களில் மரணமடைவார். ஒருவர் செவிடானவர் போல,

கறுப்புடையுடன் ஒருவர் இருப்பது போலக் கனவு கண்டால் கனவு கண்டவர் விரைவில் மரணமடைவார். அதுபோல ஒருவர் கழுத்தளவு வரை நிலத்தில் புதைக்கப்பட்டிருப்பதைப் போலக் கனவு கண்டாலும் அவர் சில நாட்களில் இறந்துவிடுவார். அதுபோல ஒருவரைக் கல்லால் அடிப்பதுபோலக் கனவு வந்தாலும் அவர் சில நாட்களில் இறந்துபோவார். பாம்புகள், சாம்பல், நிலக்கரி, முடி காய்ந்து போன ஆறு ஆகியவற்றைக் கனவில் காண்பவர் பத்து நாட்களுக்குள் இறந்துபோவார்.



**அ**திகாலையில் ஓநாய் ஊளையிடுவதைக் கனவில் காண்பவர் சில நாட்களில் மரணமடைந்துவிடுவார். விளக்குத்திரி அணையும் போது வெளிப்படும் சுடரினது நாற்றத்தை அறிந்து கொள்ளாதவன் மரணவாசலில் இருப்பான். கண்களில் தொடர்ந்து கண்ணீர் வடிதல், காது நீளுதல், மூக்கு வளைந்து தோன்றுதல் ஆகியன விரைவில் மரணம் உண்டாகப்போகுதென்பதைக் குறிப்பதாகும். கருநாக்கு, சாம்பல், முகம், சிவந்த கன்னங்கள் இவை மரணம் வருவதை முற்கூட்டியே தெரிவிக்கும் அறிகுறிகளாகும். சிரித்துக் கொண்டு தென்திசையாகச் செல்லல் என்பது மரணம் நெருங்கிவிட்டதற்கான அறிகுறியைக் குறிக்கும் கனவாகும். ஆழமான பள்ளத்தில் விழுந்து தப்பமுடியாது தவித்தல், கொலை செய்யப்படுவதாக, தீயில் விழுவதாகக் காணும் கனவுகள் மரணம் சமீபத்தில் வந்துவிட்டது என்பதை உணர்த்தும் கனவுகளாகும்.

**இ**வ்வாறான கனவுகள் வந்தால் கிழக்கு அல்லது தெற்கு நோக்கி அமர்ந்து சிவனைப் பிரார்த்தித்து ஓம் என்ற பிரணவமந்திரந்துடன் சேர்ந்து ஐந்தெழுத்தை ஓதுதல் வேண்டும். தொடர்ந்து நூறாண்டுகள் அஸ்வமேத யாகம் செய்த பலனை இம் மந்திரம் தரும்.

## ௬. கற்பங்கள்




**பி**ரம்மாவின் ஒருநாள் ஒரு கற்பமாகும். ஓராயிரம் கற்பங்கள் பிரம்மாவுக்கு ஓர் ஆண்டாகும். எண்ணாயிரம் கற்பங்கள் ஒரு பிரம்ம யுகமாகும். ஓராயிரம் யுகங்கள் ஒரு சவனமாகும். இரண்டாயிரம் சவனங்கள் ஒரு திரிவிரதமாகும். பிரம்மாவின் ஆயுட்காலம் திரிவிரதாவாகம். தற்போது நடந்து கொண்டிருப்பது வராக









கல்பமாகும். இதுவரை முப்பத்துநான்கு கல்பங்கள் கழிந்துள்ளன. அவை பாலகல்பம், புவனகல்பம், சுபகல்பம், பாவகல்பம், ரம்பாகல்பம், ரிது கல்பம், கிரதுகல்பம், வன்ஹிகல்பம், ஹவ்யவாஹன கல்பம், சாவித்ரகல்பம், புவகல்பம், உஷிககல்பம், குஷிககல்பம், சுந்தரகல்பம், ரிஷபகல்பம், விடயகல்பம், நிஷதகல்பம், பஞ்சமகல்பம், மோக்வாசககல்பம், சிந்தககல்பம், ஆகுதிகல்பம், விஜ்நகுகல்பம், மனகல்பம், பவகல்பம், விரிஹத்கல்பம், சிவேதலோஹிதகல்பம், ரக்தகல்பம், பிரவசகல்பம், சீதகல்பம், விச்வரூபகல்பம், விச்வரூபகல்பம், வராககல்பம் என்பனவாகும்.

## 7. வேதவியாசர்

**ஒ**ரு கல்பத்தில் பதின்நான்கு மன்வந்தரங்கள் உண்டு. வைவஸ்வத மன்வந்தரம் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சிவபெருமான், பிரம்மாவுக்கு வேதவியாசராக முன்பு



வாழ்ந்தோரது விபரங்களை எடுத்துச் சொன்னார்.

“**மா**முனிவரே, எம் பெருமான் வியாச ரூபியாகி வேதங்களைப் பிரித்தருளுகின்றான். எந்தெந்த யுகத்தில் யார் யார் வியாசர்களானார்களோ, அவர்களையும் வேதத்தின் சாகைகளைப் பற்றிய சிறப்புக்களையும் அடியேனுக்குச் சொல்லல் வேண்டும்” என்றார் மைத்ரேயர்.

“**மை**த்ரேயரே, மக்களுக்கு உற்சாகம், சக்தி என்பன குறைந்திருக்கும் காலங்களில் அவர்களின் நலத்திற்காக ஒன்றாக இருந்த வேதங்களை பல பிரிவுகளாக்கி அருள் செய்கிறார். அவர் அவ்வாறு செய்தருளும் போது வேதவியாசர் என்ற திருமேனிகள் எடுத்துத்தான் செய்கிறார்.

**இ**ந்த வைவஸ்வத மனுவந்தரத்திலே இருபத்தெட்டு முறை வேதம் பிரிக்கப்பட்டது. அதனால் இருபத்தெட்டு வேத வியாசர்கள் தோன்றியிருக்கிறார்கள். முதலாவது துவாபர யுகத்தில் பிரமாவே வேதவியாசராகத் தோன்றினார். இரண்டாவது யுகத்தில் வைவஸ்வதமனு வியாசரானார். மூன்றாவது யுகத்தில் சுக்கிரரும், நான்காவதில் பிரகஸ்பதியும், ஐந்தில் சூரியனும், ஆறில் யமனும், ஏழில் தேவேந்திரனும், எட்டாவதில் சாரசுவதரும், பத்தாவதில் திரிதாமாவும், பதினொராவதில் திருவிருஷாவும், பன்னிரண்டில் பரத்வாச முனிவரும்,

பதின்மூன்றாவதில் அந்தரிசரும், பதின்நான்கில் தருமிவும், பதினைந்தில் திரையாருணியும், பதினாறாவதில் தனஞ்செய்தும், பதினேழில் இரு தஞ்சயதும், பதினெட்டில் சஞ்சயனும், வேதவியாசர்களாயினர். அதன் பின் முறையே பரத்வாயர், கௌதமர், கரியாத்துமா வேணன், திருணபிந்து, வால்மீகி ஆகியோர் வேதவியாசரானார்கள்.

**இ**ருபத்தைந்தாவது துவாபாரத்தில் எனது தந்தையான சக்திமா முனிவரும், இருபத்தாறில் நானும் இருபத்தேழாவதில் யாது கர்ணர் என்பாரும் வேதவியாசரானோம். இருபத்தெட்டாவதாக எனது மகன் சிருஷ்ணத்துவை பாயனன் வேத வியாசரானான். இனிவரும் துவாபரயுகத்தில் அசுவத்தாமா வேதவியாசராவான்.



**ச**கல பூதங்களிலும் ஸ்ரீவாசு தேவன் எழுந்தருளியிருந்தாலும், பிரமம், சூத்திர, இந்திராதி மூர்த்திகளை அனுஷ்டித்திருப்பதால் வேறு வேறாகக் கருதப்படுகிறான். அவன் இருக்கு, யசுர், சாமவேத ரூபியாகவும், சகல ஆத்மாக்களிலும் அந்தராத்மாவாகவும் இருக்கின்றான். அவனே வேதங்களைப் போதிக்கிறான். அவனே வேத சாகைகளைப் பிரிக்கும் வியாசதிஸ்வரூபியாகிறான்”.

## வேதசாகைகளின் பேதங்கள்

“**மை**த்ரேயரே, முதலில் பிரமாவால் ஆக்கப்பட்ட வேதம், நான்கு பாதங்களையும், அனேக ஆயிரம் கிளைகளை உடையதாகவும் இருந்தது. அதிலிருந்து பத்து விதமான உறுப்புக்கள் உருவாகின. இருபத்தெட்டாவது யுகத்தில் எனது மகனான வியாசர் வேதங்களை நான்காக வகுத்தார். இந்தப் பூவுலகில் மகா நாராயணனைத் தவிர மற்றொருவன் மகாபரதம் இயற்ற வல்லவனாகான். அதனால் இந்த வியாசர் மகா நாராயணனின் அம்சம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**பி**ரமதேவனால் வியாசபகவானுக்கு வேதங்களைப் பிரிக்கும்படி கட்டளையிடப்பட்டது.



வேதங்களை அவர் பிரித்த பின்பு சரியான சீடனைத் தெரிவு செய்தார். இருக்கு வேதத்திற்கு பைல மகா முனிவரையும், யசுர் வேதத்திற்கு வைசம்பான மகா முனிவரையும், சாம வேதத்திற்கு யைமினி முனிவரையும், அதர் வண வேதத்திற்கு சுமந்து முனிவரையும், இதிகாச புராணங்களுக்கு சூதரையும் நியமித்தார்.

**அ**கண்டமான வேதத்தில் இருந்து இருக்கு வேதத்தின் பகுதிகளையெல்லாம் பிரித்தெடுத்து ஒன்றாக்கி, அதை இருக்குவேதம் என்று பெயரிட்டார். அது போல அகன்டமான

வேதத்தில் இருந்து யசுர்வேதப் பகுதிகளைப் பிரித்தெடுத்து ஒன்று சேர்த்து யசுர்வண வேதப்பகுதிகளைத் தனித்தனியாகப் பிரித்தெடுத்து சாமவேதம் என்றும், அதர்வண வேதம் என்றும் பெயரிட்டார். முன்பு ஒன்றாக இருந்த வேதங்களை நான்காக வகுத்து, பின் அதை இரண்டு சம்கிதைகளாக்கி ஒன்றை இந்திரப் பிரமாதி என்பவருக்கும் மற்றதை பாஷ்களர் என்பவருக்கும் கொடுத்தார்.

**பா**ஷ்கள முனிவர் தான் பெற்ற சங்கிதையை நான்காக வகுத்து, போத்தியர், அக்கினி மாடகர், யாக்கிய வல்லியர், பராசரர் ஆகியோருக்குப் போதித்தார். இந்திரப் பிரதி என்ற முனிவர் தனது மகனான மாண்டுகேயர் என்பவருக்குப் போதித்தார். இவ்வாறு சீஷ்ய பிரசீஷ்யப் பரம்பரையில் வளர்ந்தது. சாகல்யர் என்பவர் அதை ஐந்தாகப் பிரித்து முக்கலன், கோமுகன், வாச்சிகன், சாலீயன், சைகிரன் என்ற தனது மாணவர்களுக்குக் கொடுத்தார். சம்பூரணா என்பவர் அந்தச் சம்கிதையை மூன்றாகப் பிரித்து நிருத்தம் என்ற வேதாங்கம் ஒன்றையும் சேர்த்துத் தனது மாணவர்களுக்குக் கொடுத்தார்.



**பா**ஷ்கலி என்பவர், இந்திர பிரமிதி, சாகையை மூன்றாக்கி தனது மாணவர்களுக்கு வழங்கினார். இவ்வாறு இருக்கு வேதத்தின் சாகைகளும் அனுசாகைகளும் பிரதிசாகைகளும் உண்டாயின'' என்றார் பராசரர்.

## 8. பிரம்மாவின் படைப்பு

**பி**ரமாண்ட புராணம் பிரம்மாவைப் பற்றி உயர்வாகக் கூறுகிறது. பிரம்மத்தில் இருந்து நாராயணன் தோன்றி பாற்கடலில் பள்ளிகொண்டிருந்தார். அவரது நாபியில் இருந்து பிரம்மா தோன்றினார். அவ்வாறு நாராயணனின் நாபியில் இருந்து தோன்றிய பிரம்மா நாராயணனைக் பார்த்து, "நீ யார்?," என்று கேட்க நாராயணன், "உலகையும், உலகில் உள்ள அனைத்துப் பொருட்களையும் தோற்றுவித்தவன் நான் தான்" என்று கூறியுள்ளார். அதைப் பிரம்மா மறுத்து, "நீயல்ல நான்தான் உலகைப் படைப்பவன்" என்றார்.



**பி**ரம்மாவின் சொற்களைக் கேட்ட நாராயணன் பெருவியப்படைந்து, பிரம்மனின் வாய்வழியாக உள்ளே நுளைந்து சென்று பார்த்தபோது அனைத்து உலகங்களையும் அவரது

உடலுக்குள்க் கண்டார். பின்பு உள்ளே நுளைந்த வழியால் வெளியே வந்து, "எல்லா உலகங்களையும் உனது உடலுக்குள்க் கண்டேன். ஆனால் ஆதியையும் அந்தத்தையும் எங்குதேடியும் நான் காணவில்லை. எனது உடலுட் சென்றுபார் யாவும் உனக்கு விளங்கும்" என்று கூறி நாராயணன் தனது வாயைத் திறக்கப் பிரம்மா நாராயணனின் வாய்வழியாக நாராயணனின் உடலுள்ச் சென்றார். அங்கு உயகங்கள் அனைத்தும் பிரம்மனால் படைக்கப்பட்ட அனைத்தும் ஆதியும் அந்தமும் தென்பட்டன. அவற்றைக் கண்டு அதிசயித்த பிரம்மா வெளியேவர முயற்சித்தபோது நாராணன் தனது வாயை மூடிவிட்டார். அதனால் பிரம்மாவால் வெளியே வரமுடியவில்லை. அத்துடன் நாராயணன் யோகத்துயில் கொண்டுவிட்டார். நாராயணனின் உடலுள் இருந்து வெளியேற முடியாது பெரும் துன்பப்பட்ட பிரம்மா கடைசியாகத் தனது உடலைச் சிறிதாகச் சுருக்கி நாராயணனின் நாபிவழியாக வெளியே வந்தார்.


**பி**ரம்மா நாராயணனின் நாபி வழியாக வெளியே வந்தபோது அவருக்குச் சிவபெருமான் காட்சி கொடுத்தார். அப்போது காற்றின் அசைவினால் பிரம்மன் வீற்றிருந்த தாமரை அசைந்தது. அதைக்கண்ட நாராயணன், "பிரம்மதேவரே, நீர் பூசிக்கத்தக்கவர். அதனால் தாமரையில் இருந்து இறங்கும்" என்றார்.



**பி**ரம்மா, நாராயணனை வணங்கினார். பின், "பகவானே, யாவற்றையும் புரிந்து கொண்டேன். என்னைக் காத்தருள்க" என்றார். அதைக்கேட்ட நாராணன், "எனது நாபியில் இருந்து நீர் வெளிவந்தயைமால் நான் உம்மை எனது மகனாக ஏற்றுக் கொள்கிறேன். நீர் தாமரையில் இருந்து தோன்றியதால் இன்றுமுதல் 'பத்மயோனி' எனப்படுவீர். அதன்பின் பிரம்மாவுக்கு உண்மை புரிந்தமையால் அவர் அமைதியடைந்தார்.

**த**ன்முன் திரிசூலத்துடன் நின்ற சிவபெருமானை யாரென்று அறியாத பிரம்மா நாராயணனைப் பார்த்து, "பகவானே, என்முன் திரிசூலத்துடன் நிற்பவர் யார்?" என்று கேட்டார்.

"**பி**ரம்மதேவரே, உம்முன் நிற்பவர் சிவபெருமான். அவர் அழிக்கும் கடவுளாவார்" என்று நாராயணன் சொல்லப் பிரம்மா அவர் தனக்கு நிகரானவரல்ல நான் படைக்கும் கடவுள் என்று நினைத்தார். அதை உணர்ந்த நாராயணன் சொன்னார், "பிரம்மதேவரே, சிவபெருமான் அழிக்கும் கடவுள். மிக்க பலம் கொண்டவர். அத்துடன் எம்மிருவரையும் விடப் பலங்கொண்டவர். அத்துடன் இருவரையும் வெல்லக்கூடியவர். அதனால் அவருடன் முரண்படாது அவரை உம்மைவிட மேலானவராக ஏற்றுக்கொள்ளும்" என்றார். அதைக்கேட்ட பிரம்மா தனது கோபத்தை அடக்கிச் சாந்தியடைந்தார்.



## ௯. உருத்திரன்


**பி**ரம்மா தன்னைப் போன்ற ஒரு சக்திமிக்க மகன் தனக்குப் பிறக்க வேண்டும் என்று விரும்பினார். அப்போது அவரின் மடியின் மீது நீலநிறமும், சிவப்பு நிறமும் கலந்த ஒரு நிறத்தில் ஒரு பாலகன் தோன்றி அழத்தொடங்கினான். பரபரப்படைந்த பிரம்மன் அதைத் தூக்கி அதை அழாமற் செய்வதற்கு முயற்சி செய்தபோது அது தொடர்ந்து அழுதுகொண்டிருந்தது. பின் தனக்கு ஒரு பெயர் வைக்குமாறு கூறிவிட்டுத் திரும்பவும் அழ ஆரம்பித்தது. பிரம்மா அது தோன்றிய நேரம் தொடக்கம் கத்திப் பெரிதாக அழுததால் அதற்கு 'ருத்திரன்' எனப் பெயர்வைத்தார்.

**பெ**யர்வைத்த பின்பும் அக் குழந்தை அழுகையை நிறுத்தாது தொடர்ந்து அழுதுகொண்டிருந்தது. அதனால் பிரம்மா அதைச் சாந்தப்படுத்த முயன்றபோது அக் குழந்தை தனக்கு இன்னொரு பெயர் வைக்குமாறு கேட்டது. அதனால் அந்தக் குழந்தைக்குப் பிரம்மா, ருத்திரன், பாவன், சிவன், பசுபதி, ஈசன், பீமன், உக்கிரன், மகாதேவன் என்ற எட்டுப் பெயர்களை வைத்தார். அதன்பின் அக் குழந்தை பிரம்மனைப் பார்த்து எனக்கோர் இருப்பிடம் தாருங்கள் என்று கேட்கப் பிரம்மா சொன்னார், "மகனே, நீ சூரியனில் ருத்திரனாகவும், நீரில் பாவனாகவும், பூமியில் சிவனாகவும், தீயில் பசுபதியாகவும், காற்றில் ஈசனாகவும், விண்ணில் பீமனாகவும், அந்தணர்களின் உடல்களில் உக்கிரனாகவும், சந்திரனில் மகாதேவனாகவும் வசிப்பாயாக" என்றார்.

## 10. முனிவர்களின் தோற்றம்

**த**சனின் மகளான கியாதி என்பவள் பிருகு முனிவரை மணந்து தாதா, விதாதா என்ற இரண்டு புத்திரர்களையும் ஸ்ரீ என்ற புத்திரியையும் பெற்றாள். மிருகண்டு முனிவரின் மகளான ஸ்ரீ விஷ்ணுவை மணந்து பாலா, உத்சகா என்ற இரு புத்திரிகளைப் பெற்றாள்.

**தா**தாவின் மனைவியான நியதியின் மகள் மிருகண்டு. அவளின் புத்திரர்கள் மார்க்கண்டு முனிவரும், வேதசிரனுமாவார். விததா, ஆயதியை மணந்து பாண்டுவைப் பெற்றாள். இவர்கள் பிருகு மகாரிஷியின் வம்சத்தினராவர். பிருகு வம்சத்தில் இவர்கள் அவதரித்தமையால் இவர்களைப் 'பார்க்கவர்கள்' என்று அழைக்கப்பட்டனர்.



**த**சனின் மகள் சம்பூதி என்பவள் மரீசி முனிவரைத் திருமணம் செய்தாள். இவர்கள் இருவருக்கும் பிறந்த புத்திரர்கள் அனைவரும் இல்வாழ்க்கையைத் துறந்து முனிவர்களானார்கள்.

**த**ட்சனின் மகளான சன்னவதி கிரது முனிவரைத் திருமணம் செய்தாள். இவர்களது வம்சத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான புத்திரர்கள் இல்வாழ்க்கையை வெறுத்தொதுக்கிவிட்டுக் காட்டுக்குச் சென்று தவம் செய்து பலம்மிக்க தவமுனிவர்களாயினர். இவர்கள் 'வாலாக்கியர்' எனப்பட்டனர்.

**த**ட்சனின் மகளான சுவாகா அக்கினிதேவனை மணந்தாள். இவர்களின் பரம்பரையும் மிகவும் பெரியது.



**சு**வாகாவின் மூத்த மகன் பவகாவின் புத்திரனான சகஸ்ராட்சகன், இரண்டாவது மகன் பவமானனின் மகன் காவ்வியவாஹனன், அதுபோல மூன்றாவது மகன் சுரூசியின் மகன் ஹவ்யவாஹனன்.



**தே**வர்கள் ஹவ்வியவாஹனையும், பித்ருக்கள் ஹவ்வியவாகனனையும், அசுரர்கள் சஹஸ்ராட்சனனையும் தீக்கடவுளாகப் பூசித்தனர்.

**மு**னிவர்கள் வாயுதேவனை நோக்கி, "தேவரே, நாம் அரசர்களின் வீரதீரச் செயல்களைக் கேட்கவிரும்பவில்லை. அதனால் சிவபெருமானின் வரலாற்றையே அறிய விரும்புகிறோம். தக்கனின் மகளாகிய தாட்சாயிணியின் வரலாற்றைக் கூறுங்கள்" என்றனர்.



"**மு**னிவர்களே, அப்ஸ்சரஸ்சுகளோடும், வேறு தேவலோகப் பெண்களோடும் அளவில்லாத இன்பத்தை அனுபவித்த இந்திரன் முதலான தேவர்கள் அனைவரும் சேர்ந்து "நாம் இவ்வளவு காலமும் பெரும் இன்பங்களை அனுபவித்து. பல வகையான பாவங்களைச் செய்துவிட்டோம். அவை எம்மைத் துன்புறுத்தப் போகின்றன." என்று எண்ணிக் கவலைப்பட்டு இமயமலைக்குச் சென்று" சிவனிடம் தமது கவலையை வெளியிட்டு மனச்சாந்தி பெற்றுத் திரும்பினார்கள்.



**அ**தே நேரம் தக்கன் தனது மகளான தாட்சாயிணியையும் மருமகனான சிவபெருமானையும் காண விரும்பி இமயமலைக்குத் தேவர்களுடன் வந்திருந்தான். தாட்சாயிணி அங்கு வந்திருந்த எல்லோரையும் சமமாக வரவேற்றாள். தக்கன் தனது அஞ்ஞானத்தால்



தாட்சாயிணி உலக மாதா என்று உணராது தனது மகள் என்று நினைத்து அவள் தன்னை மேலான நிலையில் வரவேற்கவில்லை என்று நினைத்து அவளையும் சிவபெருமானையும் அவமதிக்க வேண்டும் என்று நினைத்து, சிவபெருமானுக்கும் பார்வதிதேவிக்கும் அவிப்பாகம் கொடுக்காது பெரும் யாகம் ஒன்றைச் செய்தான். அதற்கு அவன் சிவபெருமானையும் பார்வதியையும் அழைக்கவில்லை. ஏனைய தேவர்கள் எல்லோரும் யாகத்திற்கு அழைப்பின் பேரில் வந்திருந்தனர். தாட்சாயிணி தனக்கு அறிவிக்காவிட்டாலும் தந்தை செய்யும் யாகத்திற்குச் செல்ல விரும்பி அதைச் சிவபெருமானிடம் சொல்ல, முதலில் மறுத்த சிவபெருமான் பின்பு மனமிரங்கி அவளை யாகத்திற்குச் செல்ல அனுமதித்தார். தாட்சாயிணி யாகசாலைக்கு வந்தபோது தக்கன் அவளை மதியாது யாகத்துக்கு வருபவர்களை இனிய வார்த்தைகள் கூறி வரவேற்றுக் கொண்டிருந்தான்.

**வா** என்று கூடச் சொல்லாத தக்கன் மீது தாட்சாயிணிக்குக் கடுங்கோபம் உண்டானது. அதனால் தக்கனை நோக்கி, ''என்னையும், எனது கணவரையும் யாகத்திற்கு அழைக்காமைக்கான காரணம் என்ன?'' என்று கேட்டாள்.

**அ**தற்குத் தக்கன் கடுங்கோபங் கொண்டு சொன்னான், ''எனது தகுதிக்கு உனது கணவன் பொருத்தமில்லாதவன் உனது கணவன் பித்துப் பிடித்து மயானத்தில் பேய் பிசாசுகளுடன் கூத்தாடுபவன். உத்தமமான அழகுகள் எவையும் இல்லாதவன், எலும்பையும் மண்டைஓட்டையும் கோர்த்து மாலையாக அணிந்தவன் எனக்குப் பகைவன். அதனால் தான் அழைக்கவில்லை. நான் அழைக்காத போது நீ ஏன் இங்கு வந்தாய்?'' என்று கேட்டான்.

**அ**தனால் கோபம் கொண்ட தாட்சாயிணி, ''ஆணவத்தால் உண்மையைப் புரியாது வாழும் நீ செய்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுவாய்'' என்று கூறித் தனது உடலை அழித்துவிட்டு, நெடுங்காலமாகப் பார்வதி தனது மகளாகப் பிறக்க வேண்டும் என்று நினைத்துத் தவம் செய்து கொண்டிருந்த இமாலய மன்னனின் மகளானாள்.



**மு**னிவர்களே, பார்வதி மறைந்ததும் ஓம குண்டத்தில் எரிந்த அக்கினி அணைந்தது. மந்திரங்கள் செயலற்றுப் போயின. அதைக் கண்ட தேவர்களும் முனிவர்களும் இனி என்ன நடக்குமோ என்று அஞ்சினர். அப்போது அங்கு வந்த சிவபெருமான் பெருங்கோபங் கொண்டு, ''தக்கா, நீ என்னையும் எனது மனைவியையும் அவமதித்து உனது பிற புத்திரிகளையும் மருமக்களையும் போற்றியமையால் நீ மானுடனாகப் பிறக்கக் கடவாய். அப்போது நீ யாகம் செய்வாய். அந்த யாகம் என்னால் அழிக்கப்படும். உன்னால் போற்றி வரவேற்கப்பட்ட உனது மருமக்கள் மானிடராவர். உனது செயல்கள் யாவும் தடைப்படும்''

என்று சபித்து, ‘‘அவ்வாறு அவர்கள் தோன்றிய காலத்தில் அவர்களை அழித்தார்’’ என்றார் வாயுதேவன்.


## வீரபத்திர அவதாரம்

‘‘**மு**னிவர்களே, பார்வதிதேவியைப் புத்திரியாகப் பெறக் கருதி நெடுங்காலம் தவம் செய்த இமயமலை மன்னன் பர்வதராசனின் புத்தியாக அவதரித்த பார்வதியைச் சிவபெருமான் திருமணம் செய்து, இமயமலைச் சிகரத்தில் நெடுங்காலம் கூடி வாழ்ந்தார். அவ்வாறு அனேக யுகங்கள் கழிந்தன.

**த**க்கன் சிவபெருமானின் சாபப்படி பிரசேதன் என்பவனுக்குப் புத்திரனாகி மோட்சத்தை விரும்பி அஸ்வமேத யாகம் செய்ய விரும்பி, இமயமலையில் முனிவர்களும் சித்தர்களும் நிரம்பிய கங்காத்துவரம் என்ற இடத்தில் யாகம் செய்தான். அந்த யாகத்திற்கு இந்திரன் முதலான தேவர்களும் ஆதித்தர்களும், வசுக்களும், உருத்திரர்களும், மருத்துக்களும், பிதுர்களும், அஸ்வினிதேவர்களும், பிரமாவும், விஷ்ணுவும், முனிவர்களும் தத்தமது யாகபாகங்களை ஏற்க வந்திருந்தனர். அப்போது அங்கிருந்த தேவர்கள் தக்கனை நோக்கி, ‘‘தக்கனே, எல்லோரையும் அழைத்த நீ மகாதேவரை ஏன் அழைக்கவில்லை? அதனால் பெரும்விபரீதங்கள் நடைபெறும்’’ என்றனர்.



**த**சீசி முனிவர் கோபங் கொண்டு, ‘‘யாகங்களுக்குக் முதல்வன் சிவபெருமான் அவரை விடுத்து ஏனைய எல்லோரையும் அழைத்து அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்துள்ளாய். இது நல்லதற்கல்ல. உலகின் தலைவனான சிவபெருமானை மதிக்காது உனது யாகம் ஒப்பேறாது இடையிலேயே அழியும்’’ என்று கூறினார்.



**அ**தற்குத் தக்கன், ‘‘முனிசிரேஷ்டரே, இந்த யாகத்திற்குச் சிவபெருமானுக்குச் சமமான விஷ்ணு பகவானுக்கே ஆகுதியைக் கொடுக்கப் போகிறேன்’’ என்றான்.

அதைக் கேட்ட தசீசி முனிவர் முன்பை விடக் கடுங்கோபம் கொண்டு, ‘‘தக்கா, சர்வேசனை முன்நிலைப்படுத்தாத எந்த யாகமும் யாகமாகாது. அதனால் இது விரைவில் அழிந்து போகக் கடவது’’ என்று சபித்துவிட்டு யாகசாலையில் இருந்து வெளியேறினார். ஆனால் தேவர்கள் அவி உணவுக்காக வெளியேறாது காத்திருந்தனர்.

**அ**தை அறிந்த பார்வதிதேவி சிவனிடஞ் சென்று, “நாதா, தங்களை மதியாது தக்கனால் செய்யப்படும் யாகத்தை அழிக்க வேண்டும்” என்று கூறச் சிவபெருமான் பார்வதிதேவியின் வேண்டுதலை ஏற்று வீரபத்திரனைப் படைத்தார். வீரபத்திரர் சிவபெருமானை வணங்கி நின்றார்.



**அ**ப்போது பார்வதிதேவி கோபங் கொண்டு ஆயிரம் சிரங்களும் கரங்களும் கொண்ட காளியைச் சிருஷ்டித்தாள். அப்போது வீரபத்திரன், “சுவாமி, எனக்குக் கட்டளையிடுங்கள்” என்றார்.

“**வீ**ரனே, தக்கன் கங்காதுவாரத்தில் அஸ்வமேத யாகம் செய்கிறான். நீ காளியுடன் சென்று அந்த யாகத்தை அழித்துவிடு. நான் பார்வதிதேவியுடன் ரைபிய முனிவரின் ஆச்சிரமத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருப்பேன்” என்று கட்டளையிட்டார்.




**பா**ர்வதிதேவி வீரபத்திரனையும், காளியையும் அணைத்து, “வீரபத்திரா எனக்குப் பிரியமுண்டாக்குவதற்காகவே பிறந்தாய். ஆகையால் நீ எனது கோபத்தை ஒழிக்க வேண்டும். அது என்னவென்றால், நீ காளியுடன் சென்று சிவபெருமானைப் பூசிக்காமல் தக்கன் செய்யும் யாகத்தை அழித்து அங்குள்ளவர்களைக் கொன்றுவிட்டு வா” என்றாள்.

**அ**தைக்கேட்ட வீரபத்திரர் தனக்குத் துணையாகத் தனது உரோமங்களில் இருந்து உரோமஜர்கள் என்ற கணங்களையும் வலது புயத்தில் இருந்து நூறு கோடி கணங்களையும், இடது புயத்திலிருந்து மனைவியருடன் கூடிய அனே புத்திர கணங்களையும், பாதத்திலிருந்து கடுங்கோபமுள்ள அனேக ருத்திரர்களையும், தொடை, பிருஷ்டம், பக்கம், முகம், குய்யம் முதலிய அவயங்களில் இருந்து எண்ணற்ற கணங்களையும் சிருஷ்டித்தார். அவர்கள் அனைவரும் வீரபத்திரனைப் போலவே ஆயுதங்களை ஏந்தி நின்றனர். வீரபத்திரர் அவர்களை அழைத்துக் கொண்டு இடபவாகனத்தில் ஏறிக் காளியுடன் புறப்பட்டார்.

**ஆ**யிரம் வாய்களை உடைய பானகம்பன் தனது ஆயிரம் வாய்களிலும் சங்குகளை வைத்து முழக்கமெழுப்பினான். துந்துபிகள் முழங்கின. புத்தி கணங்களுடனும் காளியுடனும் சேர்ந்திருந்த வீரபத்திரன், உருத்திர கணங்களோடு சேர்ந்திருந்த உமாதேவியுடன் வீற்றிருந்த சிவபெருமானைப் போல இருந்தான். அனைவரும் தக்கன் யாகம் செய்யும் இடத்தை நோக்கி நகர்ந்தனர்” என்றார் வாயுதேவன்.

## தக்கனது யாகத்தை அடைதல்

**வா**யுதேவன் தொடர்ந்து சொன்னான், ''முனிவர்களே விஷ்ணு முதலிய தேவர் கூட்டத்தைத் தக்கன் இரத்தினக் கம்பளங்களில் இருந்தி அவர்களை வணங்கி மகிழ்வித்தான். முனிவர்கள் மந்திரங்களை ஓதினர். தேவ மங்கையரும் அப்ஸ்சரஸ் கன்னிகளும் யாழை மீட்டி இனிமையாகப் பாடி மகிழ்வுடன் நடனமாடிக் கொண்டிருந்தனர். அவற்றைக் கண்ட வீரபத்திரன் கோபங்கொண்டு சிங்கநாதம் செய்தான். அதைக் கேட்ட தேவர்கள் அஞ்சி நடுநடுங்கி கூச்சலிட்டனர். முனிவர்கள் தண்டம் கமண்டலம் வஸ்திரம் ஆகியவற்றை விட்டுவிட்டு ஓடினார்கள். வீரபத்திரனது வீரமுழக்கத்தால் பூமி நடுநடுங்கியது. மலைகள் ஆடின. கடல் பொங்கியது. சூரியனும் சந்திரனும் அக்கினியும் ஒளியிழந்தன. அப்போது வீரபத்திரனும் காளியும் கணங்களும் தக்கனது யாகசாலைக்குள் நுழைந்தனர்.



**த**க்கன் கோபவேசத்துடன் வந்து நின்ற வீரபத்திரனைக் கண்டு உள்ளூரப் பயந்த போதும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது, ''நீ யார்? ஏன் இங்கு வந்தாய்?'' என்று கேட்டான்.

''**நா**ங்கள் சர்வேஸ்வரனான சிவபெருமானின் புத்திரர்கள், நீ செய்யும் யாகத்தில் எமக்குச் சேரவேண்டியவற்றைக் கொடுத்துவிடு இல்லாவிட்டால் என்னுடன் போர்புரிய வேண்டும்'' என்றான்.

''**வீ**ரனே, உனக்கும் உனது தந்தையான சிவபெருமானுக்கும் அவிப்பாகம் கொடுக்க வேண்டுமென்று ஆதியான வேதங்கள் கூறியிருந்தால் அதன்படி கொடும்போம்'' என்று தேவர்கள் கூறினார்கள்.



**அ**ப்போது அங்கிகிருந்த வேதங்கள் கலங்கி, ''இப்படிச் சொல்வதா இனி நாம் இங்கு இருக்கக் கூடாது'' என்று நான்கு வேதங்களும் கூறி பிரமலோகத்திற்குச் சென்றன. அதன்பின் வீரபத்திரனும் காளியும் கணங்களும் யாகசாலையை அழிக்கத் தொடங்கினர்.

**வீ**ரபத்திரன் யாகத்திற்கென வைத்திருந்த பொருட்களையெல்லாம் நாசம் செய்தான். அவனது விழியில் இருந்து புறப்பட்ட அக்கினி யாகசாலை உட்பட எல்லா இடங்களையும் தீயிட்டது. காளிதேவி தேவமாதர்களின் தோளையும் கூந்தலையும் வாளால் அரித்துவிட்டு அவர்களைக்



காலால் உதைத்தாள். அதனால் அவர்கள் அழுது புலம்பினார்கள். தம்மைக் காப்பாற்றும்படி அலறினார்கள். தேவமங்கையரில் காயப்படாதவர்கள் யாருமில்லை. அவர்களது அலறல் சத்தம் எல்லாலோகங்களிலும் ஒலித்தது''.

## தக்கனது யாகத்தை அழித்தது

''**மு**னிவர்களே, அந்தச் சமயத்தில் வீரபத்திரர் பெருங்கோபத்துடன் சூலம், வேல், வாள், தண்டம் ஆகிய ஆயுதங்களால் தேவர்களை ஓடஓட விரட்டி விரட்டித் தாக்கினார். இந்திரனை தண்டாயுதத்தால் அடித்து அவனது ஆயிரம் கண்களையும் சிதறிப் பூமியில் விழச் செய்தார்.



அக்கினி தேவனை நாவையும் கைகளையும் துண்டித்தார். யமனைப் பிடித்துத் தனது உள்ளங்கையில் வைத்துக் கசக்கிப் பிழிந்து தூர வீசினார். வருணனின் உந்தியைத் தோண்டி அவனது குடலை மாலையான அணிந்து கூத்தாடினார். வாயுவைக் கடலில் தூக்கி எறிந்தார். குபேரனைத் தூக்கிச் சுழற்றி வீசினார்.



**தே**வர்களைக் கொடுமையாகத் தாக்கினார். சூரியனின் பற்களை உடைத்தார். சந்திரனைத் தூக்கி அடித்து கால்களால் மிதித்தார். பேய்களும் பூதங்களும் தேவ மங்கையரையும் அப்ஸ்சரஸ் பெண்களையும் காமம் தலைக்கேறப் பலவாறு துன்புறுத்தித் தமது காம இச்சையைத் தீர்த்தன. இதைக் கண்டு சகிக்க முடியாத தக்கன் ஓட முயன்ற போது வீரபத்திரர் அவனது தலையைக் கொய்தார். தக்கனது புத்திரிகள் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.



**இ**வற்றைக் கண்ட விஷ்ணு கருட வாகனத்தில் ஏறி அமர்ந்து தேவர் கூட்டத்தினருடன் போர் செய்ய வந்தார். அப்போது தேர் ஒன்று ஆகாயத்தில் இருந்து வந்து இறங்கியது. அதன் சாரதியான பிரமன் வீரபத்திரரின் அருகே வந்து வணங்கி, ''இது சிவபெருமான் உங்களுக்கென அனுப்பியது. அவரும் உமையம்மையும் அருகில் உள்ள ரைபிய முனிவரது ஆச்சிரமத்தில் உள்ளனர். இத்தேரைத் தாங்கள் பயன்படுத்தலாம்'' என்று பிரமதேவன் கூற வீரபத்திரர் தேரில் ஏறி அமர்ந்தார்.



**பி**ரமன் தேரைச் செலுத்திவந்து விஷ்ணுவின் முன் நிறுத்தினான். உடனே விஷ்ணு தனது சாரங்கமாகிய வில்லை வளைத்து எண்ணற்ற அக்கினியிலான கணைகளை விடுத்தார். அவற்றை எதிர்த்து வீரபத்திரர் பாணங்களை விடுத்தார். விஷ்ணு மிக்க கோபங்கொண்டு ஓர் அம்பை வீரபத்திரரின் தோள்மீது எய்ய, வீரபத்திரர் ஆவேசத்துடன் வில்லால் விஷ்ணுவின் தோளில் அடித்தார்.

**இ**வ்வாறு இருவரும் உக்கிரமாகப் போர் செய்தனர். அப்போது வீரபத்திரர் ஓர் அம்பைவிட அவ் அம்பு விஷ்ணுவின் மார்பைத் தாக்க விஷ்ணு மூர்ச்சித்து தரையில் விழுந்தார். சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்த விஷ்ணு கருட வாகனத்தில் ஏறிப் போர் செய்தார். வீரபத்திரர்



கருடனது செட்டைகளைத் துண்டித்தார். விஷ்ணு தனது மாயசக்தியைப் பிரயோகித்து தேவர்கள் பலரை உருவாக்கிப் போர் செய்ய அனுப்பினார். அவர்களை வீரபத்திரர் தனது நெற்றிக் கண்ணால் எரித்துச் சாம்பலாக்கினார். அதனால் கோபங் கொண்ட விஷ்ணு விசம் கலந்த சக்கராயுதத்துடன் வீரபத்திரரின் முன் வந்தார். அவரைக் கண்ட வீரபத்திரர் உரக்கக்கர்ச்சித்தார். அதனால் விஷ்ணு செயலற்று கற்சிலைபோல நின்றார். அதைக்கண்ட தேவர்கள் வீரபத்திரருடன் போர் செய்ய வந்தனர். மீண்டும் வீரபத்திரர் கர்ச்சனை செய்யப் போர் செய்ய வந்தவர்களெல்லாம் பதுமைகள் போல அசையாது நின்றனர். பலர் ஓடி மறைந்தனர். வீரபத்திரரின் சினத்தால் பூமி நடுங்கியது. கடல் கலங்கி இரத்த ஆறாகப் பாய்ந்தது.

"**ஆ**கையால் முனிவர்களே வேதத்தில் விலக்கப்பட்டதும், சொல்லப்படாததும், சிவபெருமானுக்கு அவிப்பாகம் கொடாததுமாக யாகத்தை யாரும் செய்யக் கூடாது. செய்தால் அதற்கான புண்ணிபேறு கிடையாது. பெருந்தண்டனை தான் கிடைக்கும். செய்பவன் தீராத பழியையும் பாவத்தையும் அனுபவிப்பான் ஈஸ்வர பக்தியில்லாதவன் செய்யும் தானம், தவம், கோமம் ஆகிய எதுவும் பயனளிக்காது" என்றார் வாயுதேவன்.



**ம**றுபிறவியிலும் தட்கன் அதே உருவுடனும், அதே பெயருடனும் பிறந்து இமயமலையில் உள்ள புனித நகரான கங்கைத்துவாரம் என்ற இடத்தில் பெயரியதொரு யாகம் செய்தான். அந்த யாகத்திற்கு முற்பிறவியில் செய்த யாகத்திற்குச் சிவனை அழைக்காதது போல இப்போதும் சிவனை அழைக்கவில்லை. சிவனை அழைக்காத யாகத்திற்கு நான் வரமாட்டேன். அது உரிய பல பலனையோ,

வெற்றியையோ தராது என்று கோபமாகக் கூறிய தசீசி முனிவர் அந்த யாகத்திற்கு வராது புறக்கணித்தார்.

**மே**ருமலையில் வீற்றிருந்த சிவனும் பார்வதியும் சிவகணங்களும் தட்சனின் யாகத்திற்குச் செல்வதை தசீசி முனிவர் கண்டார். அங்கு நடைபெறுவதைத் தனது ஞானசிருஷ்டியால் அறிந்து கொண்ட சிவபெருமான் கோபத்துடன் தனது வாயைத் திறக்க அதிலிருந்து கோபாவேசத்துடன் வீரபத்திரன் உக்கிர வடிவில் வெளிப்பட்டார். சிவபெருமானின் கட்டளைப்படி தட்சன் செய்த யாகத்தை அழித்துவிட்டு யாகத்தில் வந்திருந்தோரைக் கொடுமையாகத் தண்டித்தார். தட்சன் தனது பிழையை உணர்ந்து சிவபெருமானை வணங்கினான். சிவபெருமான் அவனை ஆயிரம் அசுவமேத யாகங்களையும், நூறு வாஜ்பேய யாகங்களையும் நடத்தி முடித்துவிட்டுத் தன்னை வந்தடையுமாறு கட்டளையிட்டார்.

## 11. நிலப்பரப்பும் அதன் பகுதிகளும்

“**கு**ருவே, இனி பூமியைப் பற்றிக் கூறியருளுங்கள்” என்று கேட்டார் மைத்ரேயர்.

“**மை**த்ரேயரே, இது பற்றி விரிவாகக் கூற அனேக ஆயிரம் ஆண்டுகள் போதாது ஆயினும் நீர் கேட்டதற்காக மிக மிகச் சுருக்கமாகக் கூறுகிறேன். இப் பூமியானது ஜம்பூத்து வீபம், பிலகசத்வீபம், குசத்து வீபம், கிரௌஞ்சத்து வீபம், சாகத்து வீபம், புஷ்கரத்து வீபம் என ஏழு துவீபங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஏழுதுவீபங்களும் உப்பு, கருப்பஞ்சாறு, கள், நெய், தயிர், பால், சுத்த நீர் என்ற ஏழு சமுத்திரங்களால் சூழப்பட்டுள்ளன. ஜம்பூத் வீபம் எல்லாவற்றிற்கும் நடுவில் இருக்கிறது. அதன் நடுவில் மேரு என்ற சுவனர்ண மலை உள்ளது. இதற்குத் தென்திசையில் இமவான், ஏமகூடம், நிஷதம் ஆகிய மூன்று மலைகளும், வடபுறத்தில் நீலம், சுவேதம், சிருங்கி ஆகிய மூன்று மலைளும் உள்ளன.



**இ**ந்த ஜம்பூத்வீபத்தில் முதல் பாரதவர்சம் அடுத்து கிம்பருசம் அடுத்து கரிவருசம் மூன்றும் மேருவின் தெற்கேயுள்ளவை. ரம்மிக வருசம், கிரண்ம வருசம், குரு வருசம் ஆகிய மூன்றும் வடக்கில் உள்ளவை. மேருவைச் சுற்றியுள்ள பூமி இளாவருசம் என்று சொல்லப்படும். இளாவிருத வருசத்தில் நான்கு மலைகள் உள்ளன. கிழக்கே மந்தாரமும், தெற்கில் கந்தமாதனமும், மேற்கில் விபுலமும், வடக்கில் சுபார்சுவமும், மாதனமும் உள்ளன.



**அ**ம் மலைகளில் கடம்பு, நாவல், அத்தி, ஆல் போன்ற மரங்கள்





உள்ளன. அந்த நாவல் மரத்தால் தான் இத் தீவுக்கு ஜம்புத் தீவு என்ற பெயர் உண்டானது. அந்த மரத்தின் பழங்கள் அருகே ஓடிய நதியில் விழுவதால் அந் நதிக்கு ஜம்பு நதி என்ற பெயர் உண்டானது.

**அ**ந்த நதியின் நீரைக் குடிப்பவர்கள் ஆரோக்கியம் மிக்கவர்களாக இருப்பதால் அவர்களுக்கு நோய்கள் உண்டாவதில்லை. அந்த இடத்தில் உள்ள மண் அந்த ரசத்தில் நனைந்து காற்றினால் உலர்ந்து ஜாம்பூநதம் என்ற பெயரைக் கொண்டது. அங்கு பெரும் பெரும் சித்தர்கள் வாழ்கின்றனர். மேரு மலைக்குக் கிழக்கில் பத்திராசுவ வருசமும், மேற்கில் கேதுமால வருசமும் இருக்கின்றன. மேருவின் நான்கு திசைகளிலும் நான்கு வனங்கள் உள்ளன. அங்கு நான்கு ஏரிகளும் உண்டு.

**மை**த்ரேயரே, மேருவுக்கு மேல் பிரமாவின் மாபெரும் பட்டணம் இருக்கிறது. அதைச் சுற்றி எட்டுத் திசைகளிலும் லோகபாலகர் எட்டுப்பேருக்கும் பெரிய பட்டணங்கள் இருக்கின்றன. மகா விஷ்ணுவின் பாதத்தில் இருந்து உதித்த கங்காநதி ஆகாயத்தில் இருந்து சந்திர மண்டலத்தில் விழுந்து பின் மேருவின் மீதிருக்கும் பிரமாவினுடைய நகரத்திற்கு நான்கு புறமும் நான்கு பிரிவாக விழுந்து சீதை, அளக நத்தை, சட்சு, பத்திரை என்ற பெயர்களைப் பெற்று விளங்குகிறது. சீதைநதி ஆகாயமார்க்கத்திலிருந்து இறங்கிச் சமுத்திரத்தை அடைகிறது. அளகநத்தை நதி ஏழு பிரிவாகப் பிரிந்து சமுத்திரத்தை அடைகிறது. சட்சு என்ற நதி மேற்கு மலைகளைக் கடந்து சமுத்திரத்தைச் சென்றடைகிறது. பத்திரை நதி வடமலைகளின் வழியாகக் கடலை அடைகிறது.



**மா**லிய வர்து, கந்தமாதனம் என்ற மலைகள் நீல நிசத மலைகளின் அளவினதாக இருக்கின்றன. அவற்றை தழுவி மேருமலை உள்ளது.

**பா**ரதகேது, மாலபத்திராசுவ மலைகள் எல்லாப் புறமலை மலைகளாகும். ஜடரம், ஏம கூடம் என்ற மலைகள் தெற்கு வடக்காக தென்புற எல்லை மலைகளாக இருக்கின்றன. கந்தமாதகம், கைலாயம் என்ற இரு மலைகளும் கிழக்குத் திசையின் எல்லை மலைகளாக நீண்டு சமுத்திரத்தின் நடுவில் உள்ளன. நிசதம், பரியாத்திரம் என்ற மலைகள் மேலைத்திசையின் எல்லை மலைகளாக உள்ளன. தீரிசிருங்கம், ஜாருதி என்ற மலைகள் நீண்டு சமுத்திரம் வரை சென்று வடக்கெல்லை மலைகளாகவுள்ளன. இவ்வாறு எல்லைகளில் இரண்டாயிரம் மலைகள் உள்ளன. இவற்றினிடையே ஸ்ரீவனம், கிம்சுகவனம், நளவனம், சாயித்திரரதம் என்ற செழிப்பான காடுகள் உள்ளன.

**அ**ங்கு மகாலட்சுமி, விஷ்ணு, அக்கினி, சூரியன் முதலிய தேவர்களின் வாசஸ் தலங்கள் இருக்கின்றன. அம் மலைச் சாரல்களில் யாசாதிகள் கீதம் இசைத்து நடனமாடிக் கொண்டிருப்பார்கள். இவை பூலோக சொர்க்கங்களாகும். இங்கு புண்ணியவான்கள் சென்று தங்குவர். ஏனையோர் பல பிறவிகளை எடுத்தாலும் போய்ச்சேர மாட்டார்கள். இங்கெல்லாம் மகாவிஷ்ணு பகவான் எழுந்தருளியிருக்கிறார். இங்குள்ள மக்கள் எந்தவிதமான துன்பங்களும் இல்லாமல் பதினாயிரம் வருடங்கள் இன்பமாக வாழ்வர். இங்கு மழை பெய்வதில்லை. ஆற்று நீர் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும். அங்குள்ள மலைகளில் வற்றாத நீரூற்றுக்கள் உண்டு'' என்றார் பராசர முனிவர்.

## பாரததேச வர்ணனை

''**மை**த்ரேயரே, சமுத்திரத்திற்கு வடக்கே, இமயத்திற்குத் தெற்கே இருக்கின்ற பூமியில் பரதனின் சந்ததியினர் வசிப்பதால் அது பாரதம் என்ற பெயரைப் பெற்றது. சொர்க்கத்தை அடைய விரும்புபவர்களும் மோட்சத்தை அடைய விரும்புபவர்களும் இங்கு அதற்கான அனுட்டாணங்களைச் செய்வர். இங்கு மகேந்திரம், மலயம், கய்யம், சுத்திமான், ரீசம், விந்தியம், பரியாத்திரம் என்ற பெயர்களை உடைய ஏழு மலைகள் உள்ளன. இம் மலைச்சாரல்களில் தவம் செய்வோர் மோட்சத்தை அடைவர். அது போல நரகத்தை அடைவோரும் இங்கேயே வாழ்கின்றனர். பல விதமான பிறவிகள் எடுப்பதும் இங்கிருந்துதான்.

**இ**ந்தப் பாரத பூமி ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்பதாவது



பிரிவான பாரதத்துவீபம் என்பதே நாம் வாழும் பூமியாகும். இது கடலால் சூழப்பட்டுள்ளது. இதன் கிழக்கில் கிராததேசமும் மேற்கில் யவன தேசமும் இருக்கின்றன. நடுவில் நான்கு வர்ணர்த்தினரும் வாழ்கின்றனர்.

**யா**கம் செய்வது, யுத்தம் செய்வது, வாணிபம் செய்வது, சிற்பத் தொழில் செய்வது போன்ற தொழில்களை மக்கள் செய்து வருகின்றனர். இமய மலையில் இருந்து பல நதிகள் உற்பத்தியாகின்றன. இவ் நதிகளுக்குக் கிளை நதிகள் பல உண்டு. இந் நதிக்கரை தான் மக்களின் வாழ்விடங்களாகும். இங்கு யக்ஞ புரிசனாகவும், யக்ஞ சொரூபியாகவும்



மகாவிஷ்ணு பகவான் இருக்கின்றார். மைத்ரேயரே, பாரத தேசத்தைப் பற்றி மிக மிகச் சுருக்கமாகச் சொன்னேன்'' என்றார் பராசர முனிவர்.





## பிலசத் தீவுகளின் வர்ணனை



"**மை**த்ரேயரே, ஜம்புத்தீவு உப்புக்கடலால் சூழப்பட்டது போல இந்த வண சமுத்திரம் பிலசத்தீவால் சூழப்பட்டுள்ளது. இத்தீவுக்கு அதிபதியாக மேதாதிதி என்பவனுக்குச் சாந்தகயன், சிவன், சிசிரன், சுகோதயன், ஆனந்தன், சேமகன், துருவன் என்று ஏழு பிள்ளைகள் இருந்தனர். அத்தீவுகள் அவர்களின் பெயராலேயே அழைக்கப்பட்டன. அத்தீவுக்கு ஏழு மலைகள் எல்லைகளாக இருந்தன. இம் மலைகளில் வாழ்ந்த மக்கள் தேவர்களோடும், காந்தர்வர்களோடும் கூடி விளையாடுவர். அங்கு வாழும் மக்களுக்கு ஆயுள் அதிகம். நோய்கள் எதுவும் அங்கு இல்லை.



**அ**ங்கு ஏழு நதிகள் பாய்கின்றன. அந்நதிகள் பல கிளையாறுகளுடன் எப்போதும் நீர் கொண்டவையாக இருக்கும். இங்கு வர்ணாச்சிரம தர்மம் பேணப்படுகிறது. இத்தீவின் ஒரு பகுதியில் கல்லாலமரம் ஒன்று உண்டு. அங்கு மகாவிஷ்ணு ஆராதிக்கப்படுகிறார். அத்தீவு கருப்பஞ்சாற்றுக் கடலால் சூழப்பட்டுள்ளது.



**இ**ங்கு சால்மரத்தீவு என்று ஒரு தீவு உண்டு. இதன் அதிபதியாக இருப்பவன் வடிஷ்மா. இவனுக்கு ஏழு பிள்ளைகள் அவர்களது பெயர்களில் அங்கு ஏழு தேசங்கள் உண்டு. அத்தீவில் ஏழு மலைகளும் உண்டு. அம்மலைகளில் ஒன்றான துரோண மலையில் தான் மூலிகைகள் பிறந்தன. இராமாயாண காலத்தில் இம் மலையில் இருந்து தான் அனுமான் சஞ்சீவி என்ற மூலிகையை மலையோடு பெயர்த்துக் கொண்டு சென்றார். அந்த மலையிலிருந்து ஏழு நதிகள் பாய்கின்றன.

**அ**ங்கு கபிலர், அருணர், பீதர், கிருஷ்ணர், மகாவிஷ்ணுவை வாயு ரூபியாகப் பூசித்து யாகம் செய்கின்றனர். அத்தீவில் பெரியதோர் இலந்தை மரம் உள்ளது. அதனால் தான் அத்தீவுக்கு சால்மரத்தீவு என்ற பெயர் ஏற்பட்டது.

**இ**ங்கு குசத்தீபம் என்ற தீவின் அதிபதி ஜியோதிஷ்மான். அவனுக்கும் ஏழு பிள்ளைகள். அவர்களின் பெயரால் அங்கு ஏழு தேசங்கள் உள்ளன. அங்கு தேவ, அசுர, யச, கின்னர, விம்புருஷ, கந்தர்வத் தேவகணங்களும் தாமிகன், தஷ்மிகன், தேகர், மகேந்தர் என்ற நான்கு வகை மனிதர்களும் வசிக்கின்றனர். இவர்கள் மகாவிஷ்ணுவை ஆராதிக்கின்றனர். அங்கு ஏழு

மலைகளும், ஏழு நதிகளும் பாய்கின்றன. சிறந்த நாணற்புற்கள் அங்கிருப்பதால் தான் அந்தத் தீவுக்குக் குசத்வீபம் என்ற பெயர் ஏற்பட்டது.

**இ**ச்சமுத்திரத்தைக் கிரவுன்சத்தீவு சுற்றிக் கொண்டிருக்கிறது. இதன் அதிபதி திவுதிமான் என்பவனுக்கு ஏழு பிள்ளைகள் உள்ளனர். அவர்களின் பெயரால் அங்கு ஏழு தேசங்கள் உண்டு. அங்கு ஏழு மலைகள் உண்டு. அம் மலைகளில் ஒன்றான கிரவுன்சம் என்ற மலையின் பெயரால் அத்தீவு அழைக்கப்படுகிறது.

**இ**ம் மலைகளில் சித்தசாரண, கிம்புருஷ, கின்னர் ஆகியோர் விளையாடுவர். இங்கு பல இன மக்களும் வாழ்கின்றனர். இங்கு ஜனார்த்தனை மக்கள் ஆராதிக்கின்றனர். இங்கும் ஏழு மலைகள் உள்ளன. அவற்றிலிருந்து ஏழு நதிகள் பாய்கின்றன. அத்தீவு தயிர்க்கடலால் சூழப்பெற்றுள்ளது.

**அ**டுத்து அக் கடலைச் சூழ்ந்துள்ள தீவு சாகவத்தீவாகும். அதன் அதிபதி பவிரயன் என்பவன். அவனுக்கு ஏழு பிளளைகள். அவர்களின் பெயர்களில் ஏழு பிரதேசங்கள் உள்ளன. அத்தீவில் ஏழு மலைகள் உள்ளன. அங்கு சித்தர் தவம் செய்வர். கந்தர்வர்கள் விளையாடுவர். அத்தீவில் சாவகம் என்றொரு மரம் உண்டு. அங்கு ஏழு நதிகள் பாய்கின்றன. அத்தீவில் தீய செயல்கள், கலகங்கள், அவமதிப்புகள் இருப்பதில்லை. பாற்கடலைச் சுற்றிப் புஸ்காரம் என்ற தீவு உள்ளது. அத்தீவின் அதிபதியான சவனனுக்கு இரு பிள்ளைகள் உள்ளனர். அவர்களது பெயரில் இரண்டு பிரதேசங்கள் உள்ளன. அங்குள்ள மனகோத்திரம் என்ற மலை இரண்டாகப் பிரிந்து தீவின் நடுவே வளையம் போல உள்ளது.



**அ**ந்த மலைச் சாரலில் வாழும் மக்கள் நோய் நொடியின்றிப் பலகாலம் வாழ்வர். அங்கு தீய செயல்களை யாரும் செய்வதில்லை. மாகசோத்திரம் என்ற மலையைத் தவிர வேறு மலைகள் அத்தீவில் இல்லை. நதிகளும் இல்லை. அங்கு வாழும் மக்கள் தேவர்களைப் போலச் சுகமான வாழ்வு வாழ்பவர்கள். அங்கு வர்ணாச்சிரம ஆசாரங்களும் இல்லை. அது ஒரு பூலோகச் சொர்க்கத்தீவாகும். அங்கு பிரமதேவன் வாசம் செய்யும் ஆலமரம் ஒன்றுள்ளது. அதனால் தான் அதற்குப் புஷ்கரத் வீவம் என்ற பெயர் உண்டாயிற்று. அதைச் சுற்றி ஓடும் கடலைச் சுத்த நீர்க்கடல் என்பர்.

இவ்வாறு அந்த ஏழு தீவுகளும் ஏழு சமுத்திரங்களினால் சூழப்பட்டிருக்கின்றன. எங்கும் தண்ணீர் சமமாகவே உள்ளது. சந்திரனது உதய அஸ்தமன காலங்களில் நீர் பொங்கவும் தனியவும் செய்யும்'' என்றார் பராசர முனிவர்.

## 12. ஜம்புத் வீபம்

ஜம்புத் வீபத்தைச் சுற்றி லவண சமுத்திரம் உள்ளது. அத்துடன் இதைச் சுற்றி இமாலயம் முதல் ஆறு பெரும் மலைத் தொடர்கள் உள்ளன. இதன் நடுவில் மேருமலை உள்ளது. இங்கு நான்கு வர்ணங்களை உடைய மக்களும் மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றனர். இமயமலைக்குத் தெற்கே பாரதவர்ஷம் உள்ளது. இங்கு பிரம்மா குடிகொண்டிருக்கிறார். பிரம்மாவைத் தரிசிப்பதற்காகத் தேவர்களும், முனிவர்களும், ரிஷிகளும் இங்கு வந்து செல்வர். இங்கு தினமும் யாகம் செய்யப்படும். அதனால் அசுரர்கள் இங்குவரப் பயப்படுவார்கள்.



ஜம்புத்வீபத்திற்குச் சிறிது தூரத்தில் இந்தினது அமராவதி நகரம் உள்ளது. அந்த நகரம் பாரிஜாத மலர்களால் எப்போதும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். பிரம்மாவின் இருப்பிடத்திற்குத் தென்கிழக்கில் அக்கினி பகவானின் மாளிகை உள்ளது. அதனருகில் சூரியனது மாளிகை இருக்கிறது. அத்துடன் வருணனின் சுபாபதியும், வாயுவின் காந்தவதியும், சிவனின் யோஷவதியும் உள்ளன. இவ்விடம் முனிவர்கள், கந்தவர்கள், புண்ணியவான்களின் சொர்க்கபுரியாகும். இத்துவீபத்தைச் சுற்றி ஏரிகளும், நந்தவனங்களும், பழத்தோட்டங்களும், காடுகளும், பள்ளத்தாக்குகளும் உள்ளன.

இத்துவீபம் தேவர்களுக்கும், ராட்சதர்களுக்கும், கிக்ணர்களுக்கும், கருடத்திற்கும், அவனது மகனான சுக்கிரீவனுக்கும், பல்வேறு விதமான பாம்புகளுக்கும், சில கணங்களுக்கும், அட்டவசுக்களுக்கும், சப்தரிஷிகளுக்கும், ருத்திரர்களுக்கும், ஆதித்தியர்களுக்கும், அசுவினி தேவர்களுக்கும், கந்தர்வர்களுக்கும், யக்சகர்களுக்கும் இருப்பிடமாக உள்ளது. இங்குள்ள ஹரிகூடம் என்ற புனிதத் தலத்தில் விஷ்ணுவும் கோமஷிரிங்கா என்ற மலைத்தலத்தில் விஷ்ணுவும், பிரம்மாவும் உள்ளன. ஏனைய மலைச் சிகரங்களில் மற்ற இனத்தவர் வாழ்கின்றனர்.



## 13. கைலாயம்

**கை**லாயம் தூய வெண்ணிறமானது. அதில் ஒரு அணுவளவு கூட மாசைக் கண்டுபிடிக்க முடியாது. மிகவும் பரந்த வெண்மையான புனிதமான பிரதேசம். தேவர்கள் இங்குவந்து



சிவபெருமானைத் தரிசித்துவிட்டுக் கைலாயத்தை மிகுந்த விருப்புடன் சுற்றிப் பார்த்து அதன் அழகில் மெய்மறந்து நிற்பர். கைலாயத்தின் நடுப்பகுதியில் குபேரனது அரண்மனை உள்ளது. அங்கு குபேரன் தனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறான். குபேரன்தான் செல்வத்திற்கு அதிபதி. அதனால் குபேரனது இருப்பிடத்தை விஷ்வகர்மா மிகமிக அழகாக வடிவமைத்துள்ளான். அந்த அரண்மனைக்கு 'விழல' என்று குபேரன் பெயரிட்டுள்ளான். அவனிடம் இடத்திற்கு இடம் ஆகாயமார்க்கமாகச் செல்லும் புஷ்பகவிமானம் ஒன்று உள்ளது.

**ய**க்சர்களும், கந்தர்வர்களும், அப்ஸ்சரஸ்சுகளும் குபேரனின் விருப்புக்குரிய இனிய நண்பர்கள். பரமசிவன் கைலாயத்தில் வீற்றிருப்பதால் குபேரன் அவரைச் சென்று அடிக்கடி தரிசிப்பான். அதுபோலக் குபேரனுடைய அரண்மனைக்கு விருப்புடன் சிவபெருமான் வந்து செல்வார். கைலாயத்தில் மந்தாக்கினி என்ற ஒருபோதும் வற்றாத ஆறு சீற்றமின்றி அமைதியாகப் பாய்கிறது. இங்குள்ள நீரோடைகளில் மிகவும் அழகான செந்தாமரைப் பூக்கள் குவியல் குவியலாக மலர்ந்து கைலாயத்தின் அழகை மேலும் வளப்படுத்துகின்றன. யக்ச, கந்தர்வ, அப்ஸ்சரஸ் பெண்கள் இங்கு வந்து அங்குள்ள நீரோடைகளில் களிப்புடன் நீந்தி விளையாடி அங்கு மலர்ந்திருக்கும் நீல, சிவப்பு நிறங்களைக் கொண்ட தாமரை மலர்களைப்



பறித்து மாலை கட்டிச் சிவனுக்குப் போட்டு வணங்குவர். அத்துடன் அம் மலர்களால் கட்டிய மாலைகளைத் தாமும் அணிந்து மகிழ்வர். கைலாயத்தின் ஒரு பகுதியில் அவநந்தா, நந்தா என்ற இரு புண்ணிய நதிகள் அமைதியாகப் பாய்கின்றன. இந்த நதிகளில் நீராடி விளைாடத் தேவமகளிர் அடிக்கடி இங்கு வருவர்.

**இ**ப்பிரதேசம் புனிதமானது. சிவனுக்கும் பார்வதிக்கும் விருப்பமான இருப்பிடமும் இதுதான். அதனால் தான் சிவனினதும் பார்வதியினதும் திருமணம் இங்கு நடைபெற்றது. அதைவிட அசுரர்களின் கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் பிரம்மாவிடம் அதை முறையிடப் பிரம்மா அவர்களை இங்கு அழைத்து வந்து சிவபெருமானிடம் முறையிட்டார். அதனால் அவர்



அங்கு தவமிருந்தபோது மன்மதன் காமபானங்களை அவர்மீது விட்டு அவரைக் காமவசப்படுத முருகன் அவதரித்தான். அந்த முருகன் அவதரித்ததும் இங்குதான்.

**கேதுமாலவர்ஷ -** கைலாயத்தில் பல புனிதமான இடங்கள் உண்டு. அதில் கேதுமால வர்ஷவும் ஒன்றாகும். இது கைலாயத்தின் மேற்குப் பகுதியில் இருக்கிறது. இங்கு வலிமையும், உறுதியான மனமும், பேரழகும் கொண்ட பெண்கள் வாழ்கின்றனர். பலாமரங்கள் நிறைந்துள்ள இவ்விடத்தில் ஏராளமான பசுக்கள் உள்ளன. இங்குள்ள மக்கள் சிவபக்தர்கள். சிவனின் மீது மட்டற்ற அன்பு கொண்டவர்கள்.

**பத்ராஜவர்ஷ -** இப் பட்டணம் கையாலயத்தின் கிழக்குப் பகுதியில் உள்ளது. இங்கு சால மரங்கள் அதிகம் உண்டு. இங்கு வசிப்பவர்களுக்கு ஆயுள் அதிகம். பல்லாயிரம் ஆண்டுகள் நோய்நொடிகளின்றி ஆரோக்கியமான வாழ்வர். இங்குள்ளவர்களிடம் கள்ளம், கபடமில்லை. மிகமிக நம்பிக்கைக்குரியவர்கள். அன்புடன் எல்லோரையும் மதித்து வாழ்பவர்கள். இங்கு பல அழகிய மலைகள் உண்டு. அம் மலைகளில் இருந்து பாயும் ஆறுகளில் அப்ஸ்சரஸ் பெண்கள் வந்து மகிழ்வுடன் நீராடுவர். மாதம் மும்மாரி பொழிவதால் இவ்விடம் எப்போதும் பசுமைமிக்க சோலைகளாகவே இருக்கும். இங்குள்ளோர் சிவபெருமொனை வழிபடுபவர்களாவர்.



**கிரும்புருஷ வர்ஷ -** இங்கிருப்போர் மிகவும் பலசாலிகள். ஆயிரம் ஆண்டுகள் வரை இங்குள்ளோர் வாழ்வர். அழகான பலமுள்ள திடகாத்திரமான ஆண்களும் தேவமகளிர்களான அப்ஸ்சரஸ் பெண்களைப் போன்ற அழகிய பெண்களும் இங்கு வாழ்கின்றனர். இங்கு பலாக்ச மரங்கள் ஏராளமாக உண்டு. இங்கும் ஏராளமான மலைகளும், அதிலிருந்து பாயும் நதிகளும் உள்ளமையால் இப்பிரதேசத்தில் உணவுப் பொருட்களுக்கு ஒருபோதும் தட்டுப்பாடுகள் ஏற்படுவதில்லை. மிக்க மகிழ்வுடன் சகலவளங்களையும் உடைய மக்கள் இங்கு வாழ்கின்றனர்.



**ஹரிவர்ஷ -** இங்கு வாழும் மக்கள் வெள்ளியைப் போல ஒளியுடையவர்கள். தேவர்களைப் போல அழகான தோற்றமும், பலமும், பொருளும் உள்ள ஆண்கள் இங்கு வசிக்கின்றனர். தேவமகளிரைப் போல மிக்க அழகான பெண்கள் இங்கு வசிக்கின்றனர். இவர்களின் பிரதான உணவு கருப்பஞ்சாறாகும். முதுமையில்லாது பல்லாயிரம் ஆண்டுகள் வலிமையுடன் இப்பிரதேச மக்கள் வாழ்வார்கள்.



இங்கும் வளமான மலைகளும், வற்றாத ஆறுகளும் உண்டு. இயல்பாகவே வளம் மிகுந்தது இப்பிரதேசம்.

**இளவிருத வர்ஷ** - இங்கு சூரியனது வெப்பம் அதிகரிப்பதில்லை. இதமான மெல்லிய வெப்பம் இப்பிரதேசமெங்கும் பரவியுள்ளது. இங்கு வாழும் ஆண்கள் திடகாத்திரமான பலசாலிகள். பெண்களின் கண்கள் தாமரை மலரைப்போல இருக்கும். மிகவும் அழகான பெண்கள் இவர்கள். இங்கும் பல மலைகள் உள்ளன. இங்கிருந்து பல ஆறுகள் பாய்கின்றன. நீரோடைகளும், குளங்களும், பெரும் மரங்களையும் கொண்ட பிரதேசம் இது. இப் பிரதேசத்தின் அழகை ரசிப்பதற்காகத் தேவர்களும், அவர்களது குடும்பங்களும் இங்கு வருவார்கள். சகல வளங்களையும் கொண்ட ரம்மியமான ஒரு பிரதேசம் இது.



**ரம்யக வர்ஷ** - இங்கு வாழ்வோர் அழகுமிக்கவர்கள். இங்கு ஒரு பழம்பெரும் ஆலமரம் உள்ளது. அதன் சாற்றை அங்கு வாழும் மக்கள் உட்கொண்டு பல்லாயிரமாண்டுகள் உயிர் வாழ்கின்றனர். ஆண்கள் மிகுந்த பலசாலிகளாகவும், அறிவாளிகளாகவும் இருப்பதற்கு இந்த ஆலமரத்தின் சாறே உதவி செய்கிறது. இங்கும் பல வளமான மலைகள் உள்ளன. அவற்றில் இருந்து பல ஆறுகள் ஊற்றெடுத்துப் பாய்கின்றன.



**ஹிரண்வன வர்ஷ** - இப் பிரதேசத்தில் ஹிரண்யவதி என்ற ஆறு பாய்கிறது. இங்கு உள்ள வளமான மண் பயிர்ச்செய்கைக்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. இங்குள்ளோர் அனைவரும் பெரும் தனவந்தர்களாவர். இவர்கள் தமது செல்வளத்தின் மூலம் பல்லாண்டுகள் ஆரோக்கியமாக வாழ்கின்றனர்.

**குரு வர்ஷ** - இப்பிரதேச மக்கள் தமக்கு வேண்டிய ஆடைகளை மரவுரிகளாகள் செய்து அணிகின்றனர். இங்குள்ள ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் இரத்தினங்களும், மாணிக்கங்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. மணல் இடங்களில் வெள்ளி மேலே தெரியும்படி காணப்படுகிறது. இவர்களுக்கு முதுமையும், நோய்களும் வருவதில்லை. மிகவும் ஆரோக்கியமாக வாழ்கின்றனர். இங்குள்ள பெண்களில் பெரும்பான்மையானவர்கள் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றுச் சுகமாக வாழ்கின்றனர். இவர்களும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வாழும் பேற்றைப் பெற்றுள்ளனர்.





## 14. பாரத வர்ஷம்

**பா**ரத வர்ஷத்தின் வடக்கெல்லையாக இமயமலை இருக்கிறது. ஏனைய பகுதிகளின் எல்லைக்களாகச் சமுத்திரம் விளங்குகிறது. இங்குவாழும் வாழ்க்கை கர்மாவாகும். அதனால் பாரதவர்ஷத்திற்குக் கர்மபூமி என்ற சிறப்புப் பெயர் உண்டானது. அதனால் இது போகத்திற்குரிய பூமியல்ல. ஞானத்திற்குரிய பூமியாகும்.



**பா**ரதவர்ஷம் என்ற இந்தப் புனித பூமி கசேரு, தாமரபர்ணம், கபஸ்தமானம், நாகத்வீபம், சௌமயா, கந்தர்வ, வருண பூமி என எட்டுவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தப் புனித பூமிக்குக் கிழக்குத் திசையில் கிராதர்களும், மேற்குப் பகுதியில் யனவர்களும் வசிக்கின்றனர்.

**பா**ரதவர்ஷத்தில் பிராணமர்களும், சத்திரியர்களும், வைசிகரும், சூத்திரர்களும் வசிக்கின்றனர். அவர்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட தொழில்களைச் சிறப்பாகச் செய்துவருகின்றனர். அத்துடன் அவர்கள் அறம், பொருள், இன்பம் என்பவற்றினூடாக வீடுபேற்றை அடைய முயல்கின்றனர். அரசர்களை இங்கு சாம்ராட் என்று உயரிய மதிப்பு மிக்க பெயரிட்டு மக்களும், முனிவர்களும், பிராமணர்களும் அழைக்கின்றனர். இங்குள்ள இமயமலை பரிசுத்தமானது. இங்கு சென்று முனிவர்கள் தவம் செய்து தாம் தான் வேண்டி இறைவர்களை அடைவர். கங்கை, சிந்து, காவேரி போன்ற புண்ணிய நதிகள் இங்கு பாய்கின்றன. இவை நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதோடு தமது புனிதத்தன்மையால் அவை அங்கு நீராடுவோரது பிறவிப் பிணிகளை அறுத்து அவர்களை இறைவனோடு சேர்த்து வைக்கின்றன.

**இ**ங்கு பிறந்த அரசர்கள் தமது வலிமையினால் தமது பெயர்களில் ராஜ்ஜியங்களை உருவாக்கி அவற்றை நீதிநெறியுடன் ஆண்டுவந்தனர். பல வம்சங்கள் உருவாகின. குரு, பாஞ்சால, சால்வம், சூரசேனம், வத்சம், கலிங்க, மரகதம் என்பவை மாநிலங்களாகும். சரித்திர நூல்கள் இங்கு ஐம்பத்தாறு அரசுகள் இருந்ததாகக் கூறுகின்றன. இந்த மாநிலங்கள் யாவும் வடக்கில் உள்ளவை.



வாலிக, அபிர, சௌபிர, ஷக, கேகய, மத்ர, கஷ்மீர், காம்போஜம் ஆகியவையும் வடமாநிலங்களாகும்.

**பா**ரதவர்ஷத்தின் கிழக்குப் பகுதியில் ஆந்திரவள, சுஜராக, அந்தர்கிரி, வஹிர்கிரி, பிரபங்க, பங்க, மலத, மளவர்ணிக, பிரம்மோத்தர ஆகியவை இருந்தன. இதன் தெற்குப் பகுதியில் கலிங்கம், மகாராஷ்டிரா, கேரளம் போன்ற பல ராஜ்ஜியங்கள் இருந்தன. மேற்கில் நாசிக, மஹேய, கச்சிய, சுராஷ்டிரா போன்ற மாநிலங்கள் இருந்தன.

## 15. வானசாத்திரம்



**இ**ப்பேரண்டத்தில் பதின்நான்கு லோகங்கள் உள்ளன. அவற்றில் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மஹர்லோகம், ஜனலோகம், தபலோகம், சத்தியலோகம் என்ற ஏழு லோகங்களும் மேல்லோகம் என்று சொல்லப்படுகின்ற. மிகுதியாக உள்ள அதலலோகம், சுதலலோகம், நிதலலோகம், கபஸ்தலலோகம், மஹதலலோகம், ஸ்ரீதலலோகம், பாதாளலோகம் ஆகிய ஏழு லோகங்களும் கீழுலகலோகங்களாகும்.

**காலம்** - கால அளவுகளில் மிகவும் இனிய அலகு நிமிடமாகும். ஆனால் இப்போது வினாடி வந்துவிட்டது. பதினைந்து நிமிடங்கள் ஒரு கஷ்தா. முப்பது கஷ்தைகள் ஒருகாலம். முப்பது காலங்கள் ஒரு முகூர்த்தம். முப்பது முகூர்த்தங்கள் ஒருநாள். ஒருநாள் பத்துப் பிரிவுகளைக் கொண்டது. பிராத காலம், மத்தியகாலம் (முற்பகல்), அபர்ணகாலம் (பிற்பகல்) சயன்ஹுகாலம் (மாலை) என்று ஒருநாள் பிரிக்கப்பட்டுள்ளது. பகலில் பதினைந்து முகூர்த்தங்களும் இரவுக்குப் பதினைந்து முகூர்த்தங்களும் உள்ளன. பதினைந்து நாட்கள் ஒருபட்சமாகும். இரண்டு பட்சங்கள் ஒரு மாதமாகும். இரண்டு மாதங்கள் ஒரு ருதுவாகும். மூன்று ருதுக்கள் ஒரு அயனமாகும். இரண்டு அயனங்கள் ஒருவருடமாகும். சித்திரை முதல் பங்குனி வரை உள்ள பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருடமாகும்.

**ஆ**காயத்தில் இலட்சக்கணக்கான நட்சத்திரங்கள் மின்னுகின்றன. அவற்றுள் சப்தரிஷிகள், துருவநட்சத்திரம், அருந்ததி நட்சத்திரம் என்பவை புனிதமான முக்கிய நட்சத்திரங்களாகும். நட்சத்திரங்கள்யாவும் துருவநட்சத்திரத்தைச் சுற்றி வருகின்றன.

**மே**கங்கள் ஆக்கிநேய மேகம், பிரம்ம ஜமேகங்கள், பங்கஜ மேகங்கள் என மூன்று வகைப்படும். ஆக்கிநேய மேகங்கள் இடி இடிக்காது, மின்னல் மின்னாது பெருமழையைப் பொழியும். மலைமீது உலாவும் மேங்களை பிரம்மய மேகங்கள் என்று சொல்வர். இந்த மேகம்

பலத்த இடிமின்னலோடு தான் மழையைப் பொழியும். பங்கஜ மேங்கள் வானில் காற்றின் திசைக்கேற்ப நகர்ந்து செல்லும். இவை மிகவும் அமைதியான மேகங்களாகும்.

## சூரியனதும் சூரியவம்சமும்



**மு**னிவர்கள் வாயுதேவனை நோக்கி, "பிரம்மரிஷியே, இனி எனக்குச் சூரியவம்சத்து அரசர்களின் வரலாற்றைக் கூறுங்கள்" என்றனர்.

"**சூ**ரிய தேவனுக்கு வைவஸ்வதமனு என்பவன் பிறந்தான். அவனுக்கு இஷ்வாகு, நாபாகன், திருஷ்டன், சரியாதி, நரிஷ்யந்தன், பிராம்சு, நாகோதீஷ்டன், கருஷன், பருசரத்ரன் என்ற ஒன்பது பிள்ளைகள் பிறந்தனர். இவர்களே ஒன்பது மனுக்களாவர். இஷ்வாகுவிற்கு நூறு பிள்ளைகள் பிறந்தனர். இவர்களுள் மூத்தவன் விகுசி, இரண்டாவது மகன் நாபாகன். நாபாகனுக்கு அம்பரீசன் என்பவன் பிறந்தான். அவன் மிகுந்த பலசாலியாவான். திருஷ்டனுக்கு தர்ஷ்டகன் என்பவன் பிறந்தான். இவன் பலவீனனாக இருந்தான். சரியாதிக்கு ஆனர்த்தனன் என்ற புதல்வனும், பேரழகு வாய்ந்த சுகன்னி என்ற புதல்வியும் பிறந்தனர். பேரழகு வாய்ந்த சுகன்னிக்கு குருடரான சவனர் என்னும் மகரிஷிக்கு கட்டிக் கொடுத்தார். பின் அஸ்வினி தேவதைகள் அவருக்குக் கண்பார்வையைக் கொடுத்தனர்.



**சு**கன்னியின் தந்தையான சரியாதி மன்னனுக்கு நாலாயிரம் மனைவிகள் இருந்தனர். அவர்களுக்குச் சுகன்னி ஒருத்தி தான் பெண் குழந்தை அதனால் எல்லோரும் அவள் மீது அளவில்லாத அன்பை வைத்திருந்தனர்.

**ச**ரியாதி மன்னனின் தலைநகருக்கு அருகே பெரியதொரு வனம் இருந்தது. அங்கிருந்த குளக்கரையில் பார்க்கவர் என்ற மா முனிவர் காற்றைக்கூடச் சுவாசிக்காது தவம் செய்தார். அவரைப் புற்று மூடி இருந்தது. ஒரு நாள் சரியாதி மன்னன் தனது மனைவியோடும், மகளோடும், படைவீரர்களோடும் அந்த வனத்திற்கு வந்தான். சுகன்னி தனது தோழிகளோடு அப்புற்றின் அருகே வந்து அதை விசித்திரமாகப் பார்த்தாள். அந்தப் புற்றில் இருந்த பொந்தில் இருந்து மின்மினிப் பூச்சியைப் போல ஒளி மின்னியது. இது என்னவாக இருக்கும் என்று நினைத்த சுகன்னி ஒரு முள்ளை எடுத்து அதனால் குத்திப் பார்த்தாள்.










அது முனிவரின் கண். முனிவர் தவம் கலைந்து எழுந்தபோது ஒரு பெண் தன்னருகே நிற்பதைக் கண்டு, ‘‘இவ்வாறு ஏன் செய்தாய்? தூரச் செல்’’ என்றார். அது சுகன்னிக்கு விளங்காததால் மேலும் அவரது கண்ணை முள்ளால் குத்தினாள். அதனால் முனிவருக்குப் பெரும் வேதனை ஏற்பட்டது, கோபமும் வந்தது.

**அ**ப்போது அரசனுக்கும், மனைவியர்க்கும் வந்த படைகளுக்கும் மலமும் சலமும் போகாது தடைப்பட்டது. அதனால் துன்பப்பட்ட அரசன் அனைவரையும் அழைத்து, ‘‘யார் யார் என்ன பாவம் செய்தீர்கள் சொல்லுங்கள்’’ என்றான், ‘‘அரசே தடாகத்தின் ஒருகரையில் பார்க்கவ முனிவர் தவம் செய்கிறார். அவருக்கு யாரோ துன்பம் செய்து விட்டனர்’’ என்று சிலர் கூறினர்.

‘‘**மு**னிவர்களே, இனி சூரியன் முதலான கிரகங்களின் நிலையைச் சொல்கிறேன். சூரியனது தேர் பதினாயிரம் யோசனை விசாலமுடையது. அந்தத் தேருக்கு காயத்ரி, பிருகதி, உஷ்ணிக், ஜகதீ, திருஷ்ருப், அனுஷ்ருப், பஷ்தி என்ற சந்தங்கள் ஏழுமே குதிரைகளாகப் பூட்டப்பட்டுள்ளன. சூரியன் தென்திசையை அடையும் போது ஜோதிச் சக்கரத்தின் கடைசியை அடைந்தவனாகி எறிந்த அம்பைப் போல் விரைவாக ஓடுவான். சூரிய பகவான் தான் இரவு பகல் ஏற்படக் காரணமானவன். யோகிகளுக்கு அவன் பற்றுக்கள் அகலக் காரணமாகவும் இருக்கிறான். சூரியனின் வெப்பம் எங்கும் ஒரே அளவினதாகவே இருக்கும். அவன் திக்குக்கள் எதிலும் எவர்களுக்கு எங்கே காணப்படுகிறானோ, அங்கே உதயம் என்றும், அதற்கு நேர் எதிரே அஸ்தமனம் என்றும் கொள்ளப்படும். சூரியன் உதயமானது முதல் கிரணங்கள் வளர்ந்து நண்பகலுக்கு மேல் கிரணங்கள் சுருங்கப் பெற்று அஸ்தமனமாகிறான்.



**இ**ந்த உதய அஸ்தமனங்களைக் கொண்டு தான் கிழக்கு, மேற்கு என்று திசைகள் கணிக்கப்பட்டன. இதைக் கொண்டு வலது புறம் தென் திசை என்றும், இடது புறம் வடதிசை என்றும் கணிக்கப்பட்டது. மகாமேரு மலையில் இருக்கின்ற பிரமசபைக்குச் செல்லும் போது சூரிய கிரணங்கள் ஒளிமழுங்குவதால் அச்சபையைச் சூரியன் காய்வதில்லை. இது போன்ற உதய அஸ்தமனங்களால் கிழக்கு முதலிய திசைகள் ஏற்பட்டிருப்பதால், மேரு மலையானது சகல காலங்களிலும் வடக்காகவே ஆகின்றது. அதனால் பிரமசபையில் சூரிய ஒளி படாமையால் பகலும் இரவாகவே இருக்கும்.

**ஜோ**திச் சக்கரத்தில் திரிகின்ற சூரியன் தென்திசையிலிருந்து நீங்கி, உத்தராணயத்தின் முதலாவது மகரத்தில் வரும் போது, முன் வந்த பகல் இரவுகளை விட வேறுபாடுகள் உடையவனாக பகலிரவை உண்டாக்குவான். கும்பம் மீனம் என்ற இரு ராசிகளையும் கடந்து மேடராசியில் பிரவேசிக்கும் போது பகலிரவுகள் சரியாக வரும். பின் அங்கிருந்து சஞ்சரிக்கும் போது பகல் அதிகரிக்க இரவு குறையும். இவ்வாறு மிதுனம் வரை சூரியன் சென்று கர்க்கடக ராசிக்கு வரும் போது தட்சணாயனம் உண்டாகும். தட்சணாயத்தில் சூரியன் விரைவாகச் சஞ்சரித்துக் கொண்டு பன்னிரண்டு முகூர்த்த காலமான பகலினால் பதின்மூன்றரை நட்சத்திரங்களையும், பதினெட்டு முகூர்த்த காலமான இரவினாலே ஏனைய பதின்மூன்றரை நட்சத்திரங்களையும் கடக்கின்றான்.



**ம**றுபடியும் உத்தராணயத்திற்கு வரும்போது, மந்தாமாகச் சஞ்சரித்துக் கொண்டு, முன்னைய இரவு பகல்களை உண்டாக்குகிறான். அதனால் உத்தராணயத்தில் பகலின் வளர்ச்சி பதினெட்டு முகூர்த்த அளவாகவும், இரவில் பன்னிரண்டு முகூர்த்த அளவாகவும் இருக்கும்.

**இ**ரவை உசை என்றும், பகலை வியுஷ்டி என்றும் சொல்லப்படும். இந்த உசை, வியுஷ்டியின் நடுவில் இருப்பது சந்தி என்று சொல்லப்படும். இந்தச் சந்தி ஏற்படும் போது மந்தேகர் என்ற அரக்கர் சூரியனைப் புசிக்க முயல்கின்றனர். அவர்களுக்கு நித்திய மரணமும் உடல் அழியாது இருக்கும் என்று பிரமதேவர் சாபமிட்டிருக்கிறார். அவ் அசுரர்கள் சூரியனை உண்ண முயலும் போது சூரியனுக்கும் அசுரர்களுக்கும் இடையே கடும் யுத்தம் நடைபெறும் அப்போது பிராமணர்கள் மந்திரம் ஓதி நீரைத் தெளிப்பர். அந்த நீர் ஆயுதமாகச் செயற்பட்டு அசுரர்களை அழிக்கும்.



**அ**தன் பின் பிராமணர்கள் அக்கினி கோத்திரத்துடன் மந்திரம் ஓதச் சூரியன் மீண்டும் பிரகாசிப்பான். அந்த மந்திர வடிவானது விஷ்ணுவின் உருவில் இருப்பதால் தான் அசுரர்கள் அழிந்து போகின்றனர். விஷ்ணுவின் அருளால் சூரியன் பிரகாசிப்பதால் அவ் அசுரர்கள் அழிகின்றனர். அதனால் யாரும் சந்தியாவந்தணம் செய்யாது விடலாகாது. விட்டுவிட்டால் சூரியனைக் கொன்ற பாவத்தை அவன் அடைவான்.

**ப**தினைந்து நிமிடங்கள் ஒரு காஷ்டை, முப்பது காஷ்டைகள் ஒரு கலை, முப்பது கலைகள் ஒரு முகூர்த்தம், அவை முப்பது சேர்ந்தால் ஒரு நாளாகும். இதில் ஒரு முகூர்த்த

காலமே சந்தியாவந்தனத்துக்கு உரிய காலமாகும். உதயம் தொடங்கிச் சூரியன் மூன்று முகூர்த்தம் செல்லும் அளவும் பிராதக் காலம். அது பகலில் ஐந்தில் ஒரு பங்காகும்.

**சூ**ரியன் கடகராசியில் இருக்கும் போது தட்சிணாயணமும் மகரராசியில் இருக்கும் உத்தராயணமும் ஆகும். சுவேத மலைக்கு வடக்கே சிருங்கவான் என்ற மலை இருக்கிறது. அதற்கு மூன்று முடிகள் உண்டு. ஒரு முடி தெற்கேயும், மற்றொன்று வடக்கிலும், இன்னொன்று மத்தியிலும் உண்டு தெற்கு முடியில் சூரியன் சஞ்சரிக்கும் போது தட்சணாயணமும், வடக்கு முடியில் சஞ்சரிக்கும் போது உத்தராயணமும், நடுவே சஞ்சரிக்கும் போது விஷுவமும் வருகிறது. கிருத்திகையின் முதல் பாகத்தில் சூரியன் இருக்கும் போது



சந்திரன் விசாக நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் இருப்பான். சூரியன் விசாக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் போது சந்திரன் கிருத்திகையின் முதலாம் பாகத்தில் இருப்பான். இந்தக் காலம் தான் மகாவிசுவம் என்ற புண்ணிய காலமாகும். அப்போது பிதுர்களின் நன்மைக்காகப் பிராமணர்களுக்குத் தானம் கொடுக்க வேண்டும்.

**மு**ன்பு லோகா லோகம் என்ற மலையைப் பற்றிச் சொன்னேன். அதன் நாற்புறங்களிலும் கர்த்தமப் பிரஜாதிபதியின் பிள்ளைகள் இருக்கிறார்கள். அகத்திய வீதிக்கு வடக்காகவும் அஜ வீதிக்குத் தெற்றாகவும் வைகவாகன வழிக்கு வெளியில் இருக்கின்ற மார்க்கம், பிதுர்யானமாகும். அதுதான் பிதுர்லோகத்திற்குச் செல்லும் வழியாகும். அங்கே சில முனிவர்கள் தவம் செய்து கொண்டிருப்பர். அங்கு வாழும் முனிவர்கள் பிரமாவின் நாள் வரை அவர்களும் உயிரோடு இருப்பர். அந்தக் காலத்தில் பூமி முதல் துருவன் இருக்கும் இடம் வரை அழிந்து விடும். சப்தரிஷிகளுக்கு மேலே வட புறத்தில் துருவ நட்சத்திரம் உள்ள இடம் மிகவும் பிரகாசமான ஆகாயமாகும்.

**அ**ந்தஸ்தானம் விராட் புரிசனுக்கு இருதய நாடிஸ்தானமாகும். அங்கே மகாவிஷ்ணு எழுந்தருளியிருக்கிறார். அதனால் அதற்கு விஷ்ணுபதம் என்ற பெயர் ஏற்பட்டது. அந்த ஸ்தானம் யோகிகளுக்கு பாவ புண்ணியங்களை ஒழிக்குமிடமாகும். அந்த உத்தமமான இடத்திற்கு யோகிகள் சென்று ஆனந்தத்தோடு இருப்பர். அவர்கள் அவ்வாறு ஆனந்தத்தோடு கூடியிருக்கும் இடம், விஷ்ணுவுடைய பரமபதமாகும். சராசரங்கள் யாவும் குறுக்காவும் நெடுக்காகவும் கோர்க்கப்பட்டு எங்கே இருக்கின்றதோ, அந்த இடம் விஷ்ணுவின் பரமபதமாகும். எது ஆகாயத்தில் சூரியனைப் போல ஞானிகளுக்கு ஞானத்தால் பிரத்தியட்சமாக விளங்குமோ, அதுவே விஷ்ணுவின் பரமபதமாகும். அங்கே சென்றோர் மோட்சத்தை அடைவர். அதை மோட்சத்தானமான பரமபதம் என்று சொல்வர்.




**து**ருவன் அங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறான். அந்தத் துருவனிடத்துத்தான் சகல கிரக நட்சத்திரங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அவற்றில் மேகங்கள் நரட்டப்பட்டுள்ளன. அதில் மழை உண்டாக்கப்பட்டுள்ளது. மழை சகல சீவராசிகளுக்கும் போசனையாக இருக்கிறது. இவ்விதமான இந்த விஷ்ணு பதம் என்கின்ற பரிசுத்தமான மூன்றாவது ஸ்தானமானது மூன்று உலகங்களுக்கும் ஆதாரமாகவும் விருத்திக்கான ஏதுவாகவும் இருக்கிறது.


**வி**ஷ்ணு பதத்தில் இருந்து தான் சகல பாவங்களையும் போக்க வல்ல கங்கை நதி உண்டாகித் தேவ மகளிரின் சரீரத்தில் பூசப்பட்ட குங்குமப் பூச்சினால் பொன் நிறமுடையதாக விளங்குகிறது. மகா விஷ்ணுவின் இடது திருவடியின் கட்டை விரல் நகத்தில் இருந்து பெருகிவரும் அந்தக் கங்கை நதியைத் துருவன் இரவும் பகலும் தனது தலையில் தாங்குகிறான். அதன் பின் சப்தரிஷிகள் பிராணாயாமம் செய்து, நீராடுகிறார்கள்.

**க**ங்கை நதியின் நீரால் சந்திர மண்டலம் நன்றாக நனைக்கப்பட்டு இரவில் சக்தி மிகுந்து பாய்கிறது. அதன் பின் அது மேருமலையில் விழுந்து சீதா, அழகநந்தா, சட்சு, பத்திரை என்ற பெயர்களைப் பெற்று நான்கு திசையும் பாய்ந்து உலகைச் சுத்தப்படுத்துகிறது. இந்நான்கு நதிகளில் ஒன்றான அழகநந்தை என்ற கங்கையைச் சிவன் தனது சடா முடியில் தரித்துள்ளார். அதன் பின் அக் கங்கை பூமிக்குப் பாய்ந்து சென்று சாகர குமாரர்களின் எலும்புகளை நனைத்து, அப்பாவிகளைச் சொர்க்கத்திற்கு அனுப்பி வைத்தது. இக் கங்கையில் நீராடினால் சகல பாவங்களும் நீங்கிப் புண்ணியம் உண்டாகும். புத்திரர்கள் அந்நீரால் பிதுர்களுக்குத் தர்ப்பணம் ஒரு முறை செய்தால், அந்தப் பிதுர்கள் நூறு ஆண்டுகள் திருப்தியடைவர்.



**க**ங்கை நதிக்கரையில் பிராமணரும் சத்திரியரும் மகா விஷ்ணுவை யாகங்களால் ஆராதித்து மிகுந்த செல்வத்தை அடைகின்றனர். யோகிகள் அக் கங்கை நீரில் நீராடிப் பாவங்களைப் போக்குவர்.

**அ**ந்தக் கங்கை நதியானது தன்னில் நீராடுபவர்களையும், உண்பவர்களையும், துதிப்பவர்களுக்கும், காண்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் உள்ள பாவங்களை நீக்கி வைக்கும். நெடுந்தூரத்தில் வசிப்போர், ‘‘கங்கை, கங்கை’’ என்று நமஸ்கரித்தால் மூன்று பிறவிகளில் அவர்கள் செய்த பாவமனைத்தும் அற்றுப்போய்விடும். இவ்வாறு மூன்று உலகங்களையும் தூய்மைப்படுத்தும் கங்கை நதியானது விஷ்ணுவின் பாதக்கமலங்களில் இருந்தே உற்பத்தியாகிறது’’ என்றார் சூதமுனிவர்.







**சிம்சுமார சக்கரம்**



“**ம**காவிஷ்ணுவின் சிம்சுமாரம் என்ற நட்சத்திரக் கூட்டத்தின் வால் பகுதியில் துருவன் இருக்கிறான். அவன் அங்கிருந்து சுற்றிக் கொண்டு சந்திர சூரியர்கள் உட்பட்ட அனைத்துக் கிரகங்களையும் சுற்றித் திருப்புகிறான். அவைகள் சக்கரத்தைப் போல அவனைச் சுற்றிச் சுழல்கின்றன. சந்திர சூரியர்களும், ஏனைய கிரகங்களும், நட்சத்திரங்களும் காற்றின் வடிவமான கயிற்றினால் கட்டப்பட்டு, துருவனில் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றிலெல்லாம் நாராயணன் எழுந்தருளியிருக்கிறான். துருவன் அந்த உலக நாதனான மகா விஷ்ணுவை ஆராதித்து நட்சத்திரமயமான அந்த சிம்சுமாரத்தின் வாலினிடத்தில் இருக்கை பெற்றான்.

**அ**ந்த சிம்சுமாரத்திற்கு ஆதாரம் ஸ்ரீயப்பதியாகும். அந்தச் சிம்சுமாரம் துருவனுக்கு ஆதாரம். அந்தத் துருவன் சூரியனுக்கு ஆதாரம். அது போலச் சூரியன் தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் ஆதாரம். அது எவ்வாறென்றால் சூரியனின் அருளால் மழை பொழிய, உயிர்களுக்கான உணவு வகைகள் உண்டாகின்றன. உணவாலே தான் சகலதும் உண்டாகிறது. சூரியன் தனது உக்கிரமான கிரணங்களால் நீரை எடுத்து, சந்திரனிடம் ஒப்படைக்க, அந்தச் சந்திரன் மேகத்திடம் விட அந்த மேகங்களிலிருந்து மழை நீரானது உலகில் பொழிகிறது.

**ஆ**றுகள், குளங்கள், கடல்கள் ஆகியவற்றில் உள்ள நீரைச் சூரியன் கவர்ந்து மழையாகப் பொழிகிறான். ஆகாய கங்கையின் நீரைச் சூரியன் மேகங்களுக்குக் கொடுக்காது மழையாகப் பொழிவதும் உண்டு. அந்த நீர் மனிதனில் பட்டால் மனிதர் செய்த பாவங்கள் தீரும். மைத்ரேயரே, சூரியன் காணப்படும் போது எந்த நீர் மேகமின்றி ஆகாயத்திலிருந்து விழுகிறதோ அது தான் ஆகாய கங்கையின் நீராகும். ரோகிணி முதலிய இரட்டைப்பட்ட நட்சத்திரங்களில் சூரியன் உதித்துக் கொண்டேயிருக்கையில் வானத்திலிருந்து மேகமின்றி பொழியும் நீரானது சூரியன் பெய்யும் ஆகாய கங்கை நீராகக் கருதப்படும்.

**எ**ந்தத் தண்ணீராவது மேகங்களால் ஏற்கப்படுகிறதோ, அது பிராணிகளின் அமுதம் என்று சொல்லப்படும். அந் நீரைக் கொண்டு, சூத்திர நோக்கமுடைய மனிதர்கள் விதிப்படி பல வகைப்பட்ட யக்ஞங்கயைச் செய்து, தேவதைகளைத் திருப்பிப்படுத்துகின்றனர்.



**அ**தனால் இந்த உலகம் மழையினாலே காக்கப்படுகிறது. அது எப்படியென்றால் உணவை உற்பத்தி செய்வது மழை. அந்த மழையை உண்டாக்குபவன் சூரியன். அந்தச் சூரியனுக்கு ஆதாரமாக இருப்பவன் துருவன். அந்தத் துருவனுக்கு ஆதாரமாக இருப்பது சிம்சுமார சக்கரம். அந்தச் சக்கரத்திற்கு ஆதாரமானவன் நாராயணன். நாராயணன் அந்தச் சக்கரத்தின் மத்தியில் சகல பிராணிகளையும் தாங்கிக் கொண்டிருக்கிறான்.

## சூரியனின் ரதம்




**மு**னிவர்களே, சூரியன் சஞ்சாரம் செய்யும் தட்சண, உத்தராயண எல்லைகளின் நடுவே கிராந்திவிருத்தங்கள் நூற்றி எண்பத்து மூன்று. அம் மண்டலங்களில் தான் சூரியன் உத்தராயணத்தில் ஏறுவதும், தட்சணாயணத்தில் இறங்குவதுமான முன்நூற்று அறுபத்து நான்கு கதிகளினால் ஒரு வருடத்தைக் கழிக்கிறான். சூரியனது தேரான சூரியர்களாலும், ரிஷிகளாலும், கந்தர்வராலும், அப்ஸ்சரசுகளாலும், சர்ப்பங்களினாலும் ஏற்றப்பட்டிருக்கும் சூரியனது ரதத்தில் சித்திரை மாதத்தில் தாதா என்ற சூரியனும், கிரதஸ்தலை என்ற அப்ஸ்சரசும், புலஸ்தியர் என்ற முனிவரும், வாசுகி என்ற சர்ப்பமும், ரதபிருத்து இயக்கனும், கேதி என்ற அரக்கனும், தும்புரி என்ற கந்தர்வனும் வசிப்பார்கள். ஆனி மாதத்தில் மித்திரன் என்ற சூரியனும், அத்திரி என்ற முனிவரும், தக்சன் என்ற சர்ப்பமும், பவுருஷேயன் என்ற அரக்கனும், ஹாஹா என்ற கந்தர்வனும், ரதாய்வனன் என்ற யக்சனும் இருப்பார்கள்.

**ஆ**டி மாதத்தில் வருணன் என்ற சூரியனும், வசிட்டர் என்ற முனிவரும், சகஜநியை என்ற அப்ஸ்சரசும், கூ கூ என்ற கந்தர்வனும், நாகம் என்ற சர்ப்பமும், ரதன் என்ற ராட்சதனும், சித்திரன் என்னும் யசனும் வசிப்பார்கள். ஆவணி மாதத்தில் இந்திரன் என்ற சூரியனும், விசுவாவ என்ற கந்தர்வனும், சுரோதா என்ற யசனும், ஏலா புத்திரன் என்ற சர்ப்பமும், அங்கிரசு என்ற ரிஷியும், பிரமலோசை என்ற அப்ஸ்சரசும், சர்ப்பி என்ற ராட்சதனும் இருப்பார்கள்.

**பு**ரட்டாதி மாதத்தில் விவசுவான் என்ற சூரியனும், பிருகு என்ற முனிவரும், அனுமலோசா என்ற அப்ஸ்சரசும், சங்கபாலன் என்ற சர்ப்பமும், வியாக்கிரன் என்ற யசனும் இருப்பார்கள். ஐப்பசியில் பூஷா என்ற சூரியனும், வகருகி என்ற கந்தர்வனும், வாதன் என்ற ராட்சசனும், தனஞ்சயன் என்ற சர்ப்பமும், கௌதமர் என்ற முனிவரும் இருப்பார்கள். கார்த்திகையில் பர்ச்சனியன் என்ற சூரியனும், விசுவாசு என்ற கந்தர்வனும், பரத்துவாசர் என்ற முனிவரும், ஐராவதம் என்ற சர்ப்பமும், விசுவாகி என்ற அப்ஸ்சரசும், சேனஜித்து என்ற யசனும், ஆப என்ற இராட்சதனும் வசிப்பார்கள். மார்கழியில் அம்சன் என்ற சூரியனும், காசிபர் என்ற முனிவரும், தர்சயன் என்ற யசனும், மகாபத்மன் என்ற சர்ப்பமும், வித்தியுத்து என்ற இராட்சதனும், சித்திரசேனன் என்ற கந்தர்வனும் இருப்பார்கள். தைமாதத்தில் பகன் என்ற சூரியனும், கிருது என்ற முனிவனும், ஊர்ணாயு என்ற கந்தர்வனும், ஸ்பூர்ஜன் என்ற அரக்கனும், கார்கோடன் என்ற சர்ப்பமும், அரிஷ்நேமி என்ற யசனும், பூர்வசித்தி என்ற தேவ மங்கையும் வசிப்பார்கள். மாசிமாதத்தில் துவட்டா என்ற சூரியனும், ஜமதக்கனி என்ற முனிவரும், திலோத்தமை என்ற தேவதாசியும், கம்பளன் என்ற சர்ப்பமும், பிரம்மா பேதன் என்ற அரக்கனும், இருதசித்து என்ற யசனும், திருதராட்டிணன் என்ற கந்தர்வனும் வசிப்பார்கள். பங்குனியில் விஷ்ணு என்ற சூரியனும், விசுவாமித்திரர் என்ற முனிவரும், ரம்பை என்ற என்ற தேவ மங்கையும், சூரியவர்ச்சசு என்னும் கந்தர்வனும், சத்தியசித்து என்னும் யசனும், அசுவதரன் என்ற சர்ப்பமும், யக்ஞாபேதன் என்ற அரக்கனும் வாசம் செய்வர்.

“**ஒ**வ்வொரு மாதமும் அந்தந்த மாதத்துக்குரியவர்கள் ஸ்ரீ விஷ்ணுவின் சக்தியால் வியாபிக்கப்பட்டு சூரிய ரதத்தில் ஏறி இருந்து உலகை ஒளிரச் செய்கின்றனர். சூரிய மண்டலத்தில் பிரகாசிக்கும் சூரியனுக்கு ஒளி விருத்தியாகும்படி ரிஷிகள் துதிக்கிறார்கள், கந்தர்வர்கள் கானம் இசைக்கின்றனர், தேவமங்கையர்கள் நடனமாடுகின்றனர், அரக்கர்கள் சூரியனின் பின் செல்கிறார்கள், சர்ப்பங்கள் சுமக்கின்றன, இயக்கர்கள் கடிவாளத்தைத் தூக்கிப் பிடிக்கின்றனர், முனிவர்கள் சூரியனைச் சூழ்ந்து உபாசனை செய்கின்றனர், இவ்வாறு அவர்கள் தமது பணியைச் சிறப்புடன் செய்து வருகின்றனர்.

## சூரியனின் சிறப்புச் செயல்கள்



“**வா**யுபகவானே, சூரியரதத்தில் இருக்கும் அனைவரது தொழில்களையும் கூறினீர்கள். ஆனால் சூரியனது தொழிலைப்பற்றிக் கூறவில்லை. அதனால் சூரியனது சிறப்பையும் தொழிலையும் கூறியருளுங்கள்” என்றார் ஒரு முனிவர்.

"**இ**ருக்கு, யசுர், சாமம் என்ற மூன்று வேதங்களின் வடிவாக இருக்கும் மகா விஷ்ணுவின் சக்தியே சூரிய ரூப இருந்து காய்ச்சுவதுமல்லாமல் உலகின் பாவங்களைப் போக்கிக் கொண்டிருக்கிறது. அதனால் தான் ஆதித்தியன் முதலிய கணங்கள் ஏழிலும் ஆதித்தனே முக்கியமானவன். அந்தந்த மாதங்களுக்குரிய சூரியனது சக்தியாக விஷ்ணுவின் பிரபாகமே விளங்குகிறது. விடியற்காலையில் இரிக்குகளும், மதியவேளையில் யசுசுகளும், மாலைவேளையில் சாமங்களும் சூரியனின் சரீரமாகிச் சூரியனுக்குள்ளே விளங்குகின்ற மகா விஷ்ணுவைத் துதிக்கின்றன. அவ்வேளையில் ரிக், யசுர், சாம வேதங்கள் மகா விஷ்ணுவுக்குச் சரீரமாக இருக்கின்றன. இந்த விஷ்ணுவின் சக்தியானது பிரமாதிகளுக்குள்ளும் பிரவேசித்து அவற்றின் செயல்களைச் செய்கின்றன. ஆரம்பத்தில் விஷ்ணுவின் சக்தி இருக்கு வேதமான பிரமாவாகவும், ஸ்திதியில் யசுர் வேதமான விஷ்ணுவாகவும், முடிவில் சாப வேதமான ருத்திரனாகவும் விளங்கும் மகா விஷ்ணுவின் சக்தியே உதவி செய்து




பிரகாசிக்கிறது. இவ்வாறு வேதத்திரய ரூபமான மகா விஷ்ணுவின் சுக்த சாத்வீக சக்தியானது சூரியனில் பிரவேசித்திருப்பதால், சூரியன் சிறப்புடன் பிரகாசித்துக் கொண்டு உலகில் உள்ள தீமைகளையெல்லாம் அழிக்கிறான்.

**அ**த்தகைய சூரியனின் பிதுர்கள், தேவதைகள், மனிதர்கள் முதலியோரை மகிழ்வித்து இரவு பகலை உண்டாக்கிக் கொண்டிருக்கிறான்" என்றார் பராசர முனிவர்.

## சிவனின் நீலகண்டம்



**வா**யுதேவன் தொடர்ந்து சொன்னார், "மைத்ரேயரே, நீர் கேட்ட சரித்திரத்தை நான் முன்பு மரீசி முனிவரிடம் கேட்டறிந்தேன். அவர் கூறிய படி அதை உமக்கு நான் சொல்கிறேன். ஒரு சமயம் துர்வாசக முனிவர் உலகை வலம் வந்து கொண்டிருந்தார். அவர் ஒரு நாள் மிகவும் கொடிய மிருகங்கள் வாழும் காட்டு வழியே சென்ற போது அக்காட்டில் ஒரு பெண் தென்பட்டாள். அவளது கையில் ஒரு மாலையும், பரிமளமும் இருந்தது. அவர் அப்பெண்ணை நோக்கி, "பெண்ணே உன்னிடம் இருக்கும் அழகிய மாலையை எனக்குத் தருவாயா?" என்று கேட்டார்.



அந்தமங்கை அம் மாலையைக் கொடுக்கத் துர்வாசகர் அதைத் தனது தலையில் அணிந்து









கொண்டு அக்காட்டு வழியாகச் சென்ற போது, இந்திரன் தனது வாகனமான ஐராவதம் என்ற யானையின் மீதேறி வந்து கொண்டிருந்தான். அப்போது அவர் அணிந்திருந்த மாலை கழன்று விழ, துர்வாசகர் அதை இந்திரன் மீது வீசி எறிந்தார். இந்திரன் அதைத் தட்டிவிட அம்மாலை யானையின் மீது விழுந்தது. அதை அந்த யானை மூர்க்கத்துடன் எடுத்துத் தனது காலில் போட்டு மிதித்தது.



**அ**தைக் கண்டு மிகவும் கோபமுள்ள துர்வாசக முனிவர் கடுங்கோபங் கொண்டு, ‘‘இந்திரா, நீ உனது செல்வச் செருக்கால் நான் அணிவித்த மாலையை அவமதித்தாய். அதனால் நீ உனது சலக செல்வங்களையும் இழப்பாயாக. அத்துடன் உலகம் உனது மகாலட்சுமியின் அருள் அகன்று துன்பம் அடையக்கடவாய்’’ என்று சபித்தார்.

**அ**தைக் கேட்டு நடுநடுங்கிய இந்திரன், யானையை விட்டு இறங்கி தன்னை மன்னிக்குமாறு இரந்தான்.

‘‘**தே**வேந்திரா, நான் இதயமற்றவன், நான் யாரையும் மன்னிக்க மாட்டேன், நான் முனிவர்களுள் மாறுபட்டவன். முன்பு நீ கௌதவ முனிவரும் வேறு சில முனிவர்களும் உனது ஆணவமானபோக்கைக் கண்டித்துப் பின் மன்னித்தனர். நான் அப்படியானவன் அல்ல. வசிட்ட முனிவர் உன்னைத் துதிப்பதால் நீ அளவுக்கதிகமான இறுமாப்பு அடைந்துள்ளாய். அதனால் உன்னை நான் தண்டிக்காது விட மாட்டேன்’’ என்று கூறி விட்டுச் சென்று விட்டார். வேறு வழியில்லாத இந்திரன் கவலையோடு தனது இருப்பிடத்திற்குச் சென்றான்.

**அ**ன்று முதல் மூன்று உலகங்களும் லட்சுமியின் கடாச்சமற்றதால் மாறுபாடு அடைந்தன. முனிவர்கள் தவம் செய்வதை மறந்தனர். மழை பொழியவில்லை. பயிர்கள் செய்யப்படவில்லை. பூசைகள் கோவில்களில் நடைபெறவில்லை. மக்களிடம் ஞானம் குறைந்து காமம் அதிகரித்தது. அரக்கர்கள் தேவர்களை மிகக் கொடுமையாகத் தாக்கிக் கொண்டிருந்தனர்.

**அ**வற்றைக் கண்டு நடுநடுங்கிய தேவர்கள், பிரமதேவரிடம் சென்று தமது நிலையைக் கூறினார். இந்திரன் தனக்கு நேர்ந்த கதியைப் பிரமதேவருக்குக் கூறிக் கவலைப்பட்டான்.



**அ**வர்களது துயரங்களைக் கேட்டறிந்த பிரமதேவர் அவர்களை மகாவிஷ்ணுவிடம் சென்று முறையிடுமாறு கூறினார். பின் அவர்களை அழைத்துக் கொண்டு திருப்பாற்கடலை அடைந்து மகாவிஷ்ணுவை நினைத்து துதி செய்தார். பிரமதேவருடன் இந்திரன் முதலான தேவர்களும் துதித்தனர்.

**அ**வர்களது பிரார்த்தனைக்கு இரங்கிய மகா விஷ்ணு அவர்கள் முன் தோன்றினார். ‘‘தேவர்களே, மந்தார மலையை மத்தாகவும், வாசுகியைக் கடையும் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தை எடுங்கள். அதற்காக அசுரர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள் வரும் அமிர்தத்தில் ஒரு பகுதியை அவர்களுக்குத் தருவதாகக் கூறுங்கள். அமிர்தம் உருவானதும் நீங்கள் அமிர்தை அருந்துங்கள். அப்போது நீங்கள் பலசாலிகளாவீர்கள். நான் அந்த அமிர்தை அசுரர்களுக்குக் கிடைக்காமல் செய்கிறேன்’’ என்று மகாவிஷ்ணு அருளினார்.



**தே**வர்கள், மகாவிஷ்ணுவை வணங்கி நன்றி கூறிவிட்டு, அசுரர்களைச் சந்தித்து அமிர்தம் கடைவதற்காகத் தங்களுக்கு உதவி செய்தால் கிடைக்கும் அமிர்தத்தை உங்களுக்கும் தருகிறோம் என்று கூற, அசுரர்கள் அதற்குச் சம்மதித்தனர். அதன்பின் தேவர்களும் அசுரர்களும் ஒற்றுமையாகப் பாற்கடலுக்குச் சென்று மேருமலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். அப்போது விஷ்ணு ஒரு தந்திரம் செய்தார். அதன்படி தேவர்கள் வாசுகியின் வாலைப் பிடிக்கும் படியும் அசுரர்கள் வாசுகியின் வாய்ப்பகுதியைப் பிடிக்கும் படியும் செய்தார். பாற்கடலைக் கடையும் போது வாசுகியின் பெருமூச்சால் அசுரர்களின் பலம் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கியது. அத்துடன் அதன் பெருமூச்சுக் காற்று மேகங்களை அடித்துத் தள்ளியதால் மேகங்கள் அதன் வால்ப் பக்கம் சென்றன. அதனால் வால் பகுதியில் பெரு









மழை பெய்தது அதனால் தேவர்கள் களைப்பு நீங்கிப் பலமடைந்தனர். அப்போது மகாவிஷ்ணு ஆமை உருவில் தோன்றி மேருமலைக்கு உதவியாக இருந்து அதை வேகமாகச் சுழற்றினர். அத்துடன் வேறொரு திருமேனியைத் தாங்கி சங்கு சக்கர ஆயுதங்களுடன் தோன்றி வாசுகியின் வாலையும் தலையையும் பிடித்து இடமும் வலமுமாக இழுத்துக் கடைந்தார். அத்துடன் அவர் மிகவும் பெரியதொரு உருவத்தை எடுத்து மேருமலையின் மேற்புறத்தை ஆக்கிரமித்து அதைப் பலப்படுத்தினார். பின்பு விஷ்ணு பகவான் தேவரும் அசுரரும் அறியாத ஓர் உருவம் எடுத்து வாசுகிக்கும் தேவர்களுக்கும் பலத்தை அதிகரிக்கச் செய்தார். அப்போது காமதேனு உருவானது அதன்பின் அழகு சுந்தரியான மோகினி வாருணிதேவி தோன்றினாள். அவளது அழகு அசுரர்களை மெய் மறக்கச் செய்தது. மீண்டும் அவர்கள் பாற்கடலைக் கடைந்த போது பாரிஜாத விருட்சம் தோன்றியது. அதன்பின் அப்ஸ்சரஸ் மோகினிகள் பலர் தோன்றினர். அவர்களுடன் குளிர்மையான சந்திரனும் தோன்றினான் அந்தச் சந்திரனை ருத்திரமூர்த்தி எடுத்துக் கொண்டார்.



**அ**தன்பின் மிகவும் பயங்கரமான இரைச்சலுடன் ஆர்ப்பரித்தவாறு நஞ்சு பிறந்தது. அதன் கொடுமையைத் தாங்க முடியாது தேவர்கள் துன்பப்பட்ட போது சிவபெருமான் தோன்றி அந்த நஞ்சை எடுத்து உண்டார். அப்போது தன்வந்திரி என்ற தேவன் அமிர்த கலசத்துடன் பாற்கடலில் தோன்றினான். அவனைக் கண்ட தேவர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.

**அ**தன் பின்பு உலகமாதாவான மகாலட்சுமி அவதாரம் செய்தார். அவளைக் கண்டு தேவர்கள் மகிழ்ச்சியாரவாரம் செய்தனர். தேவர்கள் கீதங்களைப் பாடினர். அப்ஸ்சரசுகள் நடனமாடினர். கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்கள் ஒன்று கூடி வந்து திருமஞ்சன நீராட்டின. பாற்கடல் ஆணுருவாகி அழகிய மலர்மாலை ஒன்றைத் தாயாருக்குச் சாற்றினான். அலங்கார தேவதையாக மாறிய மகாலட்சுமி அனைவரும் பிரார்த்திக்க விஷ்ணு பெருமானின் திருமார்பில் எழுந்தருளினாள். அக்காட்சியைக் கண்ட முனிவர்கள் ஆனந்தத்துடன் அவர்களைத் துதித்தார்கள்.

**அ**தன்பின் மகாலட்சுமியான பெரிய பராட்டியார், தேவர்களை ஆசீர்வதித்தார். அதனால் தேவர்கள் மகிழ்ந்தனர். பெரிய பிராட்டியார் மீது பக்தி கொள்ளாத அசுரர்கள் தீயவற்றை அனுபவித்தார்கள். தன் வந்திரி அமுத கலசத்துடன் வர, அசுரர்கள் அதைக் கைப்பற்றினர்.







அதைக் கண்ட நாராயணன் ஓர் அழகிய பெண் உருவை எடுத்து அசுரர்களின் அருகில் வர, அவர்கள் அப்பெண்ணின் அழகில் மயங்கி அமுத கலசத்தை வைத்து விட்டு அவளின் பின் செல்ல நாராயணன் அந்த அமுத கலசத்தை எடுத்துத் தேவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தார். அதனால் தேவர்கள் பலசாலிகளாயினர். அதனால் கடுங்கோபங் கொண்ட அசுரர்கள், தேவர்களுடன் யுத்தம் செய்தனர். அமிர்தம் உண்ட தேவர்கள் மிக்க பலத்துடன் அசுரர்களுடன் மோதி, அவர்களைப் பாதாளத்திற்குத் துரத்தினர். அதன்பின் லட்சுமி கடாச்சத்தை இழந்த மூன்று உலகங்களும் லட்சுமி கடாச்சத்தைப் பெற்றன.



**அ**தன்பின் தேவ உலகம் சென்ற இந்திரன் மகாலட்சுமியை உள்ளன்போடு தொழுதான். அதனால் மகிழ்ந்த ஸ்ரீதேவிப் பிராட்டியார் இந்திரனின் முன்தோன்றி, “தேவேந்திரா, உனது பிரார்த்தனையால் நான் மிகவும் மகிழ்ந்தேன். உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்” என்றார்.

**தே**வேந்திரன் அவளை வணங்கி, “தாயே, தாங்கள் மூன்று உலகங்களிலும் எப்போதும் எழுந்தருளியிருத்தல் வேண்டும். எவனொருவன் உன்னை ஸ்ரீ தோத்திரத்தால் துதித்தால் அவனுக்கு நீ அருளல் வேண்டும்” என்று கேட்டான்.

“**தே**வேந்திரா, நீ ஆட்சி புரியும் உலகங்களை விட்டு நான் ஒருபோதும் நீங்க மாட்டேன். எவனொருவன் காலையிலும் மாலையிலும் ஸ்ரீ தோத்திரத்தால் என்னைத் துதிக்கிறானோ அவனுக்கு நான் கட்டாயம் அருள்புரிவேன்” என்று கூறினாள்.



“**பூ**ர்வத்தில் ஸ்ரீதேவி, பிருகு முனிவருக்கு கியாதி என்ற மனைவிக்கு மகளாக அவதரித்தாள் என்று சொன்னேன் அல்லவா? அவள் அமிர்தம் கடைந்தபோது திருப்பாற்கடலில் அவதரித்தாள் என்றும் கூறினேன். இது மட்டுமல்ல நாராயணன் எப்போதெல்லாம் உலகங்களில் அவதரிக்கிறானோ, அப்போதெல்லாம் ஸ்ரீதேவியும் அவதாரம் செய்வாள். முன்பு நாராயணன் அதிதியின் மகனாக அவதாரம் எடுத்த போது ஸ்ரீதேவிப் பிராட்டியார் பதுமை என்ற திருப் பெயருடன் அவதரித்தாள். நாராயணன் இராமனாக அவதாரம் எடுத்த போது ஸ்ரீதேவிப் பிராட்டியார் சீதையாக அவதாரம் எடுத்தவள்.





எம்பெருமானான நாராயணன், கண்ணணாக அவதாரம் எடுத்தபோது, பிராட்டியார் ருக்மணியாக அவதரித்தவள். இவ்வாறு எம்பெருமான் அவதாரங்கள் எடுக்கும் வேளைகளில் எல்லாம் பிராட்டியாரும் உடன் அவதாரம் எடுப்பாள். நாராயணன் மனித அவதாரம் எடுத்தால், பிராட்டியும் மனித அவதாரம் எடுப்பாள். இது அவதாரத்தத்துவமாகும்.

மைத்ரேயரே, மகாலட்சுமியின் இந்தத் திருவவதாரத்தை எந்த மனிதன் பக்தியுடன் பராயணஞ் செய்கிறானோ, எவன் பக்தியுடன் கேட்கிறானோ அவனது இருதயத்தில் பெரிய பிராட்டியான ஸ்ரீதேவி என்றும் பிரியாது மிக்க மகிழ்வுடன் குடியிருப்பாள். அவ்வாறு படிப்பவர்களின் வீடுகளில் வறுமை இருக்காது. இந்திரனால் சொல்லப்பட்ட இச் சுலோகம் வலிமையானது. பக்தியை உண்டு பண்ணுவது. ஸ்ரீதேவியை மகிழ்விப்பது'' என்றார் பராசரர்.

## 16. வசுவும் வசுதாராவும்

ஒரு சமயம் இந்திரனும், சகல தேவர்களும் சேர்ந்து இதுவரை செய்யப்படாத ஒரு மிகப்பெரிய அசுவமேத யாகத்தைச் செய்யத் தொடங்கினர். அந்த யாகத்திற்கு மூவுலகத்திலுமுள்ள பெரியவர்கள் அத்தனைபேரும் அழைக்கப்பட்டனர். எல்லா உலகங்களிலும் இருந்து வந்த முனிவர்களும், பிராமணர்களும் முறைப்படி வேதங்களை ஓதி யாகத்தைச் செய்தனர். இந்த யாகத்தில் ஆயிரக்கணக்கான மிருகங்கள் பலியிடப்பட்டன. அங்கு யாகம் செய்த முனிவர்கள் ஆயிரக்கணக்கான மிருகங்களைப் பலியிட்டபோது அவைபடும் வேதனைகளைக் கண்டு மிகவும் இரங்கினர். அதனால் அவர்கள் மிருகப்பலியை நிறுத்துமாறு கூறினர். ஓர் உயிரைக் கொலை செய்ய எந்த மனிதனுக்கும் உரிமையில்லை. அதனால் மிருகங்களைப் பலியிட்டு யாகங்களைச் செய்யாது தர்மமான முறையிலேயே யாகத்தைச் செய்யவேண்டும் என்று கூறினர். இது சம்பந்தமாக முனிவர்களுக்கும், தேவர்களுக்குமிடையே பெரும் வாதப்பிரதிவாதம் நடைபெற்றது. அது முற்றுப்பெறாததால் நீதிமானான மன்னன் உபரிசரவசுவை நடுவராக நியமித்து நீதியான முடிவைச் சொல்லுமாறு கேட்டனான். மன்னனான உபரிசரவசு இந்திரனின் நல்ல நண்பன். அதனால் அவன் யாகத்தின் போது மிருகங்களைப் பலியிடுவது சரியானது. அதை வேதங்களும் வலியுறுத்துகின்றன என்றான்.



அதனால் கோபங்கொண்ட முனிவர்கள், "நீ நடுநிலையாக நின்று தீர்ப்புக் கூறாது இந்திரன் உனது நெருங்கிய நண்பன் என்ற காரணத்தால் தேவர்களுக்குச் சார்பாகத் தீர்ப்பைக் கூறிவிட்டாய். அதனால் நீ பாதாளலோகம் சென்று யாகத்தின்போது அளிக்கப்படும் நெய்யை உண்டு வாழ்" என்று சபித்தனர். நெய்யை வசு என்றும் கூறுவர். தா என்றால்

பாய்தல் என்று பொருள். அதனால் பூமிக்கு வசுதரா என்ற பெயர் உண்டானது.

## 17. கலியுகம்

**சா**பங்களைத் தமக்குத் தாமே இட்ட முப்பெருந்தேவியர்களும் நதிகளாக மாறி ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. ஆயிரம் ஆண்டுகள் கழிந்த பின்பு லட்சுமி சாபம் நீங்கப் பெற்றுத் திரும்பவும் நாராயணனை அடைந்து மகிழ்வுடன் அவருடன் வீற்றிருந்தாள். அதன்பின் சரஸ்வதியும், கங்கையும் சாபம் நீங்கி மீண்டும் நாராயணனைச் சென்றடைந்தனர்.

**க**லியுகம் மிகவும் கொடுமையானது, புனிதமற்றது. மக்கள் நீதிநெறி தவறி வாழ்வார்கள். இலஞ்சம் கொடுப்பவர்களும், வாங்குபவர்களும் பெருகுவார்கள். இலஞ்சம் கொடாது எந்தச் செயலும் நடைபெறாது என்ற நிலை உருவாகும். மக்கள் அடுத்தவர்களைக் கெடுத்து இன்பங்காண்பர். ஒழுக்கம், நேர்மை, நிதானம், நீதிநியாயம் என்பன அற்றுப்போகும். எந்தத் தீமைகளைச் செய்தாவது ஒவ்வொருவரும் தனது நலன்களைப் பேணிக்காப்பர். புனிதமான துளசிச்செடி கவனிப்பாரற்றுப் போகும். வர்ணாச்சிரமதர்மங்கள் யாவும் தலைகீழாக மாறும். யாரும் வர்ணாச்சிரம தர்மப்படி வாழமாட்டார்கள். தாம் நினைத்தபடி வாழ்வர்.



**பி**ராமணர்கள் முறைப்படி வேதமோத மாட்டார்கள். அவர்கள் தமது பிழைப்புக்காக அரைகுறையாக வேதமோதுவர். முழுமையாக வேதத்தை முறைப்படி கற்றவர்கள் இருக்கமாட்டார்கள். அதனால் ஒவ்வொருவரும் தாம் ஓதுவதே சரியான வேதம் என வாதிடுவர். பிராணமர்களது ஒழுக்கங்கள் மாற்றமடையும்.

**இ**ல்லறம் நல்லறமாக இராது. குடும்பங்களில் சண்டை சச்சரவுகள், போட்டி பொறாமைகள் அதிகரிக்கும். அதனால் பிரிவுகளும், துன்பங்களும் உண்டாகும். இனத்தவர்களிடையே உண்மையான அன்பு இராது. தேவைக்கேற்ப நடந்து கொள்வார்கள். கணவன் மனைவியரிடையே பிரிவுகள் அதிகரிக்கும். சிறு சிறு விடயங்களைக் கூடப் பெரிதாக எடுத்துக் குடும்பங்கள் பிரியும்.

**ம**ழை பொய்க்கும். அல்லது பெருமழை பெய்து நாட்டை அழிக்கும். மழை பொய்ப்பதால் பயிர்கள் அழிந்துபோகும். நீர்நிலைகள் வற்றுவதால் நீருக்கும் பஞ்சம் ஏற்படும். செடி, கொடிகள், பழமரங்கள், பயிர்கள் உரிய பயனைத் தரமாட்டாது. பசுக்களை வருத்துவோர் தொகை அதிகரிக்கும். அவற்றின் மாமிசங்களை உண்போர் அதிகரிப்பர். அதன் மாமிசத்தை

விற்பனை செய்யும் வியாபார நிலையங்களில் பகிரங்கமாக மாமிசம் விற்கப்படும். தாவர உணவுகளை உண்போரின் தொகை படிப்படியாகக் குறையும். மக்கள் போசாக்கின்றிப் பலவீனர்களாக இருப்பார்கள். அதனால் அவர்களின் ஆயுள் குறையும். பல நோய்கள் வந்து அவர்களது இன்பமான வாழ்வைக் கெடுக்கும்.



**க**லியுகத்தில் இவ்வாறான கொடிய தீமைகள் அதிகரிக்கும் போது நாராயணன், விஷ்ணுயசன் என்ற பிராமணனுக்கு கல்கி என்ற புத்திரனாக அவதாரம் எடுப்பார். அவர் வாளேந்தியவாறு குதிரையில் சவாரி செய்து தீமைகள் செய்பவர்களை அழித்தொழிப்பார். கலியுக முடிவில் உலகம் பல்வேறு தீயசெயல்களால் பெரும் குழப்பமடையும். பெருந்துன்பங்கள் பலவும் வந்து மக்களைக் கொடுமைப்படுத்தும். பசி, பட்டினி, பஞ்சம் என்பன ஏற்பட்டு மக்களை அழிக்கும். இவ்வேளையில் பிரளயம் உண்டாகி உலகம் முழுமையாக அழியும். இவ்வாறு பெரும் துன்பங்களைக் கொடுத்த கலியுகம் முடிய மறுபடியும் நீதியான சத்திய உலகம் தோன்றும்.



**இ**வ்வாறு யுகங்கள் தோறும் சிருஷ்டியும், அழிவும் மாறிமாறி நிகழ்ந்து கொண்டிருக்கும். பிரமதேவரின் ஆயுள் முடியும் போது அண்டங்கள் யாவும் கடலால் சூழப்பட்டு அதனுள் மூழ்கிவிடும். அப்போது பிரம்மா, நாராயணனுடன் ஐக்கியமாகிவிடுவார். இதைப் 'பிராகிருதப்பிரளயம்' எனப்படும். இப்பிரளயம் ஏற்படும் போது கிருஷ்ணனும் பிரகிருதியும் இணைந்து ஒன்றாகிவிடுவர். ஊலகில் உள்ள அனைத்தும் மாய உருவங்களே. அவை தோன்றுவதும் அழிவதும் நாராயணனின் விருப்புக்கேற்பவே நடைபெறுகிறது. எல்லாம் அழிந்த பின்பும் அழியாமல் இருந்து மீண்டும் உலகைத் தோற்றுவிப்பவர் நாராயணன்.

## 18. யஜரு வல்லியர்



**ஜ**னக மகாராஜா பெரும் வீரர் பலசாலி. அயல்நாடுகளையெல்லாம் கைப்பற்றிச் சக்கரவர்த்தியானவர். அவருக்குத் தனது பெருமைகளை உலகிற்குத் தெரியப்படுத்த வேண்டும் என்ற ஒரு நினைவு வந்தது. அதற்காக இதுவரை

யாரும் செய்யாத ஒரு மிகப்பெரிய அஸ்வமேத யாகத்தைச் செய்ய நினைத்தார். அதற்கான ஏற்பாடுகளை மிகவும் பெரியளவில் செய்ய ஆரம்பித்தார். மூவுலகங்களிலும் உள்ள அரசர்கள், பிராமணர்கள், வேதியர்கள் அனைவரையும் அழைத்தார். தேவர்கள் அனைவரும் வந்திருந்தனர்.

**யா**கம் தொடங்கமுன் ஜனக மகாராசா யாகசாலைக்கு வந்தார். அங்கு லட்சக்கணக்கானவர்கள் திரண்டிருந்தனர். ஆயிரக்கணக்கான முனிவர்கள் வந்திருந்தனர். அவர்களுள் சிறந்தவர் யார் என்பதை அறிந்து அவருக்குப் பரிசுப் பொருட்கள் கொடுக்க விரும்பிய ஜனக மகாராசா யாகசாலைக்கு அருகில் ஆயிரக்கணக்கான பசுக்களையும், பொன், மாணிக்கம், மரகதம், முத்து ஆகியவற்றைக் கொண்டு வந்து குவித்துவைத்துவிட்டுச் சொன்னார், “இவை அனைத்தையும் முறைப்படி வேதங்களைக் கற்று ஓதும் சிறந்த அறிவாளியான ஒரு முனிவருக்குக் கொடுக்கத் தீர்மானித்துள்ளேன். மிகச் சிறந்த வேதசாத்திர நிபுணர் யார் என்று இச்சபையில் உள்ளவர்கள் கூறினால் அவருக்கு இதில் குவிக்கப்பட்டுள்ள அத்தனை பொருட்களையும் கொடுப்பேன்” என்றார்.



**அ**வற்றைக் கேட்ட முனிவர்கள் ஆச்சரியப்பட்டனர். இவ்வளவு பொருட்களையும் பெறவல்லவர் யார் என்று நினைத்துக் கதைக்க ஆரம்பித்தனர். ஆனால் யாருக்கும் வேதசாத்திரத்தில் சிறந்தவர் யார் என்று சொல்ல முடியவில்லை. அங்கு குழுமிருந்த பல முனிவர்கள் வேத சாத்திரங்களில் நிபுணத்துவம் பெற்றிருந்தனர். அதனால் யாரைக் கூறுவது என்று புரியாமல் திகைத்தனர்.

**சி**ல நிமிடங்கள் சபையில் சலசலப்பு ஏற்பட்டது. யஜ்ஞவல்லியார் என்ற வேதசாத்திர வல்லுனர் எழுந்தார். அவர் யாரைச் சொல்லப்போகிறார் எனப் பலரும் ஆவலோடு அவரது முகத்தைப் பார்த்தனர். அவர் கூறினால் அது சரியாக இருக்கும் என்று ஜனக மகாராசா நம்பினார். ஆனால் அவர் எழுந்து, “மூவுலகங்களிலும் நான்தான் வேதசாத்திரத்தில் நிபுணன். என்னை வெல்ல யாராலும் முடியாது. சகல சாத்திரங்களையும் கற்ற விற்பன்னன் நான்தான். அதனால் இங்கு வைக்கப்பட்ட பொருட்களெல்லாம் எனக்கே சொந்தமானவை” என்றார் மிடுக்குடன்.

**அ**தை ஏனைய முனிவர்கள் ஏற்கவில்லை. பலரும் பல முனிவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்தான் சிறந்த வேதசாத்திர நிபுணர் அவருக்குத்தான் கொடுக்க வேண்டும் என்றனர். சபை குழம்பியது. வாதப்பிரதிவாதங்கள் எழுந்தன. யஜ்ஞவல்லியார் ஒரு பக்கமும்,







ஏனைய முனிவர்கள் மறுபக்கமும் இருந்து வாதித்தனர். ஒவ்வொரு முனிவரும் எழுந்து நின்று யஜ்ஞவல்லியரிடம் மிகவும் நுட்பமான கேள்விகளைக் கேட்டனர். முனிவர்கள் கேட்ட கேள்விகளுக்கு யஜ்ஞவல்லியர் விரிவான விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

**இ**ருப்பினும் யஜ்ஞவல்லியரின் வாதத்தை ஷகல்யர் என்ற முனிவர் ஏற்காது ஆயிரக்கணக்கான கேள்விகளைக் கேட்டார். அவற்றிற்கெல்லாம் யஜ்ஞவல்லியர் விரிவான பதிலைச் சரியாகக் கூறிக்கொண்டிருந்தார். அதேநேரம் யஜ்ஞவல்லியார் கேட்ட கேள்விகளுக்கு ஷகல்லியரால் சரியான பதிலைக் கூறமுடியவில்லை. அதனால் முனிவர்கள் யஜ்ஞவல்லியாரே சிறந்த வேதசாத்திர நிபுணர் என்று ஒப்புக்கொண்டனர்.

**வா**தத்தில் வென்ற யஜ்ஞவல்லியார் அங்கு குவித்துவைக்கப்பட்டிருந்த பொருட்களை எடுத்துக் கொண்டு தனது ஆச்சிரமத்திற்கச் சென்றார். அவரது குரு வைசம்பாயனர். ஒருசமயம் வைசம்பாயனர் ஒரு மிகக் கடினமான கிரியையைச் செய்ய விரும்பி அதைச் செய்யத் தொடங்கினார். அப்போது அவர் தனது சீடர்களைத் தனக்கு உதவியாளர்களாகச் செயற்படுத்தினார். அப்பொழுது யஜ்ஞவல்லியார் தனது குருவைப் பார்த்து, "குருவே, தாங்கள் செய்யப்போகும் கிரியைக்குத் தங்களின் பலநூறு சீடர்கள் தேவையில்லை. நான் ஒருவனே போதும். என்னென்ன செய்யவேண்டும் என்று கூறுங்கள்" என்றார். அதைச் சீடர்கள் விரும்பாது பல்வேறுபட்ட நியாயங்களை எடுத்துக் கூறினர். அதனால் கோபங்கொண்ட வைசம்பாயனர், "இப்படியான ஓர் அகம்பாவம் பிடித்த சீடன் எனக்குத் தேவையில்லை. அதனால் என்னிடம் கற்ற கல்வியைத் திருப்பித் தந்துவிடு" என்று கட்டளையிட்டார்.



**அ**தைக்கேட்ட யஜ்ஞவல்லியார் முன்பு வைசம்பாயனர் அவருக்குக் கற்பித்த யசுர்வேதத்தை அவரின்முன் கக்கிவிட்டார். அந்த யசுர்வேதத்தை வைசம்பாயனருக்கு வேதவியாசர் கற்பித்திருந்தார். அது ஓர் அருமையான வேதம். அதனால் அதைக் கற்கும் போது யஜ்ஞவல்லியார் பெரும் மகிழ்ச்சியடைந்தார். அப்படியான சிறப்புமிக்க வேதத்தைக் கக்கிவிட்டு அவர் சூரியனை நோக்கிப் பலகாலம் தவம் செய்து சூரியதேவனிடமிருந்து யசுர்வேதத்தைக் கற்றார். யஜ்ஞவல்லியார் கக்கிய யசுர்வேதத்தை அங்கிருந்த முனிவர்களின்







சீடர்கள் பறவைரூபமெடுத்து அதை உண்டுவிட்டனர். அவர்கள் அதனால் பெற்ற அறிவால் மிகவும் சிறந்த வேதவிற்பன்னர்களாகி தைத்திரிய சம்கிதையை உருவாக்கினர் என்று சில புராணங்கள் கூறுகின்றன.

## 19. சர்வம் சிவமயம் ஜகத்

**தி**ருமால் தன்னைக் காணவந்த தேவர்களுக்குச் சொன்னார், “தேவர்களே, நான் மிக்க மகிமையுடையவன் என்றுதான் என்னைக் காண வந்து, என்னை உங்கள் தெய்வமாக நினைத்து வணங்குகிறீர்கள். இந்தப் பெருமைகள் யாவும் என்னை வந்தடையக் காரணமானவர் பரமேஸ்வரன். அவரின் கருணையினால்தான் நான் இன்று இவ்வளவு மகிமைகளையும் பெற்றுள்ளேன். அவர்தான் மூவுலகையும் பரிபாலிப்பவர். பிரளயத்தின் போது நான்



ஆலிலையில் படுத்திருந்தேன். அப்போது என்முன் ஆயிரக்கணக்கான தலைகளுடனும், கைகளுடனும், கால்களுடனும் ஒரு பேரொளி தென்பட்டது. அது பின் சிறிது சிறிதாக பேரொளி குறைந்து பொன்நிறமாக மாறிப் பூநூல் தரித்து நான்கு முகங்களுடன் எனக்குக் காட்சி தந்தது. அதன் கையில் கமண்டலம் ஒன்று இருந்தது. அது என்னைப் பார்த்துச் சிரித்தவாறு, “குழந்தையே நீ யார்?” என்று கேட்டது. அதற்கு நான் விஷ்ணு என்று கூறி எனது நிலையை விபரமாக எடுத்துச் சொன்னேன். அப்போது அந்த அதிசயமான உருவம், “நான் சுவயம்பு. தோற்றுவாரின்றின் தோன்றியவன். நானே சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்ற மூன்றையும் செய்பவன்” என்றது. இருவரும் கதைத்துக் கொண்டிருந்தோம்.



**அ**ப்போது எமக்கு எதிரில் வடக்குத் திசையில் தோன்றி நகர்ந்து வந்த ஒரு பேரொளி வட்ட வடிவில் எம்முன் வந்து நின்றது. அதனருகே நான் சென்று பார்த்தபோது அது எனக்கு ஒரு லிங்கமாகக் காட்சியளித்தது. அதன் அடியையும், முடியையும் காணமுடியவில்லை. அதன் அடியையும்,

முடியையும் காண நானும் பிரம்மதேவரும் புறப்பட்டோம். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் தேடியும் அடியையும், முடியையும் எம்மால் காணமுடியவில்லை. ஈற்றில் நாம் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்தோம், "பரமேஸ்வரனே, எம்மை மன்னித்து எம்மைக் காத்தருளும்" என்று இருவரும் மனமுருகி வேண்டினோம். அப்போது பரமேஸ்வரன் கோடி சூரியப் பிரகாசத்துடன் எம்மெதிரே தோன்றினார்.

**அ**வரது கையில் திரிசூலம் இருந்தது. தலையில் பிறைச் சந்திரனும், கழுத்தில் நாகமும் இருந்தன. மார்பில் பூநூலும் இருந்தது. நாமிருவரும் கைகூப்பி அவரை வணங்கினோம்.

**அ**வரது பேரொளிமிக்க தோற்றத்தைக் கண்டு நாமிருவரும் பயந்தோம். அப்போது அவர், "பயப்படாதீர்கள். நீங்கள் என்னில் இருந்து தோன்றிய எனது அம்சங்கள். எனது வலக்கையில் இருந்து பிரம்மாவும், இடக்கையில் இருந்து விஷ்ணுவும் தோன்றியவர்கள். நீங்கள் உங்களுள் முரண்பட்டுப் போராடாதீர்கள். உங்களின் துதியால் நான் மிக்க மகிழ்கிறேன். என்ன வரம் வேண்டும்" என்று கேளுங்கள் என்று அன்புடன் கேட்டார்.

"**எ**ம்பெருமானே, தங்கள் திருவடியை எப்போதும் தாங்கள் நினைத்திருக்க வேண்டும்" என்று கேட்டோம். அவர் மிக்க மகிழ்வுடன் எம்மை ஆசீர்வதித்து "இனி உங்களின் தொழில்களை ஆரம்பித்துச் சிறப்பாகச் செய்யுங்கள்" என்று கூறி மறைந்தார். அதனால் தான் எனக்குச் சகல சக்திகளும் கிடைத்தன. அனைவரும் பரமேஸ்வரனைத் துதித்து நற்பயன் பெறுங்கள்" என்றார் விஷ்ணு.



## ஈசனின் ஐவகைத் தோற்றங்கள்



1. சுவாதலோகித கற்பத்தில் பிரமன் ஈசனைத் தொழுது வணங்கியபோது ஈசன் அவரின் முன் ஓர் அழகிய இளம் பெண்ணாகத் தோன்றினார். இத்தோற்றம் 'சத்தியயோசாதத் தோற்றம்' எனப்படும்.

2. படைப்புக் கடவுளாகிய பிரமன் ஈசனது திருவடியை

அர்ச்சித்து வேதமந்திரங்களால் துதித்தார். அப்போது ஈசனின் திருமேனியில் இருந்து நான்கு முனிவர்கள் தோன்றினர். இந்த நான்கு முனிவர்களது தோற்றத்தை மனதில் தியானித்து முறைப்படி வழிபடுபவர்களும் சிவலோகத்தை அடைவர். முப்பதாவது இரத்தக் கற்பகத்தில் பிரமன் ஈசனை மனமுருகித் துதித்தபோது சடையில் பாம்பை அணிந்து, கரங்களில் மானும், மழுவும் ஏந்தி ஈசன் பிரமனின் முன் தோன்றினார். இத்தோற்றத்தை 'வாமதேவத் தோற்றம்' என்பர்.

3. இறைவனின் திருமேனியில் இருந்து தோன்றிய நான்கு முனிவர்களும் பந்தபாசங்களை நீக்கித் தெளிந்த ஞானம் பெற்று உலகம் உய்வதற்கான தருமநெறிகளைப் பின்பற்றி மற்றவர்களுக்கும் அதைத் தெளிவாக உணர்த்தி, பல ஆண்டு காலம் வாழ்ந்து ஈசனின் திருவடியை அடைந்தனர். இத் திருவுருவத்தைத் தியானித்து வணங்கி வழிபடுபவர்கள் முத்தியடைந்து ஈசனது திருவடியை அடைவார்கள்.

பீத கற்பத்தில் நான்குமுகன், ஈசனைப் பிரார்த்திக்க, ஈசன் சடையில் இளம் மதியை அணிந்து காட்சி கொடுத்தார். இத்தோற்றம் 'தற்புருஷ' தோற்றம் எனப்படும். இளம்பிறையுடன் தனக்குக் காட்சியளித்த ஈசனைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்த பிரமன் வேதமந்திரங்களால் ஈசனைத் துதித்தார். இதனால் பெரு மகிழ்வடைந்த ஈசன் பேரழகுமிக்க காயத்திரியை உருவாக்கிப் பிரமனுக்குக் கொடுத்தார்.

**பே**ரழகியான காயத்திரியை பக்தியுடன் பூசிப்பவர்களுக்கு நரகலோக வாசம் கிட்டாது. அவர்கள் சொர்க்கத்தில் இன்பமாக வாழ்வர். இதேபோல் ஈசனின் திருவுருவத்தில் இருந்து தோன்றிய நான்கு முனிவர்களும் பஞ்சாட்சர மந்திரத்தின் பொருளை உணர்ந்து அதைப் பக்தியுடன் பற்றற்று ஓதி ஈசனது திருவடியை அடைந்தனர். இந்தத் தத்புரிசனை வணங்கி அவரது திருவுருவை வழிபடுபவர்கள் கைலாயத்தை அடைந்து அங்கு பேரின்பமாக வாழ்வர்.

4. நீலகற்பத்தில் முக்கண்ணனான ஈசன் கரியரூபத்தில் தோன்றினார். அவரது கையில் தீயும், வாளும் இருந்தன. இது ஈசனார் எடுத்த அகோர உருவத்தோற்றமாகும். அவரின் அக் கோலத்தைக் கண்டு மிக்க மகிழ்வுடன் அவரை பஞ்சாட்சர மந்திரங்களால் பூசிக்க அவரது அகோர வடிவத்தின் கோரம் படிப்படியாகக் குறைந்தது. அதனால் ஈசன் பெருமகிழ்வடைந்து, 'பிரமனே, நீ வேண்டிய வரங்களைக் கேள்" என்றார். அதனால் மகிழ்ந்த பிரமன், "ஈசனே, என்றும் குறையாத அன்பைத் தாங்கள் என்றும் என்மீது கொண்டிருக்க வேண்டும்" என்று கேட்டார். பிரமன் கேட்ட வரத்தை அளித்த ஈசன் சொன்னார், "சிவ மந்திரத்தை இலட்சம் முறை உச்சரித்து யாகம் செய்யும் அந்தணர்களின் யாகத்தை யாராலும் குழப்ப முடியாது. அவர்கள் என்னுடன்

கைலாயத்தில் வீற்றிருப்பர். இவர்களை ஒருபோதும் பாவங்கள் சூழமாட்டாது” என்று கூறிமறைந்தார்.

5. விஸ்வரூப கற்பகத்தில் பிரம்மா சிவனைத் தியானித்தார். அப்பொழுது ஈசன் சடையில் பிறைச்சந்திரன் ஒளி நெற்றிக்கண்ணுடனும், கோரமான பற்களுடனும், இரு பெண்களுடனும் அவருக்குக் காட்சி கொடுத்தான். அதைக் கண்டு மகிழ்ந்த பிரமன், “ஈசா, உமது இரு பக்கங்களிலும் இருக்கும் பெண்கள் யார் என்று எனக்குச் சொல்” என்றார்.

**கோ**ரப் பற்கள் பளபளக்க, “பிரமனே, ஒருத்தி தேவர்களை ஈன்று உலகிற்கு அளித்த தாய். மற்றவள் என்றும் வெள்ளைத் தாமரைப் பூவில் வீற்றிருக்கும் சரஸ்வதி” என்றார். இவ்வாறு ஈசனாரின் ஐவகையாக தோற்றங்களைப் பிரமா கண்டுகளித்தார்.



## 20. தாருகாவன முனிவர்களும் சிவனும்



**தா**ருகாவனத்தில் தவம் செய்த முனிவர்களுக்குத் தம்மைவிடத் தவவலிமையுள்ள முனிவர்கள் எவரும் இல்லை என்ற செருக்கு இருந்தது. அதுபோலத் தமது பத்தினிகள் கற்பிற் சிறந்தவர்கள் என்ற திமிரும் இருந்தது. அவற்றை அடக்க எண்ணிய சிவபெருமான் திகம்பரராய் அழகு மிக்க ஓர் இளைஞனின் உருவெடுத்துத் தாருகாவனத்திற்குச் சென்று முனிவர்கள் தவம் செய்யுமிடத்தை அடைந்தார். கையில் ஓடு ஏந்தியபடி பிச்சை எடுப்பதற்காக வந்த அந்த அழகிய பிச்சாடனரின் பேரழகில் மயங்கிய முனிபத்தினிகள் காம உணர்வுடன் பிச்சாடனரைப் பின் தொடர்ந்து சென்றனர். அவர்கள் தாம் யார் என்ற உணர்வையும், தாம் முனிவர்களின் மனைவியர் என்ற நினைவையும் மறந்து பிச்சாடனரைப் பின் தொடர்ந்து வந்தனர். பிச்சாடனர் முனிவர்கள் தவம் செய்து கொண்டிருந்த யாகசாலைக்கு அருகில் வந்தார். முனிவர்களது மனைவிமாரும் சுய உணர்வின்றி அவரைப் பின் தொடர்ந்து வந்தனர்.



**சி**வன் திகம்பரராய் முன்னே வர முனிவர்களின் மனைவியர் உணர்ச்சிவசப்பட்டு அவரைப் பின் தொடர்ந்து வருவதைக் கண்ட முனிவர்களுக்கு அடக்க முடியாத பெருஞ்சினம் வந்தது. தமது பத்தினிகள் யாரோ ஒரு காமுகனின் பின் தம்மை









அறியாது மயக்கத்துடன் வருவதைக் கண்டு நிலைகுலைந்து போனார்கள். அவர்கள் தமது மனைவிமாரை அக் காமுகன் ஏமாற்றி அழைத்து வருகின்றான் என்று எண்ணிச் சபித்தனர். அவர்கள் அத் திகம்பரன் எரிந்து நாசமாகப் போகட்டும் என்று தமது தவவலிமை முழுவதையும் திரட்டிச் சபித்த போதும் அச் சாபங்கள் அக் காமுகனை எதுவும் செய்யவில்லை. அதனால் அவர்களுக்குப் பெருங்கோபம் உண்டானது. கோபத்தால் அவ்வாறு உருமாறி வந்தவர் யாரென்று அவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. எல்லா முனிவர்களும் திகைப்படைந்து அத் திகம்பரனைக் கொல்ல வேண்டும் என்று நினைத்தனர்.



**அ**ப்போது மாய உருவில் திகம்பரனாக வந்த சிவபெருமான் மறைந்து போனார். பெரும் கோபங்கொண்டு அத் திகம்பரனைத் தாக்கச் சென்ற முனிவர்கள் அவனைக் காணாது திகைத்துத் திகிலடைந்து போனார்கள். அவர்களால் இருந்த இடத்தை விட்டு நகர முடியவில்லை. பல்வேறு விதமான துன்பங்கள் அவர்களை வருத்தின. அவர்களால் துன்பங்களைத் தாங்க முடியாமையால் பிரமதேவனை நினைத்து அவரை வணங்கினர். நடந்தவற்றைத் தனது ஞானதிருஷ்டியினால் அறிந்து கொண்ட பிரமன், "முனிவர்களே, உலகத்தைக் காத்து அருளவென பரம்பொருளான சிவன் இருக்கிறான். அவனை நோக்கித் தவம் செய்து வரங்களைப் பெற்ற நீங்கள் அதை மறந்து உங்கள் தவ வலிமையால் தான் யாவற்றையும் செய்கிறோம் என்று அகந்தை கொண்டு அரக்கர்களைப் போல நடந்து கொண்டீர்கள். அரக்கர்கள் நன்றி மறந்து உங்களைப் போல நினைத்துப் போர் செய்தமையால் தான் அழிந்தனர். இது உங்களுக்குத் தெரிந்த விடயம். இருந்தபோதும் ஆணவத்தால் மதியிழந்து இறைவனின் சக்தியைக் குறைத்து மதிப்பிட்டீர்கள். உங்களின் மனைவியர் தான் கற்பிற் சிறந்தவர்கள் என்று எண்ணி மமதை கொண்டீர்கள். கற்பென்பது மன வைராக்கியம் என்பதை மறந்து உங்களுக்குப் பணிவிடை செய்வது என்று நினைத்தீர்கள். அதனால் தான் இவ்வளவு விபரீதங்களும் நடைபெற்றன. ஞானதிருஷ்டியுள்ள உங்களால் வந்தவர் சிவபெருமான் என்பதை உணரவில்லை. சிவனை விட உங்களது நினைவுதான் பெரிதென நினைத்தீர்கள். அதனால் தான் வந்தவனுடன் உங்கள் பலத்தைக் காட்ட முயன்றீர்கள். உங்கள் தவ வலிமையால் வந்தவனைத் தாக்கினீர்கள். உங்களது தாக்குதலால் நீங்கள் தானே பாதிப்புக்குள்ளானீர்கள். நீங்கள் கொடுத்த சாபங்கள் திரும்பி வந்து உங்களையே தாக்க ஆரம்பித்தமையால் தான் என்னிடம் ஓடி வந்தீர்கள்".


**மு**னிவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. தமது தவறை எண்ணி வருந்தினார்கள், "ஒரு உண்மையான ஒழுக்கமுள்ள சிவனடியான் அதிதியாக உங்களிடம் வந்தால், அவனைச்



சிவனென நினைத்து உபசரிக்க வேண்டும் என்று வேதங்கள் கூறுகின்றன. அதை அறிந்த நீங்கள் சிவன், சிவனடியாராக வேடமிட்டு வந்தபோது நீங்கள் அவரை முறைப்படி வரவேற்று உபசரிக்கவில்லை. மாறாக அவமதித்தீர்கள் அதிதியாக வருபவர்களை உபசரித்து அழியாத பேரின்பம் பெற்ற பலர் முன்பு வாழ்ந்திருக்கின்றனர். அவர்களில் ஒருவனான சுதரிசனின் வரலாற்றைக் கூறுகிறேன் கேளுங்கள்" என்று கூறிய பிரமன் சுதரிசனின் வரலாற்றைக் கூறத்தொடங்கினார்.


## 21. வாலியும் இராவணனும்

**நி**ரஜன் என்ற வானரனுக்கு விஜா என்ற மகள் இருந்தாள். நிரஜன் தனது மகளான விரஜாவை ருடீடன் என்ற வானரத்திற்குத் திருமணம் செய்து வைத்தான். அந்த விரஜாவை ஒரு சமயம் இந்திரன் கண்டு அவள்மீது காமம் கொண்டு அவளின் பூரணமாக சம்மதத்துடன் கூடி இன்பம் அனுபவித்தான். அதன் காரணமாக வாலி என்ற மிகப் பலசாலியான வானரம் ஒன்று பிறந்தது. அதன்பின் விரஜா சூரியனைக் கண்டு அவன்மீது காமங்கொண்டு அவனுடன் கூடியிருந்தாள். அதன் பயனாக அவள் சுக்ரீவனைப் பெற்றாள். வாலி பெரும் பலசாலி. அத்துடன் அவனுடன் யாராவது நேருக்கு நேர் நின்று போர் செய்தால் போர் செய்பவரின் பாதிப்பலம் வாலியுடன் சேர்ந்துவிடும். அதனால் வாலியுடன் போர் செய்ய எந்த அரசரும் முன்வரார். வாலி தனது பலத்தால் நாடொன்றைக் கைப்பற்றி அதை ஆண்டு வந்தான்.



**பெ**ரும் மன்னனான வாலி கணேணனின் மகளான தானியை மணந்தான். சுக்கிரீவன் பநஸனின் மகளான ருமையை மணந்தான். அஞ்சனாதேவி, கேசரி என்ற வானரத்தின் மனைவியாவாள். அவள் வாயுதேவனுடன் கூடி அனுமானைப் பெற்றெடுத்தாள்.





**ஒ**ருநாள் வாலி சூரியனை வணங்குவதற்காகத் தெற்குப் பகுதியில் உள்ள கடற்கரைக்குச் சென்றான் வாலி தெற்குக் கடற்கரைக்குச் செல்வதை அறிந்த இலங்கை வேந்தனான இராவணனும் அங்கு சென்றான். ஏற்கனவே வாலிக்கும் இராவணனுக்குமிடையே பெரும் பகை இருந்தது. வாலி சூரியனை வணங்கிக் கொண்டிருந்தபோது வாலியின் பின்பக்கமாக

வந்த இராவணன் வாலியைத் தனது கதாயுதத்தால் தாக்கினான்.

**ப**லமுறை இராவணன் தனது கதாயுதத்தால் வாலியைத் தாக்கியபோதும் வாலி அதைக் கவனிக்காது சூரியனை வணங்குவதையே கருத்திற் கொண்டிருந்தான். பின் இராவணனைப் பிடித்துத் தனது அக்குளில் வைத்துப் பிடித்த வாலி எல்லாச் சமுத்திரங்களுக்கும் சென்று நீராடினான். பின் தனது நாடான கிஷ்கிந்தைக்கு வந்து கையைத் தூக்க இராவணன் தலைகீழாகத் தரையில் விழுந்தான். விழுந்த வேகத்தில் இராவணன் மூர்ச்சித்துவிட்டான்.



மூர்ச்சை தெளிந்து எழுந்த இராவணனுக்கு வாலி சொன்னான், "நீ அட்டதிக்குப் பாலகர்களையும், மூன்று லோகங்களையும் வெற்றி கொண்ட பெரும் வீரனான நீ பின்னால் வந்து என்னைத் தாக்கியும் எனக்குக் காயமோ, அல்லது வலியோ ஏற்படவில்லை" என்று சிரித்தான். தனது பலவீனமான செயலை எண்ணி வெக்கப்பட்ட இராவணன் வாலியிடம் தான் நடந்து கொண்டமைக்காக மன்னிப்புக் கோரினான். அதன்பின் இருவரும் பெரும் நண்பர்களாயினர். அதனால் உலகிற்குத் தீமை உண்டாகும் என்பதற்காகவே வாலியை இராமர் மறைந்திருந்து கொன்றார்.

## 22. பரசுராமன்

**ம**காவிஷ்ணு பத்து அவதாரங்களை எடுத்ததாகவும், அதில் ஒன்றுதான் பரசுராம அவதாரம் என்று புராணங்கள் கூறுகின்றன. ஜமதக்கினி முனிவருக்கும் ரேணுகாம்பாளுக்கும் பரசுராமர் புத்திரனாக அவதரித்தார்.

**ப**ரசுராமர் ஒருநாள் காட்டுவழியாகச் செல்லும் போது சிவபெருமான் வேடனுருவில் தான் வேட்டையாடிய மானினது மாமிசத்தைக் கொண்டு வந்து பரசுராமரின் அருகில் வைத்துவிட்டு என்ன நடைபெறப்போகிறது என்று அறியப் பரசுராமரின் அருகில் நின்றார். பரசுராமர் மாமிசத்தைக் கொண்டு வந்தவன் வேடன். அவனுக்கு முனிவர்களுக்கு மாமிசத்தைக் காண்பது பிடிக்காது என்று தெரியாது. தெரியாதவனைத் தெரிந்தவன் துன்புறுத்தலாகாது என்று எண்ணி, "நீ கொண்டுவந்து வைத்த மாமிசத்தை எடுத்துச் செல். நான் மாமிசம் உண்பதில்லை" என்றார். பின்பு அறியாமையால் வேடன் செய்தகாரியத்தைப் பெரிதுபடுத்தாது அவனோடு பேசாது இருந்தார்.



**ப**ரசுராமர் பேசாதிருந்ததைக் கண்டு வேடனாக வந்த சிவபெருமான் சொன்னார், "முனிவரே, நான் வேடன். வேட்டையாடுவது எனது தொழில் வேட்டையாடுவது பாவம் அல்ல ஏனென்றால் எம்மையும், எமது தொழிலையும் படைத்தவர் சிவபெருமான். அவர் வேடனான கண்ணப்பன் கொடுத்த மாமிசத்தை விருப்புடன் உண்டவர். நான் எனது பெற்றோருக்காகவும், மனைவி பிள்ளைகளுக்கு உணவு கொடுப்பதற்காகவும் தான் வேட்டையாடுகிறேன். ஆனால் நீ உனது



தந்தை உண்மையை ஆராயாது சொன்ன சொல்லுக்காக உனது பெற்றதாயை வெட்டிக் கொன்றவன். இது நியாயமானதா. ஓர் ஆண், ஒரு பெண்ணை அதுவும் திருமணமான பெண்ணைக் காமக்கண்ணுடன் பார்க்கமாட்டான். தரையில் சென்ற உனது தாயாரை வானில் சென்ற கந்தர்வன் எப்படி மோகிக்கமுடியும்? உனது செயலை எதிர்காலச் சந்ததியினர் பழிப்பர் "அதனால் நீதான் வேறு இடம் செல்ல வேண்டும்" என்றான் வேடன்.

**அ**வ்வாறு நியாயத்தை வேடனுருவில் வந்து கேட்ட சிவபெருமானை முக்காலமும் உணர்ந்த பெரும் தவவலிமை பெற்ற தன்னால் அறிந்துகொள்ள முடியவில்லையே என்று கவலைப்பட்ட பரசுராமர் சிவபெருமானை வணங்கி, "என்னை மன்னித்து அருள்புரியுங்கள்" என்று வணங்கினார்.



**அ**ப்போது சிவபெருமான் அவரின்முன் தோன்றி, "இராமன் இராவணனுடன் போர் செய்வதற்காகச் சக்திமிகுந்த ஆயுதங்களைத் தருமாறு என்னைக் கேட்டுள்ளான். அவற்றை இப்போது நான் உனக்கு வழங்குகிறேன். அவற்றை நீ இராமனிடம் ஒப்படைத்தாலும், அவற்றை நிர்வகிக்கும் வலிமையை நீ பெற வேண்டும். அதனால் நீ பல தீர்த்தங்களுக்குச் சென்று அங்கு நீராடி அத் தீர்த்தக் கரையில் வீற்றிருக்கும் என்னையும், ஏனைய தேவர்களையும் உபாசித்துவிட்டு வந்து மறுபடியும் உக்கிரமாகத் தவம் செய். அப்போது அஸ்திர சஸ்திரங்களை நிர்வகிக்கும் சக்தியைப் பெறுவாய்" என்று கூறிவிட்டு மறைந்துவிட்டார்.



**ஒ**ரு சமயம் மூகலு என்ற ஒரு கொடிய அரக்கி தேவலோகத்திற்குச் சென்று தேவர்களுடன் கொடுமையான வழிமுறைகளைப் பின்பற்றிப் போர் புரிந்தாள். அவள் திடீரென்று மாயமாக மறைந்துவிடுவாள். ஆனால் அவள் தாக்குவதால் தேவர்கள் பயங்கரமாக அலறுவார்கள். அவளது தாக்குதலுக்குப் பயந்து தேவர்கள் மறைந்து வாழத்தொடங்கினர். அதனால் தேவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பிரம்மதேவரிடம் சென்று முறையிடப் பிரம்மதேவர் அவர்களைச் சிவபெருமானிடம் சென்று முறையிடுமாறு கூறினார். அதனால் தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமான் தேவர்களை நோக்கி, "நீங்கள் சென்று நிம்மதியாக இருங்கள். எனது சார்பாகப் பரசுராமன் சென்று முகலு என்ற அரக்கியையும், அவளோடு கூட வந்த அரக்கர்களையும் கொன்று உங்களது கவலையைத் தீர்த்து வைப்பான்" என்றார்.





**அ**ச் செய்தியை இமயமலையில் தவம் செய்து கொண்டிருந்த பரசுராமருக்குப் பிரம்மதேவன் சொல்ல பரசுராமர் கைலாயத்திற்கு வந்து சிவபெருமானை வணங்கி, "எம்பெருமானே, நான் ஒரு சாமான்யன். பெரும் பலம் கொண்ட அரக்கியை என்னால் எப்படி வெல்லமுடியும். அதற்கான அருளையும், பலத்தையும் எனக்கு அருளுங்கள்" என்றார்.

"**பா**ர்க்கவராமா, இன்றிலிருந்து உனது இயற்பெயர் அழிந்து நான் இடுத் பெயரான 'பரசுராமன்' என்ற பெயரே உலகில் நிலைபெறும். உன்னிடம் இயற்கையாகவே பெரும் பலம் உள்ளது. அத்துடன் கடுந்தவம் செய்து அரியபல சக்திகளைப் பெற்றுள்ளாய். அதைவிட சக்திவாய்ந்த ஒரு கோடரியை நான் உனக்குத் தருகிறேன். அது சக்திமிக்கது. அத்துடன் எனது அருளும் உள்ளது. அதனால் உனக்கு வெற்றி நிட்சயமாகக் கிட்டும். அஞ்சாது சென்று அந்தக் கொடிய அரக்கியை அழித்துவிட்டு வா" என்றார். அன்றுமுதல் பார்க்கவராமன் என்ற பெயர் அழிந்து பரசுராமன் ஆகிவிட்டது.



**சி**வபெருமானின் அருளும் ஆசியும் பெற்றுச் சென்ற பரசுராமன் மூகலு என்ற அரக்கியையும், அவளுடன் கூட வந்த அரக்கர்களையும் கொன்று தேவர்களுக்கு மகிழ்ச்சியை அளித்துவிட்டு சிவபெருமானிடம் வந்து இராமனுக்காக அவர் கொடுத்த ஆயுதங்களைப் பாவிக்கும் முறைகளையும், பாதுகாக்கும் முறைகளையும் அறிந்து கொண்டார். அத்துடன்

சிவபெருமான், பரசுராமர் முன்பிருந்த பெயரில் ஒரு வலிமையான ஆயுதத்தை உருவாக்கி 'பார்க்கவாவாஸ்திரம்' என்று பெயரிட்டு அதையும் பரசுராமரிடம் கொடுத்தார்.



**அ**தன்பின் அவனது தகப்பனார் தவம் செய்து கொண்டிருந்த போது வஞ்சகமான முறையில் அவரைக் கொன்ற கொடுமைமிக்க காத்தவீரிய அர்ச்சுனனையும் அவனுடன் கூட வந்த படைவீரர்களையும், அவனது நண்பர்களான அரசர்களையும் கொன்று பழி தீர்த்தான்.

**அ**தன்பின் இராமபிரான் சீதாதேவியைத் திருமணம் செய்து அழைத்து வரும் போது தனுசு என்ற வில்லைக் கொடுத்து அதை உடைக்குமாறு பரசுராமர் பணிக்க அந்தப் பலம் மிகுந்த வில்லை ஒரு சிறு குச்சியைத் தூக்குவதுபோலத் தூக்கி இராமபிரான் உடைத்ததால் மிக்க மகிழ்ந்து முழுத்தவ சக்தியையும் இராமபிரானுக்குத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு மீண்டும் காட்டுக்குச் சென்று பரசுராமன் தவம் செய்தான்.

**ப**ரசுராமர் குருசேத்திரத்தில் ஒரு புனித நீரிநிலையான பஞ்சகம் என்ற குளத்தை வெட்டி அதில் நீராடிப் பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்தார். அதன்பின் அந்தக் குளத்தில் நீராடுபவர்களின் பாவங்கள் அழிந்துபோயின. பரசுராமர் பல அரசர்களைக் கொன்றதால் அவரைப் பிரமகத்தித் தோசம் பிடித்தது அதை நீக்க அவர் காசியப முனிவரைக் கொண்டு ஒரு அஸ்வமேத யாகம் செய்தார். யாக முடிவில் ருத்வித்துக்களுக்குத் தட்சணைகள் வழங்கினார்.



**அ**தன்பின் தான் வசிப்பதற்காக மகேந்திரபர்வதத்தை தேர்ந்தெடுத்துவிட்டு ஏனைய பூமிகளை காசியப முனிவருக்குத் தட்சணையாகக் கொடுத்தார். அதன்பின் பூமியை 'காசியபி' என்று அழைக்கின்றனர். அதன்பின் பரசுராமர் தனது மூதாதையரான பித்ரு தேவதைகளின் சொற்படி மகேந்திர பர்வதச் சந்நிதியை அடைந்து தவம் செய்தார்.

## 23. கோகர்ண சேத்திரம்



**பா**ரத வர்ஷத்தின் தெற்குப் பகுதியில் இச் சேத்திரம் உள்ளது. இங்கு பரமேஸ்வரன் மிக்க மகிழ்வுடனும், விருப்பத்துடனும் வீற்றிருக்கிறார். இங்குள்ள புனித தீர்த்தத்தில் நீராடிவிட்டுப்

பரமேஸ்வரனைத் தரிசித்து அவரின் அருளைப் பெற்றபின் இங்கு செய்யப்படும் தானதர்மங்களின் பலன் இரட்டிப்பாகும். அத்துடன் இங்கு செய்யப்படும் அபிஷேகங்கள், ஓமங்கள், கிரியைகள் செய்வோர் நினைத்தவற்றையெல்லாம் இலகுவாகப் பெற்றுவிடுவார்கள்.



**இ**ங்கு ஏராளமான முனிவர்கள் கோகர்ணேச்வரதை வணங்கித் தவம் செய்து முத்தியடைகின்றனர். இத்தலம் ஆகாய கங்கையால் பாய்ந்து வந்த நீரில் மூழ்கிக் கடலோடு சேர்ந்துவிட்டது. அதனால் பெருங்கவலை கொண்ட முனிவர்கள் பரசுராமரிடம் சென்று, “முனிபுங்கவரே, இத்தலத்தில் ஏராளமான முனிவர்கள் வந்து தங்கியிருந்து தவம் செய்து முத்தியடைந்தனர். ஏராளமான சிவபக்தர்கள் வந்து கோகர்ணரை வணங்கி அருள்பெற்றதோடு அவர்கள் செய்த பாவங்களையும் போக்கினர். இன்று ஆகாயகங்கை பாய்ந்து வந்தமையால் இத் தலம் கடலில் மூழ்கிவிட்டது. அதை மீட்க வல்லவர் தாங்கள் ஒருவர் மட்டுமே. அதனால் அதை மீட்டுச் சிவபக்தர்களும், முனிவர்களும் பயனடைய வழி செய்யுங்கள்” எனக்கேட்டு அவரை வணங்கினர்.



**அ**தைக்கேட்ட பரசுராமர், முனிவர்களின் கோரிக்கை நியாயமானது என்று உணர்ந்து சமுத்திரத்தின் தெற்குப் பகுதிக்குச் சென்று சமுத்திரராஜனை மனதில் நிலைநிறுத்தித் தொழுது கேரகர்ண சேத்திரத்தை மூழ்கிய சமுத்திர நீரை வெளியேற்றுமாறு கேட்டார். பலமுறை பரசுராமர் கேட்டும் சமுத்திரராஜன் பதில் கூறவில்லை. அதனால் பெருங்கோபங் கொண்ட பரசுராமர் தனக்குச் சிவபெருமான் கொடுத்த ஆக்கிநேய அஸ்திரத்தை எடுத்துச் சமுத்திரராஜனைத் தாக்குவதற்கு ஆயத்தமானார். அதைக் கண்ட சமுத்திரராஜன் பயந்து விட்டான். ஆக்கிநேய அஸ்திரம் சமுத்திர நீர் முழுவதையும் குடித்துவிடும் என்று அவனுக்குத் தெரியும். அதனால் அவன் பரசுராமரை வணங்கியபடி சமுத்திரத்தைவிட்டு வெளியே வந்து, “பார்க்கவராமா, உங்களது பலத்தையும், மகிமையையும் அறியாது பிழை செய்துவிட்டேன். இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும் என்று கூறுங்கள். உடனே நான் அதைச் செய்து முடிக்கிறேன்” என்றான்.


“**ப**க்தர்களின் நலன்கருதி உன்னால் மூழ்கடிக்கப்பட்ட கோகர்ண சேத்திரத்தை மீட்கவே நான் இங்கு வந்தேன். அதனால் அச் சேத்திரம் முன்பிருந்த நிலைக்கு வரவேண்டும். அந்தளவு தூரம் வரை அகன்று சென்றுவிடு” என்றார் பரசுராமர்.



“**நீ**ங்கள் மகாவிஷ்ணுவின் ஓர் அவதாரம். முன்பு பிரம்மனை நோக்கி நான் தவம் செய்தபோது அவர் என்முன் தோன்றி உன்னை யாராலும் ஒருபோதும் அழிக்கமுடியாது என்றவர். ஆனால் மகாவிஷ்ணுவின் ஓர் அவதாரமான உங்களுடன் போர் செய்வது மகாவிஷ்ணுவுடன் போரிடுவதைப் போன்றது. அதனால் நான் அந்தச் சேத்திரத்தை விட்டு விட்டுச் செல்கிறேன்” என்று சமுத்திரராஜன் கூறப் பரசுராமர் சொன்னார், “பக்தர்கள் முன்பு போல வந்து கோகர்ணரை வணங்கவேண்டும். அத்துடன் இனிமேல் கோகர்ண சேத்திரப் பக்கம் நீ வரக்கூடாது” என்றார். அதை ஒப்புக்கொண்ட சமுத்திரராஜன் கோகர்ண சேத்திரத்தை விட்டு நகர்ந்து சென்றான்.

**கோ**கர்ண சேத்திரம் வெளிவந்ததால் முனிவர்களும், மக்களும் மிகவும் மகிழ்வடைந்து முன்புபோல அச் சேத்திரத்திற்கு வருகை தந்து கோகர்ணரின் அருளையும், ஆசியையும் பெற்றனர்.

## 24. சுக்கிராச்சாரியாரும் ஐயத்தியும்



**தே**வர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே நீண்ட காலமாகப் பெரும் பகை நிலவி வந்தது. அதனால் தேவர்கள் பலவீனமாக இருப்பதை அசுரர்கள் அறிந்தால் உடனே தேவர்களுக்கெதிராகப் பெரும் போர் தொடுப்பர். அதுபோல அசுரர்கள் பலவீனமடைந்தால் தேவர்கள் பெரும் படை எடுத்துச் சென்று அசுரர்களை வெல்வர். இது அடிக்கடி நிகழும் ஒரு நிகழ்வாகும்.

**ஒ**ரு சமயம் அசுரர்கள் பலவீனமடைந்ததை அறிந்த தேவர்கள் அசுரர்களுக்கெதிராகப் பெரும் போர் தொடுத்தனர். அப் போரில் அசுரர்களுக்குப் பெரும் இழப்பு உண்டானது. ஏராளமான அசுரர்கள் தேவர்களால் கொல்லப்பட்டனர். பல அசுரர்கள் காயமடைந்தனர். தேவர்களை வெல்லமுடியாதென உணர்ந்த அசுரர்கள் பின்வாங்கினர்.



**அ**தைக்கண்டு பெரும் கவலை கொண்ட அசுரர்களின் குருவான சுக்கிராச்சாரியார் தனது தவ வலிமையைப் பயன்படுத்தி அசுரர்களுக்கு உதவினார். அஸ்வமேத யாகம் செய்தார். அவற்றால் எந்தவிதமான பலனும் ஏற்படாததால் சுக்கிராச்சாரியார் மனமுடைந்து சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்யக் காட்டுக்குச் சென்றார். தமது குரு

மந்திரங்களைச் செய்தும், யாகம் செய்தும் அவை பயனளிக்காமையால் அசுரர்கள் திகைத்தனர். செய்வதறியாது தடுமாறினர். அசுரர்களின் துன்பத்தைப் போக்க நினைத்த பிருகு முனிவரின் மனைவி அசுரர்களைச் சமாதானப்படுத்தி, "எனது கற்பின் மகிமையால் நான் உங்களைக் காப்பாற்றுகிறேன். அஞ்சாது எமது ஆச்சிரமத்திற்கு வந்து தங்குங்கள்" என்றாள். பிருகு முனிவரின் மனைவி தங்களுக்கு அடைக்கலம் கொடுத்தமையால் அரக்கர்கள் மிகவும் மகிழ்ந்தனர். தமது குலக்குருவான சுக்கிராச்சாரியார் தவம் செய்து முடித்துவிட்டு வரும்வரை பிருகு முனிவரின் மனைவி தம்மைக் காப்பாள் என்று எண்ணினர். இதை அறிந்த





பிரம்மதேவர் பிரகஸ்பதியிடம் சென்று முறையிட பிரகஸ்பதி தேவேந்திரனை அழைத் து, "தற்போதைய நிலையில் அசுரர்கள் மிகவும் பலவீனமடைந்துள்ளனர். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அசுரர்களின் கொட்டத்தை அடக்கு" என்று கூற இந்திரன் போருக்குப் புறப்பட, பிருகு முனிவரின் மனைவி இந்திரனின் முன்னே வந்து தன்னைத் தாக்கி அழித்துவிட்டுத் தான் அசுரர்களைத் தாக்க வேண்டும் என்றாள். அதனால் இந்திரனால் முன்னேற முடியவில்லை. இந்திரனைச் சூழ்ந்து அசுரர்கள் அவனைக் கொல்ல முயன்றபோது மகாவிஷ்ணு அங்கே தோன்றி இந்திரனைக் காப்பாற்றினார்.

**அ**தைக் கண்டு ஆத்திரமடைந்த பிருகு முனிவரின் மனைவி, "இந்திரனே, உன்னையும் மாயாஜாலங்கள் செய்யும் விஷ்ணுவையும் எனது கற்பின் மகிமையால் எரித்துவிடுவேன்" என்று கூற அவளின் சொற்களால் ஆத்திரமடைந்த விஷ்ணு ஒரு அம்பை ஏவி பிருகு முனிவரின் மனைவியின் தலையைக் கொய்தார்.

**ஒ**ரு பெண் என்றும் பாராது தர்மமின்றித் தனது மனைவியைக் கொலை செய்ததால் ஆத்திரமடைந்த பிருகு முனிவர், "மனிதர்கள் தான் இத்தகைய ஈனமான செயல்களைச் செய்வர். அதனால் நீ மனிதனாகப் பிறக்கக்கடவாய்" என்று சபித்துவிட்டுத் தனது மனைவியின் தலையை எடுத்துவந்து மனைவியின் முண்டத்துடன் நெருக்கமாக வைத்துவிட்டுத் தனது தவவலிமையால் அவளை உயிர்ப்பித்தார்.




**இ**வற்றைப் பார்த் இந்திரனுக்குப் பயமாக இருந்தது. தவம் செய்யச் சென்ற சுக்கிராச்சாரியார் தவத்தை முடித்து விட்டுச் சிவபெருமானிடம் வலிமையான வரங்களைப் பெற்றுவந்தால் என்ன செய்வது என்று பயந்து தனது மகளான ஜயந்தியை அழைத்து, "மகளே, சுக்கிராச்சாரியாரால் எனக்குப் பெரும் ஆபத்து வரலாம்





என்று நான் பயப்படுகிறேன். அதனால் நீ சுக்கிராச்சாரியார் தவம் செய்யும் ஆச்சிரமத்திற்குச் சென்று அவரைத் தவத்தைச் செய்யவிடாது குழப்புவாயாக. அதற்காக நீ அவரை மோகித்து ஏமாற்று" என்றான்.



**சு**க்கிராச்சாரியாரின் கடுமையான தவத்தின் மகிமையால் மகிழ்ந்த சிவபெருமான் அவரின் முன்தோன்றி அவர் கேட்ட வரங்களையெல்லாம் அளித்தார். அதனால் பெருமகிவடைந்த சுக்கிராச்சாரியார் தனக்கு விருப்புடன் சகல சேவைகளையும் செய்த ஜயந்தியை அழைத்து, "பெண்ணே, எனக்குத் தேவையான அனைத்து வேலைகளையும் சிறப்பாகவும், அர்ப்பணிப்புடனும் செய்தமையால் நான் மிக்க மகிழ்வடைந்தேன். அதனால் நீ விரும்பிய வரங்களைக் கேள்" என்றார்.

**அ**வள் அவருக்குப் பணிவிடைகள் செய்யும்போது தகப்பன் கூறியவாறு அவருடன் மிகவும் நெருக்கமாக நடந்துகொண்டமையால் அவள் வெட்கப்படாது துணிந்து சொன்னாள், "முனிவரே, தாங்கள் இன்னும் சில வருடங்களுக்கு என்னுடன் கூடியிருந்து எனக்கு இன்பம் அளிக்க வேண்டும்" என்றாள்.

**அ**வளின் அழகும், நல்ல குணங்களும் ஏற்கனவே சுக்கிராச்சாரியாரை மோகத்துக்குள்ளாக்கின. அதனால் அவள் அவ்வாறு கேட்டதும் மறுபேச்சு இன்றி ஒப்புக்கொண்டார். அந்த மோகம் அவரை அசுரர்களை மறக்கச் செய்தது. அவள் தான் தனது உலகம் என்று நினைத்து அவளுடன் பத்தாண்டுகள் இன்பம் அனுபவித்தார். அப்போது மாயையினால் தன்னை மறைத்துவிட்டார். அதனால் அவரை அசுரர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

**அ**சுரர்கள் தமது குருவான சுக்கிராச்சாரியாரை மூவுலகிலும் தேடியபோதும் அவரைப்பற்றி எதையும் அவர்களால் அறிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் அதனால் பெருந்துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர்.



**அ**தைச் சாதகமாகப் பயன்படுத்தித் தேவர்களின் குருவான பிரகஸ்பதி, சுக்கிராச்சாரியாரின் வடிவை எடுத்து அசுரர்களிடம் சென்றார். அதனால் தமது குரு வந்துவிட்டாரென்று நினைத்து அசுரர்கள் மிகவும் மகிழ்ந்தனர். அதைக்கண்ட பிரகஸ்பதி, "யாரும் அஞ்சவேண்டாம். யுத்தத்தில் பல தந்திரங்களை உபயோகிக்கலாம். பலவாறு அரண்களை அமைத்துத் தேவர்களை ஏமாற்றி வெல்லலாம். நான் அரிய பல வரங்களைச் சிவபெருமானிடமிருந்து பெற்றுவந்துள்ளேன். இனித் தேவர்கள்

எம்மை வெல்ல முடியாது" என்று கூறியபோது அதைக் கேட்ட அசுரர்கள் தமது குருவை வாழ்த்தினர். என்றுமில்லாதவாறு மகிழ்ந்தனர்.

**சு**க்கிராச்சாரியாரும் ஜயந்தியும் கூடி வாழ்ந்து பத்து வருடங்கள் கழிந்தன. அப்போது தான் சுக்கிராச்சாரியாருக்கு அசுரர்களின் நினைவு வந்தது. அதனால் ஜயந்தினியை விட்டுப் பிரிந்து அசுரர்களின் இருப்பிடத்திற்குச் சுக்கிராச்சாரியார் வந்தபோது தன்னைப் போல ஒருவர் அங்கு இருப்பதைக் கண்டார். ஆச்சரியமடைந்த சுக்கிராச்சாரியார் தான் தான் உண்மையான குரு என்று பலமுறை கூறியும் அசுரர்கள் அதை ஏற்றுக் கொள்ளாது அவரின் உருவில் வந்திருக்கும் பிரகஸ்பதி தான் தமது உண்மையான குரு என்று கூறி அவரைத் துரத்தினர். அதனால் கோபங்கொண்ட சுக்கிராச்சாரியார், "உங்களின் துன்பங்கள் ஒருபோதும் தீரமாட்டாது. நீங்கள் எனது சொற்களைக் கேளாமையால் தேவர்களால் கொடுமையாகத் தாக்கப்படுவீர்கள். போரில் உங்களால் வெற்றியடைய முடியாது" என்று சபித்துவிட்டுச் சென்றார்.



**சு**க்கிராச்சாரியாரின் சாபத்தால் அசுரர்கள் பலமிழந்துவிட்டனர். அதுதான் தகுந்த தருணம் என்றுணர்ந்த தேவர்கள் அசுரரைத் தாக்கினர். போரில் தோத்த அசுரர்கள் பிரகலாதனிடம் சென்று தமக்கேற்பட்ட துன்பங்களை விரிவாக எடுத்துக் கூறினர். அதனால் பிரகலாதன் சுக்கிராச்சாரியாரிடம் வந்து, "மதிப்புமிக்க குருவே, தாங்கள் மாயையால் மறைக்கப்பட்டிருந்த போது எம்மவர் மூன்று லோகங்களிலும் உங்களைத் தேடியலைந்த போதும் உங்களை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. அத்துடன் நீங்கள் இல்லாததைப் பயன்படுத்தி தேவர்களின் குருவான பிரகஸ்பதி உங்களது ரூபத்தில் வந்து அவர்களை ஏமாற்றிவிட்டார். இது அவர்களின் குற்றமல்ல" என்று விபரமாகச் சொன்னதும் சுக்கிராச்சாரியார் தனது தவறை உணர்ந்து கொண்டார்.

**அ**தன்பின் சுக்கிராச்சாரியார் அசுரர்களைச் சந்தித்து, "எனது சீடர்களே, தவறு முழுவதும் என்னில்தான் உள்ளது. இப்போது தேவர்களுக்கு அனுகூலமான காலம். அதனால் தான் அவர்கள் பலவான்களாகவும், நீங்கள் பலவீனர்களாகவும் மாறினீர்கள். காலம் என்பது எப்போதும் ஒருவருக்கு மட்டும் உதவி செய்யாது. நல்லகாலம் வரும்போது நல்லவை எல்லாம் தானாகவே நடைபெறும். இப்பொழுது தேவர்களுக்கு அதிஷ்டமான காலம். அதனால் சிறிது பொறுத்துத்தான் இருக்க வேண்டும். அதனால் கவலைப்படாதீர்கள். விரைவில் மகாபலிச் சக்கரவர்த்தி பலமடைவார். அப்போது அவரால் தேவர்கள் அடிமைளாக்கப்படுவர்" என்று சுக்கிராச்சாரியார் அசுரர்களைச் சமாதானப்படுத்த அவர்கள் குருவின் சொல்லை ஏற்றுக் கொண்டனர்.







**சி**லகாலம் செல்ல அசுரர்கள் பலமடைந்து தேவர்களை எதிர்த்துப் போரிட்டு சுவர்க்கத்தைக் கைப்பற்றினர். அதனால் தேவர்கள் உண்ணும் உணவான அவியுணவு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதனால் பசியால் வாடிய தேவர்கள் சுக்கிராச்சாரியாரின் மகனான சண்டாமார்க்கனைத் தமக்கு உணவு அளிக்குமாறு வேண்டினர். அதனால் இரக்கம் கொண்ட சண்டாமார்க்கன் தேவர்களை அழைத்துப் பெரியதொரு யாகம் செய்து தேவர்களுக்கு அவி உணவை வழங்கினான். அதன்பின் தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே நடந்த போரில் அசுரர்கள் தோற்றமையால் அவர்கள் தாம் பாதுகாப்பாக வாழ்வதற்காகப் பாதாளலோகத்திற்குச் சென்றனர்.

## -முற்றும்-